விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 14 செவ்வாய்க்கிழமை (28.06.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 192

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

# விடுதலையாகும் போராளிகளுக்கு மருத்துவ பரிசோதனை அவசியம்

## மர்மமாக உயிரிழப்புகள் தொடர்வதாக சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையாகிய முன்னாள் புலி உறுப்பினர்களில் இதுவரை 103 பேர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்துள்ளார்கள் என தெரிவித்த விடுதலைப் புலிகளின் முன்னாள் தளபதி ஒருவரின் மனைவி, சிறையில் இருந்து புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையாகும் முன்னாள் போராளிகள் அனைவரையும் சர்வதேச மருத்துவர்களால் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## மருத்துவர்களின் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாக நேற்று அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறான முடிவுகளுக்கமைய மருத்துவர்களின் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று மாலை வேளையுடன் கைவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொது மக்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுத்தும்

23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை மாதிரி வினாத்தாள்
கணக்கீடு I

உள்ளே...

## காணாமல் போனோர்; காணி விடுவிப்பு; சர்வதேச விசாரணை
## யாழில் நேற்று பாரிய போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசின் மீதான போர்க குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை கோரியும், காணா

24ஆம் பக்கம் பார்க்க....



## யாழில் திருமண வீடொன்றில் 7 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் 35 பவுண் தங்க நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடி பகுதியில் திருமண வீடொன்றில் இருந்து 7 லட்சம் ரூபாய் பணம் மற்றும் 35 பவுண் தங்க நகை ஆகியவற்றை கொள்ளையிட்டு சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம் நேற்றுமுன் தினம் அதிகாலை வேளை இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள வீட்டில் கடந்த 25ஆம் திகதி சனிக்கிழமை

24ஆம் பக்கம் பார்க்க....

## நிதி மோசடிக் குற்றம்; சஜின்வாஸ் நேற்று கைது
### ஜுலை 5 வரை விளக்கமறியல்



24ஆம் பக்கம் பார்க்க....

## 100 கிலோ கேரள க்ஞ்சா நேற்று விசேட அதிரடிப் படையினரால் மீட்பு
### கைமாற்ற முற்பட்ட இருவர் கைது



23ஆம் பக்கம் பார்க்க....

## தாக்குதல் நடத்த உதவிய 'தமிழ் கைதிகளுக்கு என்னால் மன்னிப்பு வழங்க முடியாது'

(கொழும்பு)



தன் மீது தற்கொலை குண்டு தாக்குதல் நடத்த உதவியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்க தன்னால முடியாதென்று முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில், கடந்த 2006-ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்பு செயலாளர் பயணித்த வாகனம் மீது

24ஆம் பக்கம் பார்க்க....

## தனியார் பஸ் பகிஷ்கரிப்பு நேற்று மாலை கைவிடப்பட்டது
### அமைச்சரின் உறுதிமொழியையடுத்து



24ஆம் பக்கம் பார்க்க....

## கிணற்றினுள் வீழ்ந்து மாணவி மரணம்

(மண்கும்பான்)

யாழ்ப்பாணம் மண்கும்பான் 5ஆம் வட்டாரப் பகுதியில் கிணற்றில் தவறுதலாக வீழ்ந்த மாணவி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 20 வயதுடைய க.பொ.த உயர்தரம் (தனியார்) கற்கும் சோமசேகரம் கோசலா என்ற

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கேள்விக்கான கோருதல்
# மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச்செயலகம் சார்பாக அரசாங்க அதிபர் / மாவட்டச்செயலரால் கீரிமலையில் மீள்குடியேற்றத்திற்காக அமைக்கப்பட வுள்ள 150 வீடுகளுக் கான (அண்ணளவாக 550 சதுர அடி) கட்டடப்பொருள் விநியோகத்திற்காக தகைமையுடையோரிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

2. கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

3. கேள்விதாரர்கள் பொது நிதிச் சுற்றறிக்கை, இல.04/2016 ற்கு அமைவாக இவ் விலை மனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவு களை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழங் கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

4. அக்கறைகொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், கேள்வி ஆவணங்களைப் பரிசோதிப்பதற்கும் மாவட்டச் செயலகத்தில் மேலதிக மாவட்டச் செயலர் (காணி), அலுவலகத்தில் மு.ப. 8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை பெற்றுக்கொள்வதற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினையும், பொருள் விநியோகம் தொடா பான பதிவுசெய்யப்பட்ட வியாபார சான்றிதழ் அல்லது அனுமதிப்பத்திரத் தினை சமர்ப்பித்து 29.06.2016 முதல் 08.07.2016 திகதி வரை பெற்றுக கொள்ளமுடியும்.

6. கேள்விகள் 09.07.2016 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்டச்செயலக பெறுகைக்குழு, மாவட்டசெயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு, இடதுபக்க மேல் மூலையில் கேள்வி அடையாள இலக்கமிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது அரசாங்க அதிபர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் சேர்ப்பிக்கவேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகைதந்த கேள்விதாரர் அல்லது எழுத்துமூலம் அதிகார மளிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.

07. கேள்வி தொடர்பான முற்கூட்டம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணத்தில் 05.07.2016 அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும். கேள்வி கோரலுக் கான மூலப்பொருள் தொகுதி

1. கட்டடப்பொருள் (சீமெந்து, மணல், கம்பிகள், மரங்கள்)
2. கூரை வேலைக்கான பொருட்கள் (மரங்கள், ஓடு, ஆணி, கம்பி)
3. கதவு மற்றும் யன்னல்களுக்கான மூலப்பொருட்கள்
4. வர்ணம் பூசுவதற்கான மூலப்பொருட்கள்
5. மலசலகூடம் அமைப்பதற்கான மூலப்பொருட்கள்
6. மின் இணைப்புச் செய்வதற்கான மூலப்பொருட்கள்

நா.வேதநாயகன்,
அரச அதிபர் / மாவட்டச் செயலாளர்,
யாழ் மாவட்டம்.

(C-5041)



கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தில் சுமார் ஐந்து கோடி ரூபாய் பெறுமதியுடைய 5 கிலோக்கிராம் ஹெரோய்ன் நேற்று முன்தினம் சனிக் கிழமை கைப்பற்றப்பட்டுள்ளதுடன் பாகிஸ்தான் பிரஜை ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.


**விற்பனைக்கு**

Lister 10KVA 3 Cylinder Generator, TATA Buddy அலுவலக நாட்களில் பார்வையிடலாம்

**SOND**

இல.18/10, வைமன் வீதி, யாழ்ப்பாணம்
(எடிசன் அக்கடமி, நல்லூர் அருகாமையில்)

தொடர்பு :
077 224 2394

**ஏல விற்பனை**

எமது பாடசாலையில் 2015 -ம் வருடாந்தக் கணக்கெடுப்பின் போது பாவிக்க முடியாது என அடையாளபபடுத்தப்பட்ட பொருட்கள் 05.07.2016 அன்று ஏலத்தில் விற்கப்படும்.

யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்
நல்லூர், யாழ்ப்பாணம்.

**உளமார்ந்த வாழ்த்துக்கள்**



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்திட்டத்தின் ஊடாக 26.06.2016 அன்று ஆசி மடஅரசடி விநாயகர் மணிமண்டபத்தில் இடம்பெற்ற ராஜா பிளாசாவின் மாதிரிக் கிராமம் பதினைந்து வீட்டுத்திட்ட நன்கொடையாளர் கௌரவிப்பு நிகழ்வின் பொழுது **நன்கொடையாளர், பொன்மனப் பேராளன், கல்விக் கொடையாளன் செங்கைப்புரவோன்**

**திரு. இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் தன்னலங்கருதா மகத்தான சேவையினைப் பாராட்டி

"சிவ தர்மவள்ளல்"
"பொன் மனத்திறலோன்"
"பதி வரோதயன்"

என்னும் பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமைக்கு நாமும் எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**விஸ்ராவிஷன் கலர் லாப்**
347,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

**பாராட்டி வாழ்த்துகிறோம்**

அதிபர் சேவை தரம் III போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து கௌரவ கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் அவர்களிடமிருந்து அதிபர் சேவை தரம் III நியமனத்தைப் பெற்ற எமது கல்லூரி ஆசிரியர்களான



திரு. அருணாசலம் சேந்தன்
BSc with Ed
MED



திரு. நமசிவாயம் செல்வானந்தராசா
BSc (Hons), PGDE, MED



திரு. சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன்
B.A, Sp Trd Maths



திரு. பஞ்சநாதன் சுதர்ஷன்
BA (Hons) English
Spl Trd Eng Literatare



திருமதி மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா
B.Com (Hons) Dip - In - Ed

ஆகியோரை பாராட்டி வாழ்த்துவதுடன் மேன் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று சிறப்புற வாழ வாழ்த்துகிறோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில்.

(5070)

# சித்திரவதைகளைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை

## அரசு மீது மனித உரிமைகள் அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசாங்கம் பதவியேற்று ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் சித்திரவதைகளுக்கு உள்ளாகுபவர்களை பாதுகாப்பதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என "ரைட்டு லைப்" என்ற மனித உரிமைகள் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.**

நாடாளுமன்றில் பல்வேறு புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டிய அந்த அமைப்பின் நிறைவேற்று செயலாளர் பிலிப் திஸாநாயக்க எனினும் சித்திரவதைகளை தடுப்பதற்கு எவ்வித சட்ட ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லையென அவர் கவலை வெளியிட்டார்.

சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டவர்களுக்கு உதவ ஒன்றிணைவோம் என்ற தொனிப்பொருளில் கொழும்பில் செயலமர்வு ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளதாக கூறிய அவர். ஐக்கிய நாடுகள் சபையின் சித்திரைவதைக்கு உள்ளாகுபவர்களுக்கு உதவுவது தொடர்பிலான தினத்தை முன்னிட்டே இந்த செயலமர்வு இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

"ரைட்டு லைப்"மனித உரிமைகள் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த செயலமர்வில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள். ஆர்வலர்கள். கல்விமான்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்கவுள்ளனர். (இ-10)

## பிரித்தானியாவுடன் புதிய உடன்படிக்கை

### பிரதமர் ரணில் அறிவிப்பு



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா விலகுவதற்கு எடுத்துள்ள தீர்மானத்தினால் இலங்கைக்கு ஏற்படவுள்ள பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளும் நோக்கில் பிரித்தானியாவுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சந்தையானது உலகிலுள்ள பாரிய தனிச் சந்தை வாய்ப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிய வேண்டாம் என சீனா. இந்தியா. ஜப்பான் போன்றே இலங்கையும் கூறி வந்ததாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும். தற்போது பிரித்தானியா எடுத்துள்ள தீர்மானத்தினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைத்துக் கொள்ளும் நோக்கில் பிரித்தானியாவுடன் உடன்படிக்கையொன்றை கைச்சாத்திட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## மகிந்த பத்துக் கட்சிகளை அமைத்தாலும் சுதந்திரக்கட்சிக்கு சவாலாக அமையாது

### அமைச்சர் துமிந்த தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பத்துக்கட்சிகள் அமைத்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு அது சவாலாக அமையாது என கட்சியின் பொதுச்செயலாளர். அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

மகிந்த ராஜபக்ஷ ஒரு கட்சி அல்ல. பத்துக்கட்சிகள் அமைத்தாலும் அது சுதந்திரக் கட்சிக்கு சவாலாகவோ அச்சுறுத்தலாகவோ அமையப் போவதில்லை.

கட்சிக்குள் இருந்து கொண்டு கட்சியை அழிப்பதனை விடவும் கட்சியை விட்டு விலகிச் சென்று தனிக்கட்சி அமைப்பது மேலானது. அது தொடர்பில் நாம் எவ்வித தடையையும் ஏற்படுத்தப் போவதில்லை.

ஜனவரி மாதம் 8 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. மகிந்த ராஜபக்ஷக்களை தோற்கடித்த நாள் முதல். மகிந்தவும் அவரது உறவினர்களும் புதிய கட்சி அமைப்பது பற்றி பேசி வருகின்றனர். எனினும் இது வரையில் புதிய கட்சி அமைக்கவில்லை. மகிந்த ராஜபக்ஷ புதிய கட்சி அமைக்கும் வரையில் நாம்பார்த்துக்கொண்டிருக்கின்றோம் என துமிந்த திஸா நாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

## அப்பம் சாப்பிட்ட பாம்புகள் எனது வீழ்ச்சிக்கு காரணம்

### மகிந்த எம்.பி. ஆதங்கம்



குரக்கன் மாவில் செய்த உணவு வகைகளை உண்டு பழக்கப்பட்ட தனக்கு பாம்புகளுடன் அப்பம் சாப்பிட்டு பழக்கம் இல்லையென முன்னாள் ஜனாதிபதியும் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் குளியாப்பிட்டியவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

குரக்கன் மாவில் செய்த உணவு வகைகளை உண்டு பழக்கப்பட்ட எனக்கு பாம்புகளுடன் அப்பம் சாப்பிட்டு பழக்கம் இருக்கவில்லை. அவ்வாறு என்னுடன் அப்பம் சாப்பிட்ட பாம்புகளை அடையாளம் காண முடியாது போனமையே எனது வீழ்ச்சிக்கு முக்கிய காரணமானது.

மேலும் குருநாகல் மல்லியத்தேவ பாடசாலைக்கு மகிந்த மன்றத்தின் கீழ் எனது சொந்த செலவில் நீச்சல் தடாகம் அமைத்துக் கொடுத்திருந்தேன். ஆனால் எனக்கு திறப்பு விழாவிற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

இந்த அரசாங்கத்தினால் பழிவாங்கல் முயற்சிகளுக்காக எம்மை சிறையில் அடைக்க முடியும். ஆனால் மக்கள் மனங்களை சிறையிலடைக்க முடியாது என தெரிவித்துள்ளார். (இ-10)

## கீத் ஹாபரை சந்தித்த புலம்பெயர் அமைப்புகள் பிரேரணை அமுலாக்கம் குறித்து வலியுறுத்தல்

(ஜெனிவா)

இலங்கையின் மனித உரிமை நிலைமை மற்றும் உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையாளர் செயிட் அல் ஹூசைன் வாய்மூல அறிக்கையை ஜெனிவா கூட்டத் தொடரில் வெளியிடவுள்ள நிலையில் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் ஜெனிவாவில் பல்வேறு சந்திப்புக் களை நடத்திவருகின்றன.

குறிப்பாக ஜெனிவா மனித உரிமை பேரவைக்கான அமெரிக்காவின் வதிவிட நிரந்தர பிரதிநிதி கீத் ஹாபரை புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புக்கள் அண்மையில் சந்தித்துள்ளன. இதன் போது பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளன.



விசேடமாக இலங்கையானது ஜெனிவாப் பிரேரணையை முழுமையாக அமுலப்படுத்த வேண்டுமெனவும் உள்ளக விசாரணைப் பொறி முறையில் பொது நலவாய நீதிபதிகளை உள்ளடக்க வேண்டுமெனவும் கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதாவது இலங்கையின் முன்னேற்ற நிலைமை தொடர்பாக மனித உரிமை ஆணையாளர் வாய்மூல அறிக்கையை வெளியிடவுள்ள நிலையிலேயே இவ்வாறான முயற்சிகளும் இடம் பெற்று வருகின்றன.

அத்துடன் புலம்பெயர் அமைப்புக்கள் ஐ.நா. மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து வருகின்றன.

இதன்போது இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கும் வகையில் உதவிகளை வழங்குமாறு கோரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் பரிசளிப்புவிழா நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வண.பிதா நைல்ஸ் ரவிசங்கர் ஆசியுரை வழங்கவுள்ளார்.

பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (செ)

## கமரூனுக்கு ஆதரவு வழங்கியதை ஏற்றுக்கொள்ள முடியாது - டியூ



(லண்டன்)

பிரித்தானியாவில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பின் போது அந்நாட்டு பிரதமர் டேவிட் கமரூனுக்கு ஆதரவு தெரிவித்து, இலங்கை அரசாங்கம் பிரதிநிதிகள் சிலரை அனுப்பி பிரசாரத்தில் கலந்து கொள்ள செய்ததை ஏற்றுக் கொள்ள முடியாது என முன்னாள் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இடதுசாரி மக்கள் முன்னணி கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

இலங்கையில் தேர்தல் ஒன்று நடத்தப்படும் போது, பிரித்தானியா அதில் தலையிட இதன் மூலம் சந்தர்ப்பம் கிடைக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட லங்கா சமசமாஜ கட்சியின் பொதுச் செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, 1953 ஆம் ஆண்டு ஹர்த்தால் நடந்து 63 வருடங்கள் பூர்த்தியாகும் எதிர்வரும் ஓகஸ்ட் 12 ஆம் திகதி நாடு முழுவதும் ஹர்த்தால் நடத்த முழு நாட்டையும் தயார்ப்படுத்த வேண்டும் எனக் கூறியுள்ளார். (செ-11)

## 51 1/2 லீற்றர் கசிப்பு மீட்பு



(கரணவாய்)

துன்னாலை தெற்கு காட்டுப் பகுதியில் பெரும் கசிப்புக் குகையினை முற்றுகையிட்டதில் 51 1/2 லீற்றர் கசிப்பும் பெருமளவு உற்பத்தி உபகரணங்களும் மீட்கப்பட்டதாக பருத்தித்துறை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த சிறிமான் தெரிவித்தார்.

துன்னாலை தெற்குப் பகுதியில் உள்ள காட்டுப்பகுதியில் கசிப்புக் காய்ச்சப்படுவதாக பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல்களின் அடிப்படையில் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை அக் காட்டை சுற்றிவளைத்தனர்.

துன்னாலை தெற்கு ஜே/70 கிராம அலுவலரின் உதவியுடன் மதுவரித்திணைக்களத்தினர் மேற்கொண்ட சோதனையில் அடர்ந்த காட்டுப்பகுதியில் கசிப்புக்காய்ச்சிக் கொண்டிருந்தமை கண்டறியப்பட்டது.

இதன் போது கசிப்பினைக் காய்ச்சிய இருவர் தப்பி ஓடிய நிலையில் அங்கிருந்து 51 1/2 லீற்றர் கசிப்பினையும் உற்பத்திக்குப் பயன்படுத்தும் வயர்கள், மூன்று பெரல்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார். (செ-60)


### வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் மொத்த மற்றும் சில்லறை வியாபார நிறுவனங்களில் முன்னணி நிறுவனமான **நியு சிறி கண்ணன் ஸ்ரோர்ஸ்**சில் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* களஞ்சியக் காப்பாளர் / Store Keeper
  தகைமைகள்
  க.பொ.த (சாதாரண) சித்தி (G.C.E O/L)
* சாரதி / Driver
  தகைமைகள்
  க.பொ.த (சாதாரண) சித்தி (G.C.E O/L)
  கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
* விற்பனையாளர் / Sales Men
  தகைமைகள்
  ஆகக்குறைந்தது க.பொ.த (சாதாரண) சித்தி (G.C.E O/L)
* கணக்கு உதவியாளர் / Account Executive
  தகைமைகள்
  க.பொ.த (உயர்தர) சித்தி (வர்த்தகத்துறை) (G.C.E A/L)
  அல்லது **AAT** - நிலை **II** சித்தி

விண்ணப்ப முடிவு திகதி 01.07.2016
விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி
**KPMG**
756 1/1 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் :- jaffnavacancies@gmail.com
தொடர்புகளுக்கு :- 021 222 7050


## யாழில் இன்று எச்.ஐ.வி பரிசோதனை

### இரகசியமாகவும் இரத்தத்தை பரிசோதிக்க வாய்ப்பு

(கொழும்பு)

தேசிய எச்.ஐ.வி (HIV) பரிசோதனை தினத்தைமுன்னிட்டு இன்றையதினம் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் எச்.ஐ.வி பரிசோதனை மேற்கொள்ளபபடவுள்ளதாக போதனா வைத்திய சாலை பாலியல் தடுப்பு நோய் சிகிச்சைப் பிரிவின் வைத்திய அதிகாரி தாரணி குருபரன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகஅவர்மேலும் தெரிவிக்கையில்,

தேசிய எச்.ஐ.வி (HIV) பரிசோதனைதினம் இன்று 28 ஆம் திகதி "இன்றே பரிசோதியுங்கள்" எனும் தொனிப்பொருளில் அனுஷ்டிக்கபபடவுள்ளது.

வடபகுதியில் எச்.ஐ.வி தொற்று ஏற்படக்கூடிய ஆபத்து அதிகளவில் காணப்படுவதனால் இப் பரிசோதனை செயற்திட்டத்தையும் விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளதிட்டமிட்டுள்ளோம்.

அந்தவகையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சுகாதாரவைத்திய அதிகார பிரிவுகளிலும் விசேடமாக பரிசோதனை முகாம் அமைத்துள்ளோம்.

அதன் ஆரம்ப நிகழ்வு யாழ் போதனா வைத்தியசாலையில் உள்ள பாலியல் தடுப்புநோய் சிகிச்சைப்பிரிவிலும் மார்புநோய் தடுப்பு பிரிவிலும் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேலும் மக்கள் அதிகமாக வாழும் பிரதேசங்களில் அதிகளவான முகாம்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தில் 65 முகாம்கள் அமைக்கவுள்ளது. தன்னார்வத்துடன் மக்கள் பலரும் நேரடியாக வந்து பரிசோதித துக்கொள்ளமுடியும்.

பயிற்றப்பட்ட அலுவலர்கள் மூலம் பரிசோதிக்க விரும்புவர்களுக்கு உடனடியாகவே இரத்தம் பரிசோதிக்கப்படும்.

இலகுவான பரிசோதனை மேற்கொள்வுள்ளப்படவுள்ளது. சந்தேகத்துடன் இருப்பவர்கள் பாதுகாப்புடன் உறுதிப்படுத்திகொள்ளமுடியும்.

இதற்கென மருத்துவபீட மாணவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கு விசேட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கையில் பூரணமாக இரகசியம் பேணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பரீட்சை பெறுபேற்றினை பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட கலை முதற் தேர்வு 2012 பரீட்சை பெறுபேறுகள் கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை வெளியாகியுள்ளன.

இதன்படி இன்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன்மீள்பரீட் சார்த்திகள் உடனடியாக மீள் பரீட்சைக்கு விண்ணப்பக்கலாம என யாழ். பல்கலைக் கழக திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பா.நமலதாசன் அறிவித்துள்ளார். (செ)


### பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி தவநிசா மயூரன்

விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில்
வெற்றிபெற்று 2016.06.28 இன்று கல்வி அமைச்சர் கௌரவ
**அகிலவிராஜ் காரியவசம்**
அவர்களிடமிருந்து பரிசுபெறும்
எமது பாடசாலையின் மாணவி
**செல்வி தவநிசா மயூரன்**
அவர்களையும் அவருக்கு பயிற்சியளித்த ஆசிரியர்களையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-5043)

பாடசாலைச் சமூகம் - மு/குமுழமுனை ம.வி



### கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் கடமைபுரியும்
**திரு. சி. விக்னகுமார்**
அவர்களின் தந்தையார்
**பழனி சிவப்பிரகாசம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன் ஆத்மசாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

**மேல் நீதிமன்றம்,**
குடியியல் மேன்முறையீட்டு
-மேல் நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

**மேல் நீதிமன்ற நீதிபதிகள்,**
**பதிவாளர், கணக்காளர்,**
**உத்தியோகத்தர்கள்.**

(5064)

## நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

**கலைமாமணி**

**Dr.S.S. சர்மா குருஜி**

(5039)

**076 725 6024**

நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்.



**அன்பு வாசகர்களே!**

**உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்**

நீங்கள் அறிந்த

- செய்திகள்
- புகைப்படங்கள்
- நிகழ்வுகள்
- பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல

**076 636 3378**

Viber


## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் மஹோற்சவம் நடைபெறும்.

8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பரத் திருவிழாவும் மறு நாள் காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (இ-5)


**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603,
021 567 1532


# மரண அறிவித்தல்

## அமரர் விஸ்ணானந்தமூர்த்தி சௌந்தரநாயகி



கட்டைவேலி கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி வி.சௌந்தரநாயகி 26.06.2016 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற பொன்னையா மனோன்மணியின் அன்பு மகளும் விஸ்ணானந்தமூர்த்தியின் (ஓய்வுபெற்ற களஞ்சியப் பொறுப்பாளரும் அகில இலங்கையின் சமாதான நீதவானும்) அன்பு மனைவியும் முருகதாசன், முரளிதாசனின் அன்புத் தாயாரும் இளநங்கையின் மாமியாரும் ஹரித்தா, இனியனின் அப்பம்மாவும் பொன்மயிலாம்பிகை, அருந்தவநாயகி, ஆனந்தநாயகியின் அன்புச் சகோதரியும் கணநாதன், தட்சணாமூர்த்தி, கந்தசாமி, அருந்தவநாயகி, அன்னம்மாவின் மைத்துனியும் அருள்பிருந்தா, சுஜாத்தா, நரேந்திரன், தர்மினி, நிறைஞ்சனா, கந்ததாஸ், சிவதாஸ், சாந்தி, சுமதி, ஜெயந்தி, காலஞ்சென்ற அருள்ஈசன் ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 29.06.2016 நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று வீரக்கனி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


முருகபதி, கட்டைவேலி
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.
T.P No-021 226 4200

தகவல்:
கணவன்
க.விஸ்ணானந்தமூர்த்தி

(இ-5040)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களான



ஆகியோர் கடந்த 09.05.2016 தொடக்கம் இலங்கை அதிபர் சேவை தரம் III இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளனர். இவர்களை மனதார வாழ்த்துவதோடு இவர்கள் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

(இ-5037)

**நலன்புரிக் கழகம், கிளி/கிளிநொச்சி மத்திய ம.வி.**

# ஓராண்டு நினைவு அஞ்சலி



அமரர் **வைரமுத்து சிவமணி (தரணியா)**

மலர்வு:- 1943.03.15 உதிர்வு:- 28.06.2015

உதிரத்தால் உருவாக்கி
உயிர் வாழ அமுதூட்டி
எதிலுமே வென்றிட
அகரமதை தந்தாயே
முதிர்வான வேளையிலும்
மதியுரைக்கும் தெய்வமே
மதியகன்று ஓராண்டு
மறைந்தாலும் மறவோமே...

பொன்மணி நிலையம்,
அல்வாய் வடக்கு
பருத்தித்துறை.

குடும்பத்தினர்
021 561 1474
077 939 6713

(5046)

# இராசி பலன்

28.06.2016

(ஆனி 14, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
அட்டமி காலை 8.58 மணிவரை
ரேவதி பின்னிரவு 4.07 மணிவரை
சுபநேரம் 10.25-11.55 மணிவரை
இராகுகாலம் 2.55-4.25 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | சூரி புத சுக் |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம்<br>இரவு 4.02மணிக்கு<br>மேடம்-சந். | | |
| | | | குரு ராகு |
| | சனி | செவ் | |

**மீனம்** — நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**மேடம்** — தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்க முற்படுவீர்கள், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**இடபம்** — புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** — தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள்.

**கும்பம்** — ஆரோக்கியத்தில் கவனம் தேவை, பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும், நல்லவர்களின் தொடர்புகள் நன்மை தரும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** — முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், திடீர் பயணங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** — பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், இழுபறியாக இருந்த காரியங்கள் கைகூடும்.

**சிம்மம்** — சஞ்சலங்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு** — உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், திட்டமிட்ட காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர்.

**விருச்சிகம்** — கல்யாணக்கனவுகள் நனவாகலாம், தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது வாழ்வில் புகழ் கூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** — போட்டிகளைச் சமாளித்து வெற்றி காண்பீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ் கூடும், ஆரோக்கியம் சீராகும்.

**கன்னி** — தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

# காணாமற் போனவர்களின் உண்மை நிலையை அறிய சர்வதேச விசாரணையை உடனடியாக நடத்த வேண்டும்

## ஐ.நா.ஆணையாளருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

**வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உண்மை நிலையை அறிவதற்கு சர்வதேச விசாரணையே வேண்டும் என்பதை வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்ஸ்தானிகர் செயிட் அல்-ஹுசைனிடம் சேர்ப்பிக்குமாறு யாழ். கோவில் வீதியில் அமைந்துள்ள யூ.என்.எச்.சி.ஆர்.அலுவலகத்தில் மகஜர் ஒன்றை நேற்றைய தினம் கையளித்துள்ளனர்.**

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு,கிழக்கில் வாழ்கின்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவுகளாகிய நாங்கள் எம் உறவுகளை கடந்த பல ஆண்டுகளாக தேடியும் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மை இது வரைக்கும் எங்களுக்கு கிடைக்கவில்லை.

நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற இந்த அரசினாலும் இது தொடர்பான காத்திரமான எந்தவொரு செயற்பாடுகளையும் முன்னெடுக்கவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரியப்படுத்துகின்றோம். அத்தோடு கடந்த காலங்களிலே சர்வதேச விசாரணை ஒன்றே எங்களுக்கு நீதியை பெற்றுத்தர முடியும் என்று கூறி இருந்தோம். ஆனாலும் கடந்த வருடத்திலே ஜெனிவாவில் நடைபெற்ற 31ஆவது மனிதவுரிமை பேரவையிலே கலப்புநீதி பொறிமுறையை தங்களுடைய பரிந்துரையிலே கூறியிருந்தீர்கள். இலங்கை அரசும் அதை ஏற்றுக்கொண்டது.தற்போது இலங்கை அரசானது ஜெனிவா மனித உரிமைகள் அவையில் கொடுத்த வாக்குறுதிகளை மீறி உள்ளக நீதி பொறிமுறை ஒன்றை உருவாக்கத் திட்டம் கொண்டுள்ளது.

இலங்கை அரசினாலே முன்னெடுக்கின்ற உள்ளக பொறிமுறையிலே எங்களுக்கு எவ்வித ஈடுபாடும் நம்பிக்கையும் இல்லை என்பதோடு இப்பொறிமுறை எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பான உண்மையையோ நீதியையோ குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டணை பெற்றுதரப்போவதில்லை.

காணாமற் போனோரின் உறவுகள் ஆகிய நாங்கள் பின்வரும் கோரிக்கையை முன்வைத்துள்ளோம். அதாவது சர்வதேச நீதிப்பொறிமுறை அல்லது சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய நீதிப் பொறிமுறைகள் எமக்கு வேண்டும்,அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்ட காணாமற் போனவர்களின் அலுவலகம் பாதிக்கப்பட்ட எங்களுடைய கருத்துகளைஉள்ளடக்கியதாகஅமைக்கப்பட வேண்டும்,தலைமை அலுவலகம் வடகிழக்கிலே அமைக்கப்பட வேண்டும், விசாரணை அதிகாரிகளாக பாதிக்கப்பட்ட எங்கள் தரப்பில் இருந்து நியமிக்கப்பட வேண்டும், விசாரணைகள் யாவும் தமிழ் மொழியில் இடம்பெற வேண்டும்,எங்களுடைய உறவுகள் தொடர்பான உண்மை, நீதிமற்றும் குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை முதன்மைப்படுத்தப்பட வேண்டும். அதன் பிற்பாடு நல்லிணக்கம்,இழப்புகள் தொடர்பாக பேச முடியும்,சாட்சிகளை பாதுகாப்பதற்கான பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும், தற்போது நடைமுறையில் இருக்கின்ற இராணுவத் தலையீடும் மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் போன்றன முற்றும் நிறுத்தப்பட வேண்டும்என அந்தமகஜரில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)



வடமாகாண முதலமைச்சரின் பணிப்புரையின் கீழ் கொடிகாமம் கச்சாய் கிராமத்தில் ஒரு கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் பாலர் பாடசாலை பராமரிப்பு இல்லத்தின் கட்டட வேலைப்பாடுகளை பார்வையிடுவதற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட்ட குழுவினர் அண்மையில் சென்றபோது...

## மணல் ஏற்றியவர் தப்பியோட்டம்

அனுமதிப்பத்திரமின்றி சிறியரகஉழவியந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்றவர் பொலிஸாரைக் கண்டதும் தப்பியோடியதுடன் வாகனம் பொலிஸாரிடம் சிக்கியது. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வடமராட்சி மணற் காடு வீதி ஊடாக பருத்தித்துறை பொலிஸாரின் ரோந்து நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போதே மேற்படி சிறியரக உழவியந்திரம் மணலுடன் சிக்கியதுடன் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப் பட்டுள்ளது எனவும் தெரிய வந்துள்ளது. (இ-5-60)




## அகில இலங்கைக்கம்பன் கழகம் நடத்தும் ஸ்ரீராமநாம கானாமிர்தம் இசை ஆராதனை

அகில இலங்கைக் கம்பன் கழகம் 2016 ஆம் ஆண்டிற்கான இசைவேள்வி யினை எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்ட மேல் மண்டபத்தில் ஸ்ரீதியாகராஜ சுவாமிகளின் இசை ஆராதனையுடன் ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிகழ்வில் நம்நாட்டு, தமிழ்நாட்டுப் பிரபல இசைக் கலைஞர்கள் அனைவரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தியாகராஜ சுவாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் ஐந்தினையும் இசைக்கக்கூடிய இசைக் கலைஞர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்க முடியும். ஓரிரண்டுகீர்த்தனைகளை இசைக்கக்கூடிய இசைக் கலைஞர்களும் கூட இந்நிகழ்வில் கலந்து கொள் ளலாம்.

மிருதங்கம், வயலின், கெஞ்சிரா, புல்லாங்குழல், வீணை ஆகிய வாத்தியங்களை இசைக்க வல்ல கலைஞர்க ளையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் கம்பன் கழகம் கேட்டுள்ளது.

இசை ஆராதனையில் கலந்து கொள்ள விரும்பும் கலைஞர்கள் அனைவரும் 5 ஆம் திகதி மாலை 5 மணியளவில் மண்டபத்திற்கு வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்ந்து 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை தினமும் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 5 மணி முதல் நம் நாட்டின் பிரபல மங்கள வாத்தியக்கலைஞர்கள்கலந்து கொள்ளும் நாத அரங்கும் இந்தியப் பாடகர்கள் கலந்து கொள்ளும் இசைப் பேரரங்கும் நடைபெறவுள்ளன.

இவ்விழாவில் நடைபெறவுள்ள நாத அரங்குகளில் நம் நாட்டைச் சேர்ந்த பிரபல மங்கள இசைக் கலைஞர்களான ஆர். சுந்தரமூர்த்தி, எம்.பி. பாலகிருஷ்ணன், ஆர்.கேதீஸ்வரன், பி. ரஜீவன், பி.எஸ். பாலமுருகன், பி.குமரன், கு.நாகதீபன், வி. சித்தார்த்தன், வி.பிரதித்தன் ஆகியோரும் அவர் தம் குழுவினரும் கலந்து இசைவிருந்து அளிக்கவுள்ளனர்.

நாத அரங்குகளைத் தொடர்ந்து நடைபெறவுள்ள இசைப் பேரரங்குகளில் தமிழகத்தைச் சேர்ந்த புகழ்பெற்ற இசைக் கலைஞர்களான மல்லாடி சகோதரர்கள், அபிஷக் ரகுராம், ஓ.எஸ்.தியாகராஜன், ரி.என்.சேஷகோபாலன், மும்பை ஜெயஸ்ரீ ஆகியோரது இசைக் கச்சேரிகள் நடைபெறவுள்ளன.

எவ்வித கட்டணமுமின்றி நடைபெறவுள்ள இந்நிகழ்வுகளில் அனைத்து ரசிகர்களும் கலந்துகொள்ளு மாறும் இட நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக குறித்த நேரத்திற்கு முன்னரான வருகையை உறுதி செய்யுமாறும் கம்பன் கழகம் அறிவித்துள்ளது.(இ

## இயக்குநர் சபை தெரிவு

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தெரிவு நீண்ட இழுபறியின் பின்னர் தெரிவு செய்யப்பட்டது.மேற்படி இயக்குநர்சபைத் தெரிவிற்கான கூட்டம் நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்பமாகியது.

வழமையைவிட 300வரையான அங்கத்தவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இயக்குநர் சபை தெரிவு செய்வதில் நீண்ட இழுபறி, கருத்து மோதல்கள் இடம்பெற்றன.

இதனால் வாக்களிப்பின் மூலம் இயக்குநர் சபை தெரிவு செய்யப்பட ஏற்பாடானது. 300 பேரில் 159 பேரே வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அதில் 76 பேர் நேரம் பிந்தியமை காரணமாக இடை நடுவில் சென்றுவிட்டனர். மிகுதிப் பேரே வாக்களித்தனர்.

இதில் 37 வாக்குகளைப் பெற்ற மகேந்திரன் என்பவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.காலை 9 மணிக்கு ஆரம்பமான கூட்டம் பெரும் இழுபறியின் பின்னர் பிற்பகல் 3 மணியளவில் நிறைவு பெற்றது. (இ-60)

## சங்காபிஷேகம்

(கொழும்புத்துறை)

அளவெட்டி பத்தானை அருள்மிகு சமுண்டிகா சக்தி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய அலங்காரஉற்சவத்தில்நாளை மறுதினம் 30 ஆம் திகதி வியாழக்கிழமை சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து ஜூலை மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை பொதுத் திருவிழாவும் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பொதுப்பொங்கலும் நடைபெறும். (இ-5,51)



தெய்வத் தமிழிசைக் கவிஞர் தேசமான்ய இராசையா-குகதாசன் ஆற்றிய கலை இலக்கிய சமூகப் பணிகளைப் பாராட்டி தேசோதய தீபம் என்ற விருது வழங்கப்பட்டது.யாழ்.சர்வோதயதலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இவ்விழாவில் சர்வோதய நிறுவனத்தின் செயலர் கலாநிதி ஆரியரத்னா இவ் விருதினை வழங்கி வைத்தார்.

நாளை (29.06.2016) சுழிபுரம்-பறாளாய்
ஈசுர விநாயகரின் கொடியேற்றத் திருவிழா
நேரம்:- முற்பகல் 11 மணியளவில்
சோழியநரான்-பிறைசூடிக்குரு
(5059)

# போதைப்பொருள் குற்றச்செயல்கள் தொடர்பில் 2015 ஆம் ஆண்டில் 67 ஆயிரம் பேர் கைது

(கொழும்பு)

**போதைப் பொருள் குற்றச்செயல்கள் தொடர்பில் கடந்த ஆண்டு 67 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 35 வீதமானவர்கள் ஹெரோயின் போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் எனவும், ஏனைய 65 வீதமானவர்களில் பெரும்பான்மையானவர்கள் கஞ்சா போதைப் பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.**

போதைப்பொருள் குற்றச் செயல்கள் தொடர்பில் கைதானவர்களில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


மேல் மாகாணத்தில் 61 வீதமானவர்களும். தென் மாகாணத்தில் 10 வீதமானவர்களும் ஊவா மாகாணத்தில் 4 வீதமானவர்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாட்டின் மொத்த சனத்தொகை விகிதாசார அடிப்படையில் நோக்கினால் ஒரு இலட்சம் பேரில் 329 பேர் போதைப் பொருள் குற்றச் செயல்களின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் குற்றச் செயல்களின் அடிப்படையில் வெளிநாட்டுப் பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் ஆபத்தான ஔட தங்கள் தொடர்பான திணை க்களம் ஆகியன நடத்திய ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (இ-10)

## இலங்கை மதமற்ற இராச்சியமாக இருக்க வேண்டிய அவசியமில்லை

### விமல ரத்னதேரர் தெரிவிப்பு



இலங்கை மதமற்ற இராச்சியமாக இருக்க வேண்டிய அவசியமில்லை என பேராசிரியர் பெல்லன்வில விமல ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

காலியில் வித்தியாலோக்க மஹா பிரிவென் அகுரெட்டியே நந்தசார நினைவு நூலகக் கட்டட அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்ற போது அண்மையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பு அமைப்பது குறித்து அண்மையில் கருத்து கோரப்பட்ட போது இலங்கை மத இராச்சியமாக இருக்க வேண்டுமென கருத்து முன்வைக்கப்பட்டிருந்தது.

கடந்த நாட்களில் அரசியல் சாசனம் அமைப்பது குறித்து பலரிடமும் கருத்துக்கள் கோரப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இலங்கை மதங்களற்ற இராச்சியமாக அறிவிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருப்பதனை நான் பார்த்தேன். இந்த பரிந்துரையானது எந்த வகையிலும் இலங்கைக்கு பொருந்தக்கூடியதல்ல. எனவே இது குறித்து அனைவரும் பேச்சுவார் த்தை நடத்தி எதிர்காலத்தில் தீர் மானம் ஒன்றை எடுக்க வேண்டும்.

சர்வதேச ரீதியில் இலங்கைக்கு பௌத்த மதம் தொடர்பில் முக்கிய இடமுண்டு.

எமது அரசியல் அமைப்பில் பௌத்த மதத்தை போதித்து பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் இது தேவையற்றது என சில தரப்பினர் கூறுகின்றனர். எனினும் தற்போதைய அரசியல் அமைப்பில் மத இராச்சியம் என்பது பற்றி கூறப்படவில்லை. மதங்களற்ற இராச்சியம் எனவும் கூறப்படவில்லை. இலங்கையில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிப்பது வேறு தரப்பினருக்கு அநீதி இழைப்பதாக அமையாது. அனைத்து மத பீடங்களும் இதனை ஏற்றுக் கொள்கின்றன.

எனவே இலங்கையில் பௌத்த மதத்தின் இருப்பினை மாற்றியமைக்க எந்தக் காரணத்திற்காகவும் இடமளிக்கக் கூடாது என பேராசிரியர் பெல்லன்வில விமலரத்ன தேரர் தெரிவித்துள்ளார். (இ-10)

## மகிந்த பங்கேற்ற நிகழ்வில் தயாசிறிக்கு நேர்ந்த அவமானம்

நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையின் கீழ் நேற்று முன்தினம் குளியாப்பிட்டி மற்றும் பண்டு வஸ்நுவர ஆகிய இடங்களில் இடம்பெற்ற நிகழ்வுகளின் போது மேடையேறிய அமைச்சர் தயாசிறி ஜயசேகர அவமானப்பட நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மக்கள் இவருக்கு எதிராக ஊ..ஊ என்று கோஷங்களை எழுப்பியுள்ளதுடன், "உனக்கு முதுகெலும்பு உள்ளதா? என அவரை பார்த்து கேள்வி எழுப்பியுள்ளனர். இதனையடுத்து கோபத்துடன் அமைச்சர் மேடையை விட்டு கீழ் இறங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சரை சூழ்ந்து கொண்டு தாக்குவதற்கும் பொதுமக்கள் தயாராகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்ற நிலையில், இதன் போது குறித்த இடத்திற்கு உடனடியாக வந்த பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ. சாலிந்த திசாநாயக்க ஆகியோர் அமைச்சரை அழைத்துக்கொண்டு சென்று அவரது வாகனத்தில் ஏற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவரது வாகனத்திற்கு பின் னாலும் மக்கள் சென்று கோஷங்களை எழுப்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)


## வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

பதிவு இல- ஏ/465

**பால் பதனிடும் தொழிற்சாலையின் வியாபார முகாமைத்துவத்தை வாடகை அடிப்படையில் வழங்குதல்**

எமது சங்கத்திற்கு சொந்தமான மரக்காரம்பளை வவுனியாவில் அமைந்துள்ள பால் பதனிடும் தொழிற்சாலையையும் அதனுடன் இணைந்த காணி மற்றும் தொழிற்சாலை பயன்பாட்டுக்கான வாகனங்கள் என்பவற்றையும் பத்து வருட காலத்துக்கு வாடகைக்கு வழங்குவதற்கு சமாசத்தின் பொதுச் சபை தீர்மானித்துள்ளது.

கீழ்வரும் நிபந்தனைகள் , அடிப்படைகளின் கீழ் தகுதியான ஆர்வமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட பண்ணையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

- இவ்வொப்பந்தம் வவுனியா கா.வ.கூ.ச .சமாசத்தின் கூட்டுறவுக் கட்டமைப்பு வலுவான நிலையினை அடைந்து பால் பதனிடும் தொழிற்சாலையை சுயாதீனமாக சமாசத்தினால் இயக்குகின்ற நிலைக்கு கொண்டு வருவதற்கான ஆற்றல் மேம்படுத்தும் நோக்கத்தினைக் கொண்டது.
- பத்துவருட ஒப்பந்த காலத்தில் முதல் ஐந்து வருடங்களுக்கு குறித்த பால் பதனிடும் தொழிற்சாலையின் முதாமைத்துவம் மற்றும் கிடைக்கப்பெறும் பலன்கள் முழுமையாக நூறு வீதம் (100%) வாடகைக்குப் பெறுபவருக்கு உரித்தாய் இருக்கும் என்பதுடன் இரண்டாவது ஐந்து வருடங்களுக்கு வாடகைக்குப் பெறுபவரும் , வவுனியா கா.வ.கூ.ச.சமாசமும் இணைந்த பங்காளர் தத்துவத்தினை ஒத்த ஓர் இணைச் செயற்பாட்டின் அடிப்படையில் இணைந்து செயற்படுவதாக அமைந்திருக்கும் .மேலும் முதல் ஐந்து வருடத்தின் இறுதியில் அடுத்துவரும் இரண்டாவது ஐந்து வருடத்துக்கான இலாபப் பகிர்வினை சமபங்காளர் தத்துவத்தின் அடிப்படையில் தீர்மானிப்பதாக இருக்கும்.10 வருட முடிவில் வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் , பால் பதனிடும் தொழிற்சாலையை முழுமையாக பொறுப்பேற்று சுயமாக செயற்படும்.
- **இவ் ஒப்பந்தப்படியான முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கு வாடகை முற்பணமாக ரூபா ஐம்பத்தைந்து இலட்சம் எதிர்பார்க்கப்படுகிறது.**
- **பால் பதனிடும் தொழிற்சாலையை முதல் ஐந்து வருட காலத்திற்கு பயன்படுத்துவதற்கு மாத வாடகையாக ரூபா ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் (110,000) வீதம் ஒவ்வொரு மாதமும் 7 ஆம் திகதிக்கு முன்னராக 5 வருடங்களுக்கு வவுனியா கால் நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு வழங்கப்பட வேண்டும்.**
- **வாடகைக்கு பெற்றுக் கொள்பவர் வேறு நபர்களுக்கு /நிறுவனங்களுக்கு உப ஒப்பந்தம் மூலமோ அல்லது வேறு வகையிலோ கை மாற்ற முடியாது.**
- **வட மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களமும் இணைந்து வடக்கில் பால் சந்தைப்படுத்தலுக்கான ஒரு வலையமைப்பினை உருவாக்கிப் பால் நுகர்வை ஊக்குவிக்கும் திட்டமொன்றை முன்னெடுத்திருப்பதால் , இத் திணைக்களங்களிற்கு பொறுப்பான அமைச்சின் அங்கீகாரம் பெற்ற வியாபாரக் குறியுடன் உற்பத்திப் பொருள் சந்தைப்படுத்தப்படல் வேண்டும்.**
- வாடகை ஒப்பந்தம் முடிவுறுத்தல் தொடர்பிலும் பால் பதனிடும் தொழிற்சாலை தொடர்பான திருத்தம், பராமரிப்பு, ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தெளிவான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படும்.

மேற் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின்பால் தங்களின் தெளிவான இயலுமையை பூரணமாக வெளிப்படுத்தி எதிர்வரும்15.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியதாக கீழ்க் குறிப்பிடப்படும்முகவரிக்கு விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேற்படி விடயம் தொடர்பில் வவுனியா கால்நடை வளர்ப்போர் கூ.ச.சமாசத்தின் இயக்குநர் சபையின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதும் ஆகும்.

தலைவர்,
வவுனியா கால்நடை வளர்ப்பாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
இல.27, பஜார் வீதி,வவுனியா. (சி-5038)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா:32<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:HNDA/கணக்காளர்<br>தொ.இ: B/4568 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 25சூரிசெவ் 9 இல்<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/5664 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 35செவ் 7 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:BSc, MSc/பொறியியலாளர் லண்டன் PR<br>தொ.இ: B/369 | பிறப்பு: 1965 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5666 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 35சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:HNDA/வங்கியாளர்<br>தொ.இ: B/5186 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 35சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்BBA, BIT/கணக்காளர்<br>தொ.இ: G/5668 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 14<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/1107 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 21செவ் 7 இல<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்BSCIT/பொறியியலாளர்<br>தொ.இ: G/5671 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

# தனியார் பேருந்து சேவைகள்

## நேற்று முதல் பணிப்புறக்கணிப்பு

### பயணிகள் திண்டாட்டம்



கிளிநொச்சி

தனியார் போக்குவரத்துச்சேவைகள் வடக்கு மாகாண ரீதியில் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்துள்ளதாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ள நிலையில் கிளிநொச்சியில் தனியார் பேருந்து எவையும் சேவையில் ஈடுபடுத்தப்படாமையினால் அரச உத்தியோகத்தர்கள்.பாடசாலை மாணவர்கள்.மக்கள் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

தனியார் பேருந்திற்கு 60 வீதமும். இலங்கை அரச போக்குவரத்துச் சேவை பேருந்திற்கு 40 வீதமும் என்ற விகிதா சாரத்தில்கடந்த 3 வருடகால முயற்சியின்பின் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டது.

எனினும் இலங்கை அரச போக்குவரத்துச் சேவை இதற்கு ஒத்துழைப்பு வழங்காத நிலையில் அத்துமீறிய சேவையை மேற்கொண்டு வருவதாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தவிடயம். தொடர்பில் மத்திய அரசுடனும். மாகாண அரசுடனும் சந்திப்புக்களை ஏற்படுத்தியும் எந்தவித பலனும் இது வரை எட்டப்படவில்லை எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பயணிகளின் பாதுகாப்பான பயணத்தை கருத்திற்கொண்டு நேற்று திங்கட்கிழமை முதல் தீர்வு கிடைக்கும் வரை வடக்கு மாகாணம் முழுவதும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொள்ளவுள்ளதாக வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எமக்கு தீர்வு கிடைக்கும் வரை வடக்கு மாகாணம் முழுவதும் சேவைப் புறக்கணிப்பை மேற்கொள்ளவுள்ளோம் என்று ஒட்டப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாகாணங்களுக்கிடையிலான தனியார் பேருந்து சேவைகளை புறக்கணிக்குமாறு தாம் கேட்டுக்கொள்ளவில்லையென வடக்கு மாகாண தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (2-312)




# பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில்

## அமைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

### நொச்சிமோட்டை கமக்கார அமைப்பு கோரிக்கை

மத்திய அரசாங்கத்தினால் வவுனியாவில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையத்தை அமைப்பதற்கு ஓமந்தை பொருத்தமான இடம். தாண்டிக்குளம் பொருத்தமற்ற இடம் என நொச்சிமோட்டை கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் வவுனியா. நொச்சிமோட்டை கமக்கார அமைப்பினர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வவுனியா மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கான சரியான இடமாக நாமும் எமது மக்களும் விரும்பும் ஒரே இடம் ஓமந்தை. மாறாக வவுனியா நகரப்பகுதியில் உள்ள தாண்டிக்குளம் பகுதியில் நிறுவப்படுமாக இருந்தால் கழிவகற்றல். போக்குவரத்து பிரச்சினை. மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு என பல்வேறு வகையான பிரச்சினைகள் ஏற்படும். எனவே. தாண்டிகுளத்தை தெரிவு செய்யாது ஓமந்தை பகுதியை விவசாயிகளாகிய எமது மக்களின் விருப்பப்படி தெரிவு செய்து பொருளாதார மத்திய நிலையத்தை அமைக்க வேண்டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-250)

# அனைத்து மதத்தினரும்

## பங்கேற்ற இப்தார் நிகழ்வு



அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து நடத்திய சிறப்பு இப்தார் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 6 மணிக்கு முள்ளியவளை ஹிஜ்ராபுரம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

கரிதாஸ் கியூடெக் வன்னி நிறுவனத்தினுடைய சமாதான நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு இயங்கி வரும் சகவாழ்வுக்கான சர்வமத ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் ஹிஜ்ராபுரம் மாமூலை, முள்ளியவளை வடக்கு கிராமங்களை சேர்ந்த சமாதான நல்லிணக்க குழுக்கள் மற்றும் சகல மதத்தினரையும் சார்ந்த சுமார் 400 பேர் வரையில் பங்குபற்றி வந்தனர்.

இந்நிகழ்விற்கு சர்வமத ஒன்றிய தலைவர் கி.தவராசா தலைமை தாங்கினார். (2-310)







முள்ளியவளை அம்பாள் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப்போட்டி கடந்த 26 ஆம் திகதி மு/கலைமகள் மகாவித்தியாலய முன்றலில் நடைபெற்ற போது... (படங்கள்: வற்றாப்பளை செய்தியாளர்)

# ஜெனிவாவில் உறுதியளித்ததை அரசு நிறைவேற்றவில்லை;

## தொடர்ந்தும் செயற்பட்டால் மாற்று நடவடிக்கை குறித்து ஆராய்வு

### ஐ.நா. ஆணையாளருக்கு தமிழ் சிவில் சமூகம் அறிக்கை

இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் உறுதியளித்ததை இதுவரை நிறைவேற்றவில்லை என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளருக்கு சுட்டிக்காட்டியுள்ள தமிழ் சிவில் சமூக அமையம். இலங்கை அரசு இவ்வாறு தொடர்ந்தும் செயற்பட்டால் மாற்று நடவடிக்கை குறித்து ஆணையாளர் ஆராய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்ற நிலையில் நாளையதினம் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை ஆணையர் சமர்ப்பிக்கவுள்ளார். இது தொடர்பில் ஆணையாளருக்கு தமிழ் சிவில் சமூகம் அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

நிலைமாற்று நீதி பொறிமுறைகளை அமைக்க முன்னர் எத்தகைய பொறிமுறைகளை அமைக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசித்து அப்பொறிமுறைகள் அமைக்கப்பட வேண்டுமென தீர்மானம் வலியுறுத்துகின்றது. இது தொடர்பில் செயலணி ஒன்று அமைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்த நிலையில் அதனது பணிகள் முறையாக ஆரம்பிக்கக்கூடாத சூழலில் வெறுமனே ஜெனிவா கூட்டத்தொடரை மனதிலிறுத்தி பாதிக்கப்பட்ட மக்களுடன் முறையான கலந்தாலோசனைகள் இல்லாமல் காணாமற் போனோர் அலுவலகம் ஒன்றை அமைப்பது தொடர்பிலான சட்ட மூலம் ஜூன் 22 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்தாலோசனையை நடத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் அக்கறையற்ற போக்கையே இது காட்டுகின்றது. காணாமற்போனோர் இறந்துவிட்டனர் என்று பிரதமரே தெரிவித்துள்ள சூழலில் இவ்வலுவலகமும் வெறும் கண் துடைப்பா என நாம் அஞ்சுகிறோம்.

தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயல்பு நிலை உருவாக்கல் தொடர்பிலான விடயங்களிலும் திருப்திகரமான முன்னேற்றங்கள் இல்லை. காணி விடுவிப்பு அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றாலும் புதிய காணி அபகரிப்பு முயற்சிகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. காணி விடுவிப்பு தொடர்பான முழு அளவிலான கொள்கை பார்வை அரசாங்கத்திடம் இல்லை. காணிகள் விடுவிக்கப்பட்டாலும் இராணுவம் விலக்கிக் கொள்ளப்படாமல் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களும் தொடர்ச்சியாக இராணுவ சூழலாகவே தொடர்ந்து இருக்கின்றன. அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் முன்னேற்றம் இல்லை. பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குவது தொடர்ந்து பேச்சளவிலேயே உள்ளது. அதற்காக மாற்றீடாக கொண்டு வரப்படவுள்ள சட்டம் அதனை விட மோசமாக அமையக்கூடும் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து நடைமுறையில் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. அச்சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்கின்றன. இக்கைதுகள் முன்னாள் போராளிகள் தொடர்பிலேயே கூடுதலாக இடம்பெறுகின்றன. அவர்களது மீள் சமூக ஒருங்கிணைவுக்கு இக்கைதுகள் பெரும் தடையாக விளங்குகின்றன. வெள்ளை வான் கடத்தல்கள் தொடர்வது தொடர்பிலும் மனித உரிமை அமைப்புக்கள் ஆவணப்படுத்தியுள்ளன.

அரசாங்கம் தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட குற்றங்கள் இழைக்கப்படவில்லை என்றும் தனிநபர் குற்றங்கள் மட்டுமே இழைக்கப்பட்டதாகவும் கூறி வருகின்றது. இது ஐ. நா. மனித உரிமை ஆணையர் அலுவலகத்தின் அறிக்கையோடு வெளிப்படையாக முரண்படும் நிலைப்பாடாகும். தாம் அமைக்கவிருக்கும் விசாரணைப் பொறிமுறைகள் நோக்கம் இராணுவத்தின் நற்பெயரை காப்பாற்றுவதே என்று அரசாங்கம் கூறிவருகிறது. இது அமைக்கப்படக்கூடிய நிலைமாற்று நீதி பொறிமுறைகள் எட்டும் முடிவுகளை முன்கூட்டியே நிர்ணயிக்கும் நோக்கம் கொண்டவையாக தெரிகின்றன. அவற்றின் மீதான நம்பிக்கையை குறைக்கும் தன்மையானவை.

சர்வதேச சமூகத்தின் வெவ்வேறு அங்கங்களை அவர்களின் நலன் சார்ந்து முறையாகக் கையாள்வதன் மூலம் ஜெனிவா தீர்மானத்தின் கடப்பாடுகளில் இருந்து அவற்றை நிறைவேற்றாமலேயே தப்பித்துக் கொள்ளலாம் என இலங்கை அரசாங்கம் எண்ணுகின்றது. சர்வதேச சமூகத்தின் பலமான அங்கங்கள் அண்மைக் காலத்தில் மிதமிஞ்சிய புகழ்ச்சியையும் ஆதரவையும் புதிய அரசாங்கத்திற்கு வழங்கி வருவதாவது ஜெனிவா தீர்மானம் தொடர்பிலான கட்டுப்பாடுகளில் இருந்து தூர விலகிப்போக இலங்கையை ஊக்கப்படுத்துமே அன்றி அவற்றை நிறைவேற்ற ஊக்கப்படுத்தமாட்டா. ஐ. நா. மனித உரிமை பேரவையின் அங்கத்துவ நாடுகள் இலங்கை தனது கட்டுப்பாடுகளை நிறைவேற்றுகின்றதா? என்பது தொடர்பான மதிப்பீட்டில் தமது நலன்சார் அரசியலை கலக்க விட்டாலும் ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் அத்தகைய அரசியலை தனது மதிப்பீட்டில் கவனம் கொள்ளாதிருப்பது மிகவும் முக்கியமானதாகும். ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் தனது வாய்மொழி மூல அறிக்கையில் இலங்கை அரசாங்கம் தனது கட்டுப்பாடுகளை மீறும் இடங்களை அழுத்தம் திருத்தமாக அடையாளம் காட்ட வேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம். அத்துடன் தொடர்ந்து இலங்கை அரசாங்கம் இத்திசையில் பயணித்தால் ஜெனிவா அறிக்கையின் பரிந்துரைகளை ஆக்கபூர்வமாக நிறைவேற்ற செய்யப்பட வேண்டியதென்ன என்பது தொடர்பிலும் தீர்க்கமான ஆலோசனைகளை பேரவையின் அங்கத்துவ நாடுகளுக்கு ஆணையாளர் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-4)

# உயரதிகாரிகள் கூறினால் நாம் வெளியேறுவோம்

## பரவிப்பாஞ்சான் மக்களுக்கு இராணுவத்தினர் உறுதிமொழி





(கிளிநொச்சி)

கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் இராணுவ வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர் நேற்றுக் காலை காணியிலுள்ள இராணுவத்தினரிடம் கடிதம் ஒன்றை சமர்ப்பித்து தமது காணிகளைப் பார்வையிட அனுமதியையும் கோரியிருந்தனர்.

கடிதத்தை பெற்றுக்கொண்ட இராணுவ முகாம் மேஜர் இக்கடிதத்தை தமது உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைப்பதாக உறுதியளித்தார். அத்துடன் காணியினை சென்று பார்வையிட முடியாது எனவும் அனுமதி கொடுப்பதற்கு தமக்கு அதிகாரம் இல்லை என்றும் கூறி அனுமதி மறுக்கப்பட்டது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

காணி உரிமையாளர்கள் 2015.10.05 அன்று பரவிப்பாஞ்சானில் ஒருபகுதி காணி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் இன்னமும் 54 குடும்பங்களின் காணிகள் விடுவிக்கப்படாமல் உள்ளதாகவும் அதில் இப்பொழுது 20 குடும்பங்கள் கிளிநொச்சியில் தாம் வாழ்வதற்கு காணிகள் இல்லாமல் வாடகைக்கும் உறவினர்களது வீடுகளில் இருப்பதாகவும் குறைந்தது அந்த 20 குடும்பங்களின் காணிகளையாவது முதலில் விடுவித்து தருமாறும் இதற்கான பதிலை ஒரு வாரத்துக்குள் அறியத்தருமாறும் குறித்த கடிதத்தில் கோரி உள்ளதாக தெரிவிக்கின்றனர்

குறித்த கடிதத்தினை பார்வையிட்ட இராணுவ முகாம் மேஜர் இக் கடிதத்தினை தமது உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி ஒரு வாரத்திற்குள் அவர்கள் தகவல் தந்தால் உங்களுக்கு அறியத்தருவேன் என கூறினார். அத்தோடு தாம் இவ் இடத்தில் தற்காலிகமாக இருப்பதாகவும் தமக்கும் உங்களுக்கும் எவ்வித பிரச்சினைகளும் இல்லை எனவும் தமது உயர் அதிகாரிகள் இன்று இக்காணியில் இருந்து வெளியேறுங்கள் என கூறினால் இன்றே இக்காணிகளை நாம் உங்களிடம் கையளிப்போம் என தெரிவித்தார்.

இதற்கு காணி உரிமையாளர்கள் எவராயினும் இதற்கான நல்ல பதிலை ஒருவாரத்திற்குள் பெற்றுத்தாருங்கள். பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையில் செல்வதாகவும் அவ்வாறு இல்லை என்றால் அடுத்ததாக நாம் அனைவரும் நீங்கள் காணியினை விடுவிக்கும் வரைக்கும் இம் முகாம் முன்றலிலே இருப்போம் எனவும் தெரிவித்தனர். (2-312-15)






# பொருளாதார மத்திய நிலையம் வடக்கு நோக்கி நகர வேண்டும் சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு

வடக்குக்கான பொருளாதார மத்திய நிலையம் வடக்கு நோக்கி நகர்ந்து மாங்குளம் அல்லது ஓமந்தை பகுதியிலேயே அமைக்கப்பட வேண்டும். அதற்காக நாம் முதலமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்திற்கு என அமைக்கப்படும் பொருளாதார மத்திய நிலையம் வடக்கு நோக்கியே நகர்த்தப்பட வேண்டும். அதுவே எமது இருப்பையும் தக்க வைக்க உதவும். தம்புள்ள பகுதியில் அமைக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையம் காரணமாக எமது வடபகுதி வளங்கள் தென்பகுதி நோக்கி நகர்ந்து சென்றுள்ளன.

எமது மக்கள் தம்புள்ளைக்கு சென்று தமது உற்பத்திகளை சந்தைப்படுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டது. இந்நிலையில் வடபகுதிக்கு ஒரு பொருளாதார மத்திய நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ள நிலையில் அது வடக்கின் ஐந்து மாவட்டங்களையும் மையப்படுத்தியதாக மாங்குளம் பகுதியிலேயே அமையப்பெறுவது சிறந்ததாகும். அதுவே வடக்கு- கிழக்கின் மையம். வடபகுதியின் ஐந்து மாவட்டங்களிலும் இருந்து எமது விவசாயிகள், உற்பத்தியாளர்கள், மீன்பிடிப்பாளர்கள், வர்த்தகர்கள் என பலரும் வந்து செல்ல இலகுவான பகுதி ஆகும். வடக்குமாகாண சபையின் செயற்பாடுகள் கூட எதிர்காலத்தில் மாங்குளத்தை மையமாகக் கொண்டே அமையப்பெறவுள்ளது. முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் காலப்பகுதியில் கூட மாங்குளமே வடக்கு. கிழக்கின் மையமாக விளங்கியிருந்தது. வடக்கிற்கான பொருளாதார மையம் இது என்பதை எல்லோரும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆனால் வவுனியா மக்கள் அதனை தமது பகுதிக்கு வர வேண்டும் என விரும்புவது தவறல்ல. அதுதான் அவர்களது விருப்பமாக இருந்தால் இந்த மையத்தை வடக்கு நோக்கி நகர்த்தி ஓமந்தையில் அமைப்பது தான் சிறந்தது.

அதன் மூலம் ஓமந்தைப் பகுதியை உப நகரமாக அபிவிருத்தி அடையச் செய்ய முடியும். எமது நிலங்களையும் பாதுகாக்க அது உதவும். வடக்கின் பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் வடக்கு முதலமைச்சர் தான் முடிவெடுக்க வேண்டும். வடக்குக்கான திட்டத்தை அவரது விருப்பத்தின் படி அமைக்க வேண்டும். அதற்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எனவே, வடக்கு மாகாண முதலமைச்சருக்கு பொருளாதார மத்திய நிலைய விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கி எமது மக்களுக்கான பொருளாதார வளத்தை பெற்று அபிவிருத்தி நோக்கி நகர அனைவரும் உதவவேண்டும் எனத் தெரிவித்தார். (2-250)

# முகமாலையில் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை ஜப்பான் குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்






கிளிநொச்சி முகமாலை பகுதியில் மேற்கொள்ளப்படும் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் சென்று ஜப்பானிய குழுவினர் பார்வையிட்டனர்.

குறித்த பகுதிக்கு நேற்று முற்பகல் 10 மணியளவில் விஜயம் மேற்கொண்ட குழுவினர், ஜப்பானிய நிதியுதவியுடன் டாஸ் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டனர்.



குறித்த பகுதியில் மீட்கப்பட்ட கண்ணி வெடிகள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதை அடுத்து, கண்ணிவெடி அகற்றும் முறை தொடர்பில் குறித்த குழுவினருக்கு விளக்கமளிக்கப்பட்டது. தொடர்ந்து குறித்த பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் கண்ணிவெடி அகற்றப்படும் பகுதியை நேரில் சென்று குறித்த குழுவினர் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (2-15)

# வடக்கு மாகாண சபை தீர்மானத்தை நிறைவேற்ற கோரி வவுனியாவில் உணவு தவிர்ப்பு போராட்டம்






வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பில் வடக்கு மாகாண சபை எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தக் கோரியும் பொருளாதார மத்திய நிலையத்தை தாண்டிக்குளத்தில் அமைக்குமாறு வலியுறுத்தியும் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா தினச் சந்தைக்கு முன்னால் நேற்றுக்காலை ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த போராட்டத்தை உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கம் ஏற்பாடு செய்தது.

வவுனியா உள்ளூர் விளைபொருள் விற்பனை சந்தைக்கு முன்பாக இடம்பெற்றுவரும் இந்த உண்ணாவிரத போராட்டத்தில், உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்கள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், கே. கே. மஸ்தான், வடக்கு மாகாணசபை உறுப்பினரான ஏ.ஜெயதிலக, சிறிடெலோ கட்சியின் செயலாளர் நாயகம் கா. உதயராசா உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த போராட்டத்திற்கு உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் தொடர்ந்தும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாகவும் உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, பொருளாதார மத்திய நிலையத்தினை அமைப்பதற்கான இடத்தினை ஒதுக்கீடு செய்வது தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை

## வலியுறுத்தி யாழில் நேற்று பாரிய போராட்டம்

## காணாமற்போனோருக்கு பொறுப்புக்கூறவும்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை கோரியும், காணாமற்போனோருக்கு உரிய பொறுப்புக்கூறலை வழங்கக்கோரியும், அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்யக்கோரியும், இராணுவ வசமுள்ள பொதுமக்களுடைய காணிகளை விடுவிக்கக்கோரியும் நேற்றையதினம் யாழில் பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.









(படங்கள் உ.சாளின்,பொ.சோபிகா)


























நேற்று முற்பகல் பத்து மணியளவில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன் பாக முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தை அடுத்து நல்லூரில் அமைந் துள்ள ஐ.நா. அலுவலக த்திற்கு சென்று மக ஜர் கையளிக்கப்பட்ட தோடு தொடர்ச்சியாக யாழ். மாவட்ட செயலகம், வட க்கு மாகாண ஆளுநர் ஆகி யோருக்கும் மகஜர் கைய ளிக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக் கள் கலந்து கொண்டிருந் ததோடு, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, ஈழமக்கள் ஜனநாயக கட்சி உட்பட பல கட்சிகளும் பொது அமைப் புக்களும் கலந்து கொண் டிருந்தன. (இ-4)

# கூட்டமைப்புடன் பேச அரசு தயார்

## அமைச்சர் லக்ஸ்மன் தெரிவிப்பு



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உண்மையை உணர்ந்து அரசாங்கத்தின் மீதுநம்பிக்கை வைத்து உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைக்கு தயார் என தெரிவித்திருக்கின்றமை வரவேற்கத்தக்கது எனவும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அடிப்படைவாதத்திற்கு அரசு ஒருபோதும் அடிபணியாது என்றும் மிதவாத கொள்கையுடையவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம்.எப்போதும் தயார் எனவும் சபை முதல்வரும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்துடன் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் உத்தியோகபூர்வ பேச்சு வார்த்தைகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராவது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அமைச்சர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், நாட்டில் இனப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளிவைத்து நிரந்தரமான அரசியல் தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்காக கடந்த ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு கூட்டமைப்பும் தமிழ் மக்களும் ஆதரவு வழங்கி வெற்றி பெறச் செய்தார்கள்.

அதேபோன்று ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் பிரதமராவதற்கு ஆதரவு வழங்கினார்கள்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இந் நாட்டு மக்கள் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக ஆணை வழங்கினார்கள்.

எனவே இனப்பிரச்சினைக்கு வெளிப்படைத்தன்மையான தீர்வை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலாகும்.

நாட்டில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் அடிப்படைவாத சக்திகள் உள்ளன. அதற்கு நாம் ஒருபோதும் அடிபணியமாட்டோம், அதற்கு இடமளிக்கவும் மாட்டோம்.

இனங்களுக்கிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி அனைவருக்கும் சமத்துவம் என்ற அடிப்படையில் தீர்வை பெற்றுக் கொடுப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

எனவேதான் அரசாங்கத்தின் முன்னகர்வுகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் அதன் எதிர்க்கட்சி தலைவரும் இரா.சம்பந்தன் அரசுக்கு ஆதரவை வழங்குகின்றனர்.

சம்பந்தனும் கூட்டமைப்பும் இன்று உண்மையை புரிந்து கொண்டு தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நல்லாட்சியுடன் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

சர்வதேசம் இன்று இலங்கையின் தேசிய நல்லிணக்கத்திற்காக அரசாங்கம் படிப்படியாக முன்னெடுக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

அத்தோடு ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவிலும் கடந்த காலங்களில் இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.


ஆனால் இன்று அனைத்தும் எமது நாட்டுக்கு சாதகமாக அமைந்துள்ளன.

சிங்கள பௌத்தர்களுக்கு முன்னுரிமை வழங்குவதைப் போன்று தமிழ், முஸ்லிம் உட்பட அனைவருக்கும் சம அந்தஸ்து வழங்குவதே அரசின் நோக்கமாகும்.

எனவே 1950களிலிருந்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை தட்டிக் கழித்ததன் காரணமாகவே 30 வருடகால யுத்தம் நாட்டில் தலையெடுத்தது. அதேபோன்று மகிந்த ராஜபக்ஷவின் கடந்த கால ஆட்சியில் நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைக்கப்பட்டு மனித உரிமைகள் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு "காட்டு தர்பாரே" இடம்பெற்றது. ஆனால் இன்றைய ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் தலைமையிலான நல்லாட்சியில் நாட்டில் அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஒரேநாளில் ஒன்பது கொலைகள்; தமிழகம் அமைதிப் பூங்காவா?

## கருணாநிதி கேள்வி



ஒரே நாளில் 9 கொலைகள் நடைபெறுவதுதான் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்வதன் அடையாளமா என்று திமுக தலைவர் கருணாநிதி கேள்வி எழுபபியுள்ளார்.

இது குறித்து திமுக தலைவர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில்,

ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்த முதல்வர் ஜெயலலிதா சட்டம், ஒழுங்கைப் பொறுத்தவரை தமிழகம் ஒரு அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்து வருகிறது என்று பேசியிருக்கிறாரே? முதல்வர் ஜெயலலிதாவின் உரை வெளிவந்த அதே நாள் நாளேடுகளில் வந்துள்ள சில செய்திகளைக் கூற வேண்டுமானால், சென்னை கல்லூரி மாணவர் உட்பட இரண்டு பேர் வெட்டிக் கொலை, தளி அருகே வீட்டில் 4 பேரைக் கட்டிப் போட்டு 25 பவுண் நகை, 26 ஆயிரம் ரூபாய் கொள்ளை ராயப்பேட்டையில் பூட்டிய வீட்டுக்குள் தாய், 3 மகள்கள் கொடூரக் கொலை, சென்னை நுங்கம்பாக்கம், புகையிரத நிலையத்தில் அதிகாலையில் பெண் பொறியாளர் சுவாதி கொலை, கோடம்பாக்கம் அருகே இளைஞர் ராஜா கழுத்து அறுக்கப்பட்டு கொலை, அம்பத்தூரில் கிணற்றில் தள்ளி தாய் கொலை என்று 9 கொலைகள் ஒரே நாளில் நடைபெற்றுள்ளன.

விருதுநகர் மாவட்டத்தில், திருத்தங்கலில் உள்ள பெருமாள் கோவில் திருவிழா பத்திரிகையில் அமைச்சர் பெயர் இடம் பெறவில்லை என்பதற்காக அந்த கோவில் செயல் அலுவலரை அதிமுகவினர் தாக்கி அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாராம். அதிமுக ஆட்சியில் சட்டம் ஒழுங்கைப் பொறுத்தவரை அமைதிப் பூங்காவாகத் திகழ்வதற்கு இவைதான் அடையாளமா? என கருணாநிதி கேள்வியெழுப்பியுள்ளார். (இ-10)

# ஐ.எஸ்.கொலைப்பட்டியலில் 4000 பேர் புதிதாக இணைப்பு

## 285 இந்தியர்களும் உள்ளடக்கம்

சிரியாவில் பலவீனமடைந்து வரும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு புதிய கொலைப்பட்டியல் ஒன்றை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதில் 285 இந்தியர்கள் உட்பட உலகம் முழுவதும் உள்ள 4 ஆயிரம் பேர் இடம் பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இதுகுறித்து வெளியாகியுள்ள தகவலின் படி கொலைப்பட்டியலில் இடம் பெற்றுள்ள பெயர்களில் பல பேர் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் கனடா நாட்டைச் சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது.

இந்த பட்டியலில் இடம் பெற்றுள்ளோரின் பெயர் மட்டுமல்லாது, முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரியும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பட்டியலில் அரசு அதிகாரிகள் பிரபலமான இந்திய மென்பொருள் பொறியாளர்கள், நாட்டை பாதுகாக்கும் இராணுவ அதிகாரிகள் உட்பட பலர் இடம்பிடித்துள்ளனர்.

இந்த தகவலை ஐ.எஸ் அமைப்பு குறுந்தகவல் மூலமாகவும் பரப்பியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் இது போன்ற ஒரு பட்டியலை ஐக்கிய சைபர் க்ரைம் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்

# 15 வயதில் தாயான சிறுமி

15 வயது சிறுமி ஒருவருக்கு திடீரென கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டதனை அடுத்து அவரின் தந்தை சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். இதன்போது அச்சிறுமி குழந்தை ஒன்றினை பிரசவித்துள்ள சம்பவமொன்று நாவலப்பிட்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. குறித்த சிறுமி சில காலங்களுக்கு முன்னர் கண்டிப் பகுதியில் மிளகுத் தூள் பொதிசெய்யுமிடத்தில் வேலை செய்த சந்தர்ப்பத்தில் இளைஞன் ஒருவருடன் காதல் தொடர்பு கொண்டிருந்துள்ளார். ஆனால் குறித்த இளைஞனின் தொலைபேசி எ்ண்ணைத் தவிர வேறு எந்த விபரங்களையும் அறிந்திருக்கவில்லையென பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. மேற்படி சம்பவம் குறித்து சிறுமியின் பெற்றோரால் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டினையடுத்து மேலதிக விசாரண்ணகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# அமெரிக்காவின் 99 வீத பாதுகாப்பு தொழில்நுட்பத்தை இந்தியா பயன்படுத்திக் கொள்ளலாம்-ஒபாமா அறிவிப்பு


(வோஷிங்டன்)

அமெரிக்காவின் 99 சத வீத பாதுகாப்பு தொழில் நுட்பங்களை இந்தியா பயன்படுத்திக் கொள்ள ஒபாமா நிர்வாகம் அனுமதி வழங்கி உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடியின் சமீபத்திய அமெரிக்க பயணத்தின்போது, அந்நாட்டு ஜனாதிபதி- ஒபாமாவை சந்தித்து பேசினார். அப்போது இரு நாட்டு தலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையில், பாதுகாப்பு துறையில் இந்தியா அமெரிக்காவின் மிகப்பெரிய கூட்டாளி என்ற அங்கீகாரம் வழங்கப்பட்டது.

ஆசியா முழுவதற்கும் பாதுகாப்பு வழங்கும் நாடாக உருவாக இந்தியாவுக்கு இராணுவத் திறன்களை கூட்ட அமெரிக்கா உறுதி பூண்டுள்ளது என்று ஒபாமா நிர்வாகம் அறிக்கை வெளியிட்டது.

இதைத் தொடர்ந்து தற்போது, அமெரிக்காவின் 99 சதவீத பாதுகாப்பு தொழில் நுட்பங்களை இந்தியா பயன்படுத்திக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக ஒபாமா நிர்வாக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். அவர் கூறுகையில், நட்பு நாடுகளுடன் கொண்ட உடன்படிக்கைக்கு இணையாக, இனி இந்தியாவும் அமெரிக்காவின் 99 சதவீத பாதுகாப்பு



தொழில்நுட்பங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இது தனிப்பட்ட அந்தஸ்தாகும். முறையான ஒப்பந்தம் செய்து கொண்ட நட்பு நாடுகளுக்கு மட்டுமே இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதை தவிர்த்து, இந்த அனுமதியை பெறும்முதல் வெளிநாடு இந்தியா மட்டுமே' என கூறி உள்ளார்.

இதன் மூலம், இரட்டை பயன்பாடு தொழில் நுட்பங்களை இந்தியா எந்த உரிமமும் இன்றி அமெரிக்காவிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மறுக்கப்படும் ஒரு சத வீதம் குறித்து அதிகாரி கூறுகையில், ஏற்றுமதி தொழில் நுட்பங்கள் அனைத்தும் வழங்கப்படமாட்டாது. இது இந்தியாவுக்கு மட்டுமல்ல.

அமெரிக்க கொள்கையின்படி, இத்தகைய தொழில் நுட்பங்களை யாருடனும் நாங்கள் பகிர்ந்து கொள்வதில்லை என்றார். (இ-10)

(நேற்றைய தொடர்ச்சி....)

33) கீழே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்/நிகழ்வுகளுக்கு ஆரம்பப்பதிவுப் புத்தகத்தையும் மூல ஆவணத்தையும் குறிப்பிடுக.

| | கொடுக்கல் வாங்கல்/ நிகழ்வு | ஆரம்பப்பதிவுப் புத்தகம் | மூல ஆவணம் |
|---|---|---|---|
| A | காசு விற்பனை | | |
| B | நடைமுறை அல்லாத சொத்து கடன் விற்பனை | | |
| C | சென்மதியாளருக்கு செலுத்திய காசு | | |
| D | வருமதியாளரின் திரும்பல் | | |

34) பொதுப்பேரேட்டில் உள்ள கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக்கணக்கில் பதிவதற்காக பொது நாளேட்டில் இருந்து பெறக்கூடிய நான்கு வகை நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

35) தர்சிகா வணிக நிறுவனத்தின் நடைமுறைக்கணக்கு தொடர்பாக 2016 ஜுன் 30 இல் வங்கிக்கூற்று வங்கி மீதி 260000 செலவு மீதியாகக் காணப்படும் போது காசேட்டின்படி வங்கி மீதி ரூபா 190000 வரவு மீதியாக காணப்பட்டது. இவ்வேறுபாட்டிற்கான மாற்றப்படாத காசோலை தவிர்ந்த ஏனைய காரணங்கள் வருமாறு,

காசேட்டின் வங்கி நிரலில் சீராக்கப்படாத வங்கிக் கூற்றில் காணப்பட்ட

| | |
|---|---|
| வங்கிக் கட்டணம் | ரூ.6000 |
| பங்குலாபம் | ரூ.20000 |
| காசேட்டு வங்கி நிரலில் வரவில் பதிந்து கொடுத்த கழிவு | ரூ.10000 |
| வசூலிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி | ரூ.36000 |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

அ.மாற்றப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா

ஆ.மேற்காட்டப்பட்ட தகவல்களின் சீராக்கம் தொடர்பாக தேறிய சொத்தில் ஏற்படும் மாற்றம்/ தாக்கம் ரூபா

36) பின்வரும் விடயங்கள் இலாப நோக்கமற்ற நிறுவனமொன்றில் காணப்படும் கணக்கு தொடர்பானது. இவை ஒவ்வொன்றும் சொத்துக்கணக்கா, பொறுப்புக்கணக்கா, உரிமைக் கணக்கா, வருமானக்கணக்கா அல்லது செலவுக்கணக்கா எதுவெனக் குறிப்பிடுக.

A- பொது நன்கொடை................ B- கட்டட நிதி நன்கொடை................

C-திரண்ட நிதி................................ D-நிலுவைச் சந்தா.................

E-பதிவழிப்புச் சந்தா................. F-வருமான மிகை................

37)வரையறுக்கப்பட்ட முகமது பொதுக்கம்பனியொன்றின் நிதி நிலைமைக் கூற்றில் A,B,C,D,E,F ஆகிய எழுத்துக்களால் குறிக்கப்பட்டுள்ள பின்வரும் தகவல்களைச் சமர்ப்பிப்பதில் பிரயோகிக்கக் கூடிய கணக்கீட்டு எண்ணக்கருக்களை குறிப்பிடுக.

வரையறுத்த முகமது பொதுக்கம்பனியின்........................A

31.3.2016 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று ...................B

ரூபா 000 ...........................C

நடைமுறை அல்லாத சொத்து.............

ஆதனம்,பொறி மற்றும் உபகரணம் XXX }D

நடைமுறைச்சொத்து...............

இறுதி இருப்பு XXX...............E

வியாபார வருமதியாளர் XXX...............F

காசும் காசுக்கு சமனானவை XXX

XXX

கணக்கீட்டு எண்ணக்கருக்கள்(06 தருக)

38) இலங்கையில் பின்பற்றப்படும் "நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டகத்தின் படி" சொத்தொன்றினது மூன்று குணாதிசயங்களைக் குறிப்பிடுக.

39) சுகந்தினி உற்பத்தி நிறுவனத்தின் 2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுடன் தொடர்பான பின்வரும் தகவலைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| | ரூபா 000 |
|---|---|
| உற்பத்திக்கு கிடைப்பனவாக இருந்த மூலப்பொருட்களின் கிரயம் | 200 |
| நேர் ஊழியக்கிரயம் | 300 |
| மொத்த உற்பத்திகிரயம் | 1000 |
| விற்பனை விநியோக மேந்தலைக்கிரயம் | 230 |

இவ்வாண்டின் ஆரம்ப மூலப்பொருள் இருப்பிலும் இறுதி மூலப்பொருள் இருப்பானது ரூபா 30000 குறைவாக உள்ளது. இவ்வாண்டின் சராசரி மூலப் பொருள் இருப்பு ரூபா 40000 ஆக இருந்தது. முலப்பொருள் தொடர்பாக ஆண்டுக்காலப்பகுதியில் ஏற்பட்ட அழிவு கிரயம் ரூபா 20000

31.03.2016 இல் முடிவடைந்த வருடத்திற்கு பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

அ. உற்பத்தி மேந்தலைக்கிரயம் ரூபா

ஆ.கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களின் கிரயம் ரூபா

இ.பயன்படுத்திய மூலப்பொருட்களின் கிரயம் ரூபா

ஈ.முதன்மைக்கிரயம் ரூபா

40) கணக்கீட்டில் அண்மைக்காலம் ஏற்பட்டுள்ள நவீன போக்குகள் மூன்றினைக் குறிப்பிடுக?

41)சண்முகி,விதுசா ஆகியோர் இலாப நட்டத்தை சமனாகப் பகிரும் பங்குடமை ஒன்றில் 2016.04.01 இல் விதுசா பங்குடமையை விட்டு இளைப்பாறும்போது இத்தினத்தில் வினுஜா புதிய பங்காளராக ரூபா 360000 மூலதன பங்களிப்பாக செலுத்தி பங்குடமையில் சேர்ந்து கொண்டார்.சண்முகி,வினுஜா ஆகியோரின் புதிய இலாப நட்ட விகிதம் முறையே 3:2 ஆகும்.31.03.2016 இல் பங்குடமையின் உரிமையாண்மை

சண்முகி ரூபா 600000

விதுசா ரூபா 400000

விதுசா இளைப்பாறும் போது வினுஜா சேரும் போது நன்மதிப்பானது மதிப்பிடப்பட்டு மூலதன கணக்கின் ஊடாக சீராக்கப்பட்டது.

| | சண்முகி | விதுசா | வினுஜா |
|---|---|---|---|
| 31.03.2016இல் மூலதனம் (ரூபா) | 450000 | 300000 | - |
| 01.04.2016இல் மூலதனம் (ரூபா) | 420000 | - | 240000 |

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

அ.நிறுவனத்தின் மதிப்பிடப்பட்ட நன்மதிப்பு ரூபா

ஆ.நன்மதிப்பு சீராக்கத்திற்கான நாட்குறிப்பேட்டு பதிவு

இ.இளைப்பாறும் தினத்தில் விதுசாவிற்குச் செலுத்தியமொத்த தொகை ரூபா

42)வரையறுக்கப்பட்ட கஜீதரன் பொதுக்கம்பனியானது 20000 சாதாரண பங்குகள் பங்கொன்று ரூபா150 விலையில் வழங்கியது.கம்பனியில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பிக்கும் போது பணம் செலுத்தத் தேவையில்லை என்றும் அவர்களின் சம்பளத்தில் கழிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைவாக 30000 பங்குகளுக்கு விண்ணப்பம் கிடைத்தது. இதில் ஊழியர்கள் 9000 பங்குகளுக்கும் ஏனையோர் 21000 பங்குகளுக்கும் விண்ணப்பித்தனர். ஊழியரின் விண்ணப்பங்கள் முழுமையாக ஒதுக்கப்படுவதுடன் ஏனையோரின் விண்ணப்பங்கள் விகிதாசார ரீதியில் ஒதுக்கப்பட்டு மேலதிக பணம் திருப்பிச் செலுத்தப்பட்டது. பின்வருவனவற்றுக்கான நாற்குறிப்புப் பதிவுகளை எழுதுக.(விளம்பல் தேவை இல்லை)

1) அ.விண்ணப்பத்துடன் பெற்ற காசு (ஊழியர்களின் விண்ணப்பம் உட்பட)

ஆ.பங்குகளுக்கான ஒதுக்கம்

2)கம்பனிக்கு மேற்கூறப்பட்ட பங்கு வழங்கல் செலவாக ரூபா 80000 ஏற்பட்டுள்ளது எனக்கொண்டு மேற்கூறப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் காரணமாக ஆண்டுக்காலத்தில் தேறிய சொத்தில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு ரூபா

43) பொருத்தமான நிரல்களின் கீழ் "✓" எனக்குறியிடுவதன் மூலம் பொருட்களினை விற்பனை செய்யும் கம்பனியொன்றின் பின்வரும் கொடுக்கல் வாங்கலிற்கான காசுப் பாய்ச்சல்களை LKAS 07 (காசுப்பாய்ச்சல் கூற்று) இன்படி எவை செயற்பாட்டு,முதலீட்டு அல்லது நிதியிடல் நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல்கள் என வகைப்படுத்துக.

| | கொடுக்கல் வாங்கல் | நடவடிக்கைகள் | | |
|---|---|---|---|---|
| | | செயற்பாடு | முதலீடு | நிதியிடல் |
| A | வேறு கம்பனிகளின் பங்குகள் கொள்வனவு | | | |
| B | பங்குதாரருக்கு செலுத்திய பங்கு இலாபம் | | | |
| C | பெற்ற பங்குஇலாபம் | | | |
| D | குத்தகைக்கு செலுத்திய வட்டி | | | |

44) LKAS 8 (கணக்கீட்டுக் கொள்கைகள்,கணக்கீடுகளின் மதிப்பீடுகள் மற்றும் வழுக்களில் ஏற்படும் மாற்றங்கள்) இதன்படி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

அ.கணக்கீட்டுக்கொள்கை மாற்றம், மதிப்பீடுகளின் மாற்றம் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே இவ்விரண்டு உதாரணங்கள் தருக.

கணக்கீட்டுக்கொள்கை மாற்றம், கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றம்

ஆ.நிறுவனமொன்று தனது கணக்கீட்டுக்கொள்கைகளை மாற்றக்கூடிய இரண்டு சூழ்நிலைகளைத் தருக.

45)வரையறுத்த அஜித் பொதுக்கம்பனியொன்றின் கணிப்பிடப்பட்ட பின்வரும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு கீழே தரப்படும் வினாக்களுக்கு விடையளிக்குக.

| விபரம் | ஆண்டு 31 மார்ச் | |
|---|---|---|
| | 2015 | 2016 |
| கடன் விற்பனை ரூபா | 1200000 | 1200000 |
| வருமதியாளர் சுழற்சி விகிதம் | 10 தடவை | 12 தடவை |
| வருடத்தில் வேலை நாட்கள் | 360 | 360 |

அ.2016 ஆண்டுக்காலத்தில் கடன்பட்டோர் புரள்வு விகிதம் அதிகரித்தமைக்கான காரணம் ஒன்றை குறிப்பிடுக

ஆ.ஒவ்வொரு ஆண்டிலும் வருமதியாளர் பணம் செலுத்தும் காலத்தினை (நாட்களில்) தருக.

2015 ஆம் ஆண்டு , 2016ஆம் ஆண்டு

46)கீழே தரப்பட்டுள்ள அம்சங்கள் தொடர்பில் உரிமைப்பங்கு வழங்கல், நிறுத்தி வைத்த வருமானத்தினை மூலதனமாக்கும் வளங்கள் என்பவற்றுக்கிடையிலான தாக்கத்தினை (அதிகரிப்பு/குறைவு/மாற்றமில்லை) குறிப்பிடுக.

| அம்சங்கள் | உரிமைப்பங்கு வழங்கல் | நிறுத்தி வைத்த வருமானத்தினை மூலதனமாக்கும் வழங்கல் |
|---|---|---|
| A உரிமையாண்மை(தேறிய சொத்து) | | |
| B காசு | | |
| C நிறுத்தி வைத்த வருமானம் | | |
| D மொத்தச்சொத்து | | |

47) பின்வரும் தகவல்கள் உற்பத்திக் கம்பனியொன்றினால் பயன்படுத்திய மூலப்பொருட்கள் தொடர்பானவை

- 12000கிலோ சிக்கனக்கட்டளை தொகையானது (EOQ)மறுகட்டளை தொகையாக பாவிக்கப்படுகின்றது.
- கட்டளையொன்றுக்கான கிரயம் ரூபா 300 ஆகும்.
- மூலப்பொருட்களின் வருடாந்தப் பாவனை 120000கிலோ

மேற்படி தரவின் அடிப்படையில்

அ.சிக்கன கட்டளைத் தொகை மாதிரியின் படி இம்மூலப்பொருட்களுக்கான வருடாந்த இருப்பு வைத்தற்கிரயம்

ஆ.சிக்கனக் கட்டளைத் தொகை மாதிரியின் படி இம்மூலப்பொருட்களுக்கான மொத்த இருப்பு கட்டுப்பாட்டுக்கிரயம்

இ.கட்டளைத் தொகை 15000 கிலோ எனக்கருதி கணிக்கப்பட்ட அதன் இருப்பு கட்டுப்பாட்டுக்கிரயமானது தற்போதைய இருப்புக்கட்டுப்பாட்டுக் கிரயத்துடன் ஒப்பிடுகையில் அதிகமா அல்லது குறைவா அல்லது மாற்றமில்லையா எனக்குறிப்பிடுக.

48) பயணப்பையை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றின் உற்பத்தி தொழிலாளர் தொடர்பான 31.03.2016இல் முடிவடைந்த வருடத்திற்கான சம்பளப்பட்டியலில் இருந்து பின்வரும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

| | ரூபா 000 |
|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 12000 |
| ஊக்குவிப்புக் கொடுப்பனவு | 4500 |
| (பூர்த்தி செய்யப்பட்ட விசேட கட்டளையொன்றுக்கான அலகு வீதத்தின் அடிப்படையில்) | |
| கம்பனியின் இலாபத்தின் அடிப்படையில் உபகாரப்பணம் | 600 |
| மொத்தச் சம்பளம் | 17100 |
| ஊழியரின் EPF பங்களிப்பு | 1200 |
| கம்பனியின் EPF பங்களிப்பு | 1800 |
| கம்பனியின் ETF பங்களிப்பு | 360 |

கம்பனியின் 31.03.2016 முடிவடையும் ஆண்டுக்கான பின்வருவனவற்றை கணிக்குக.

அ.உற்பத்திக்கணக்கில் நேர்க்கூலியினுள் காட்டப்படும் சம்பளத்தொகை

ஆ.உற்பத்திக்கணக்கில் உற்பத்தி தொழிலாளர் தொடர்பாக ஏற்படும் மொத்தச்செலவு

49)பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள் "T" ஒன்றுடன் தொடர்பானவை

| | ரூபா 000 |
|---|---|
| விற்பனைகள் | 3600 |
| கழி: மாறும் கிரயம் | (1800) |
| மொத்தப்பங்களிப்பு | 1800 |
| கழி:நிலையான கிரயம் | (720) |
| இலாபம் | 1080 |

தற்போதுள்ள செயற்பாட்டு மட்டத்தில்

அ.பங்களிப்பு விற்பனை வீதம்

ஆ.சமப்பாட்டு புள்ளி பெறுமதியில் (ரூபாவில்)

இ.பாதுகாப்பு எல்லை பெறுமதியில் (ரூபாவில்)

50) வரையறுக்கப்பட்ட கௌசிக் பொதுக்கம்பனி புதிய இயந்திரம் ஒன்று கொள்வனவு தொடர்பில் பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

| | (ரூபா 000) |
|---|---|
| புதிய இயந்திரத்தின் கொள்வனவு விலை | 1500 |
| பழைய இயந்திர விற்பனை விலை | 540 |
| புதிய இயந்திர நிர்மாணிப்புக்கிரயம் | 120 |
| ஆரம்ப தொழிற்படு மூலதன அதிகரிப்பு | 180 |
| முன்னைய தொழிற்படு மூலதனம் | 270 |
| புதிய இயந்திர இழிவுப்பெறுமதி(எஞ்சிய பெறுமதி) | 120 |
| வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் காசு விற்பனை வருமானம் | 660 |
| வருடாந்தம் எதிர்பார்க்கப்படும் காசு செலவுகள் | 180 |

புதிய இயந்திரத்தின் ஆயுட்காலம் 4வருடங்கள் 10% முதலீட்டின் கழிவுக்காரணி

| வருடம் | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| 10% கழிவுக்காரணியில் இற்றைப்பெறுமதி | 0.9 | 0.8 | 0.7 | 0.6 |

பின்வருவனவற்றை கணிக்குக.

அ.ஆரம்ப முதலீட்டுக் கிரயம் ரூ

ஆ.4ம் வருட தேறிய காசுப் பாய்ச்சலின் நிகழ்காலப் பெறுமதி ரூபா

◆ ◆ ◆

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

வலம்புரி கல்விப்பிரிவு

**கணக்கீடு** **பகுதி-I விடைகள்**

Teacher: K.B. KAJAN, B.COM (Jaf), H.N.Dip in-Acc (ATI), Dip in Edu (OUSL), M.Com (Acc), (St. Partick's College, Jaffna)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | 5 | 11) | 3 | 21) | 1 |
| 2) | 4 | 12) | 4 | 22) | 2 |
| 3) | 1 | 13) | 1 | 23) | 1 |
| 4) | 4 | 14) | 5 | 24) | 4 |
| 5) | 5 | 15) | 4 | 25) | 3 |
| 6) | 5 | 16) | 1 | 26) | 2 |
| 7) | 2 | 17) | 2 | 27) | 5 |
| 8) | 2 | 18) | 2 | 28) | 1 |
| 9) | 4 | 19) | 5 | 29) | 4 |
| 10) | 5 | 20) | 2 | 30) | 1 |

31) A-சரி B-பிழை
C-சரி D-சரி

32) அ.செலவுகள் ரூபா 176000
ஆ.மொத்தச்சொத்து ரூபா 420000

33)

| | ஆரம்பப் பதிவுப்புத்தகம் | மூல ஆவணம் |
|---|---|---|
| A | காசுப் பெறுவனவு நாளேடு | பற்றுச்சீட்டு |
| B | பொது நாளேடு | நாட்குறிப்பேட்டு கச்சாத்து |
| C | காசு கொடுப்பனவு நாளேடு | கச்சாத்து |
| D | உட்திரும்பல் நாளேடு | செலவுத்தாள் |

34) 1.அறவிடமுடியாக்கடன்
2.விதித்த வட்டி
3.மீளப்பெற்ற அறவிட முடியாக்கடன் (இலாபமாகக் காட்டும்போது)
4.இரத்துச் செய்த கொடுத்த கழிவு

35) அ.மாற்றப்படாத காசோலை ரூபா 102000
ஆ.தேறிய சொத்துக்களின் அதிகரிப்பு ரூபா 400

36) A-வருமானக்கணக்கு
B-பொறுப்புக்கணக்கு
C-உரிமைக்கணக்கு
D-சொத்துக்கணக்கு
E-செலவுக்கணக்கு
F-உரிமைக்கணக்கு

37) A-தொழில் முழுமைக்கூறு எண்ணக்கரு
B-கால அளவீட்டு எண்ணக்கரு/ஆவர்த்தன எண்ணக்கரு
C- பண அளவீட்டு எண்ணக்கரு
D-தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு
E-பாதுகாப்பு எண்ணக்கரு
F-அட்டுறு எண்ணக்கரு/தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

38) 1.கடந்த கால கொடுக்கல் வாங்கல் அல்லது நிகழ்வு ஒன்றின் பெறுபேறாக உருவாகுதல்.
2.வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல்
3.எதிர்காலத்தில் வணிகத்திற்குப் பொருளாதார நலன்கள் உட்பாய்ச்சப்படுதல்.

39) அ.உற்பத்தி மேந்தலைக்கிரயம் ரூபா 525000
ஆ.கொள்வனவு(145000+20000) ரூபா 165000
இ.பயன்படுத்திய மூலப்பொருட்களின் கிரயம் ரூபா 175000
ஈ.முதன்மைக்கிரயம் ரூபா 475000

40) 1.புதிய கணக்கீட்டு மென்பொருட்கள் அறிமுகம்(e.g: Accpack,Quick Books,MYOB,Sage)
2.பண வீக்கத்தினைகருத்தில் கொண்ட கணக்கீடு
3.சமூகக் கணக்கீடு

41) அ.மொத்த நன்மதிப்பு ரூபா 300000
ஆ.மூலதனம் சன்முகி கணக்கு (வரவு) 180000
வினுஜா கணக்கு (வரவு)120000
மூலதனம் சன்முகிக் கணக்கு (செலவு) 150000
விதுசா கணக்கு (செலவு)150000
(மொத்த பெறுமதி அடிப்படையில்)
or
மூலதனம் சன்முகி கணக்கு(வரவு)30000
வினுஜா கணக்கு (வரவு)120000
மூலதனம் விதுசா கணக்கு (செலவு) 150000
(இழப்பீட்டுப் பெறுமதி அடிப்படையில்)
இ.இளைப்பாறும் தினத்தில் விதுசாவிற்கு செலுத்தியது (ரூபா)
உரிமையாண்மை 400000
நன்மதிப்பு 150000
550000

42) 1) அ.வங்கிக்கணக்கு (வரவு) (21000X150) 315000
சம்பளக்கணக்கு (வரவு)(9000X150) 130000(சம்பளக்கட்டுப்பாட்டு கணக்கு)
பங்கு வழங்கல் கணக்கு (செலவு) 4500000
ஆ.பங்கு வழங்கல் கணக்கு (வரவு) (2000X150) 3000000
கூறப்பட்ட சாதாரண பங்கு மூலதனக் கணக்கு (செலவு) 3000000
2. தேறிய சொத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு
3000000
(80000)
2920000 அதிகரிப்பு

43)

| | செயற்பாடு | முதலீடு | நிதியிடல் |
|---|---|---|---|
| A | | ✓ | |
| B | | | ✓ |
| C | | ✓ | |
| D | ✓ | | |

44) அ.கணக்கீட்டு கொள்கை மாற்றம்
1.இருப்பு விலையிடுவதற்கு பயன்படும் நுட்பமுறையினை மாற்றி அமைத்தல் (FIFO-WAC)
2.பெறுமானத்தேய்வு செய்யும் முறையினை மாற்றி அமைத்தல்.
(நேர்கோட்டு முறை ஒடுங்குபாக மீதிமுறை)
கணக்கீட்டு மதிப்பீடுகளின் மாற்றம்
1.நடைமுறை அல்லாத சொத்தின் கிரயத்தில் இருந்து சந்தைப்பெறுமதிக்கு/ மீள்மதிப்பீட்டுப் பெறுமதிக்கு மாற்றியமைத்தல்.
2.நடைமுறை அல்லாத சொத்தின் பாவனைக் காலத்தினை மாற்றியமைத்தல்.
3.கடன்பட்டோரின் மீதியில் ஐயக்கடனிற்கு ஏற்பாடு செய்தல்.
ஆ.சட்டங்கள், நியமங்கள் என்பவற்றின் மாற்றம் காரணமாக முகாமையானது நிறுவனத்தின் செயற்பாட்டுப் பெறுபேறு, நிதி நிலைமை, காசுப்பாய்ச்சல் போன்றவற்றினை நம்பகமானதாகவும் நியாயமான முறையில்வெளிப்படுத்த முடியும் எனக்கருதினால்.

45) அ.கடன்பட்டோரிடமிருந்து விரைவாக பணத்தினை பெறுகின்றமை. (சுழற்சி விகிதம் அதிகரிக்கும் போது நாட்களின் எண்ணிக்கை குறைவடையும்.
ஆ.வருமதியாளர் பணம் செலுத்தும் காலம்= வருடத்தில் உள்ள நாட்கள் / வருமதியாளர் சுழற்சி விகிதம்
2015= 360 / 10
= 36 நாட்கள்
2016= 360 / 12
= 30 நாட்கள்

46)

| | உரிமைப்பங்கு வழங்கல் | நிறுத்தி வைத்த வருமானத்தினை மூலதனமாக்கும் வழங்கல் |
|---|---|---|
| A | அதிகரிக்கும் | மாற்றமில்லை |
| B | அதிகரிக்கும் | மாற்றமில்லை |
| C | மாற்றமில்லை | குறையும் |
| D | அதிகரிக்கும் | மாற்றமில்லை |

47) அ.மொத்த இருப்பு வைத்தல் கிரயம் = ரூபா 3000
ஆ.மொத்த இருப்பு கட்டுப்பாட்டுக்கிரயம் = ரூபா 6000
இ.அதிகரிக்கும்/அதிகம்

48) (ரூபா 000)
அ.நேர்க்கூலிச்சம்பளம் 16500
ஆ.உற்பத்திக்கணக்கில் உற்பத்தி தொழிலாளர் தொடர்பாக ஏற்படும் மொத்தச் செலவு 18660

49) அ.பங்களிப்பு விற்பனை வீதம் = 50%
ஆ.இலாப நட்டமற்ற புள்ளிப் பெறுமதி = ரூபா 1440000
இ.பாதுகாப்பு எல்லைப் பெறுமதி = எதிர்பார்த்த விற்பனைப் பெறுமதி-இலாபநட்டமற்ற புள்ளிப் பெறுமதி
= 3600000-1440000
= 2160000

50) அ.ஆரம்ப முதலீட்டுக்கிரயம் (ரூபா 000)
புதிய இயந்திரத்தின் கொள்வனவு (1500)
பழைய இயந்திர விற்பனை 540
புதிய இயந்திர நிர்மாணிப்புக் கிரயம் (120)
தொழிற்படு மூலதன அதிகரிப்பு (180)
(1260)

ஆ. 4ம் வருட தேறிய காசுப்பாய்ச்சல்கள் (ரூபா 000)
விற்பனை வருமானம் 660
காசுச் செலவுகள் (180)
தொழிற்படு மூலதனம் 450
எஞ்சிய பெறுமதி 120
1050

4ம் வருட இன்றைய பெறுமதி = 1050000X0.6
= ரூபா 630000



# சிறுவர் அரங்கம்

1468

## எல்லோரையும் நேசி!

பண்ணையார் தனஞ்செயனிடம் ஏராளமான கம்பளி ஆடுகள் வளர்ந்து வந்தன. அந்த ஆடுகளை எல்லாம் மேய்ப்பதற்கு சரியான ஆளைத்தேடிக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் பிரான்சிஸ் என்பவன், பண்ணையாரிடம் வேலை கேட்டுச் சென்றது மிகவும் வசதியாகப்படவே, பண்ணையில் உள்ள ஆடுகளை மேய்க்கும்படி கூறினார்.



ஒருநாள் கூட தவறாமல் ஆடுகளை ஓட்டிச் சென்று, அருகே இருக்கும் புல்வெளியில் மேய்த்து வந்தான் பிரான்சிஸ். அவனுக்கு, இரண்டு ரொட்டித் துண்டுகளை மட்டுமே சம்பளமாகக் கொடுத்து வந்தார் பண்ணையார்.

பிரான்சிஸ்சிற்கு அது கட்டுப்படியாக வில்லை. தான் மேய்த்து வருகிற கம்பளி ஆடுகளின் மீது அதிகமான பாசம் வைத்திருந்தான் அவன். அதனால், அவைகளை விட்டுப் பிரிந்து செல்ல மனமில்லாமல், தனக்குக் கிடைக்கும் ரொட்டித் துண்டுகளையும், ஆடுகளுக்குக் கொடுத்துவிட்டு அமைதியாகப்படுத்து விடுவான்.

புல்வெளியில் மேய்ந்து கொண்டிருக்கும் ஆடுகள் எல்லாம், பிரான்சிஸ்சை பரிதாபமாகப் பார்த்து கொண்டிருக்கும். பிரான்சிஸ் ப்சியோடு படுத்திருப்பதைக் கண்ட ஆடுகள் எல்லாம், அவன் மீது இரக்கப்பட்டு, அவன் முன்னே ஒன்று கூடின.

"பிரான்சிஸ்! நீ எங்கள் மீது அளவு கடந்த பாசம் வைத்திருக்கிறாய். அதனால், உன்னைப் பிரிந்து செல்ல எங்களுக்கு மனம் இல்லை. நாங்கள் எல்லாரும் உன்னுடனேயே வந்து விடுகிறோம். எங்கள் உடலில் உள்ள கம்பளி ரோமங்களை விற்பனை செய்தாலே, உனக்கு ஏராளமாகப் பணம் கிடைக்கும்!" என்று ஆலோசனை வழங்கின.

"ஆடுகளே! நான் எனது முதலாளிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்ய மாட்டேன். எனவே, உங்கள் எண்ணத்திற்கு நான் கட்டுப்படமாட்டேன்," என்று கூறினான். ஆடுகளோ, பிரான்சிஸ்சின் நல்லெண்ணத்தைப் பாராட்டத் தொடங்கின.

"பிரான்சிஸ்- பண்ணையார் உன்னை நன்றாகவே ஏமாற்றி வருகிறார். உனக்கு இரண்டு ரொட்டித் துண்டுகளை மட்டும் கொடுத்துவிட்டு, உன்னைப் பாதுகாப்பாக வைத்துக்கொண்டு, எங்களைப் புல்வெளியில் மேயவிடுகிறார். நாங்கள் நன்றாக உடல் பருத்து வளர்ந்ததும், எங்களையும் அதிக விலைக்கு விற்று பணம் சம்பாதிக்க முடிவு செய்துள்ளார். எனவே, நாங்களும், அவரைவிட்டு எப்படியாவது தப்பிச் செல்ல வேண்டுமென முடிவு செய்துள்ளோம்!" என்றன.

சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தான் பிரான்சிஸ். இந்த ஆடுகள் சொலவதும் ஒரு வகையில் நியாயமாகத்தான்படுகிறது. நாம் இந்த ஆடுகளோடு சென்றுவிட்டால், இந்த ஆடுகளுக்கும் சுதந்திரம் கிடைத்துவிடும் அதோடு, எனக்கும் சுதந்திரம் கிடைத்துவிடும். பண்ணையாரின் கொடிய பிடியிலிருந்து நாம் தப்பித்துக் கொள்ளலாம்!" என்று முடிவு செய்தான்.

மறுநாள், அதிகாலையிலேயே தன் படுக்கையை விட்டு எழுந்துக் கொண்டான் பிரான்சிஸ். பண்ணையாருக்குத் தெரியாமல், மெல்ல வீட்டை விட்டு வெளியேறினான. பண்ணையின் வெளியே, ஆடுகளும் தயார் நிலையில் நின்று கொண்டிருந்தன.

ஆடுகளை ஓட்டிக்கொண்டு, பணணையை விட்டு வெளியேறி, வேறு ஊருக்குப் புறப்பட்டான் பிரான்சிஸ். அவனோடு, ஆடுகளும் சந்தோஷமாக செல்லத் தொடங்கின.

பண்ணையில் ஆடுகள் இல்லாதிருப்பதைக் கண்டு திகைப்படைந்தார் பண்ணையார். பிரான்சிஸ்சையும் அங்கு தேடிப்பார்த்தார். அவனையும் அங்கு காணாததால், குழப்பத்துடன், பண்ணையாட்கள் வேலை செய்கிற இடத்தை நோக்கி சென்றார். (தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1389 - ஒட்டோமான் மற்றும் செர்பியப் படைகள் கொசோவோவில் போரை ஆரம்பித்தன. இப்போர் ஒட்டோமான் இராணுவத்தினர் தென்கிழக்கு ஐரோப்பாவைக் கைப்பற்ற உதவியது.
- 1519 - ஐந்தாம் சார்ல்ஸ் புனித ரோமப் பேரரசின் மன்னனானான்.
- 1651 - 17 ஆம் நூற்றண்டின் மிகப் பெரும் போர் போலந்துக்கும் உக்ரைனுக்கும் இடையில் ஆரம்பமானது.
- 1763 - ஹங்கேரியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1880 - அவுஸ்திரேலியாவின் காட்டுக் கொள்ளைக்காரன் நெட் கெலி பிடிபட்டான்.
- 1881 - ஆஸ்திரியாவும் சேர்பியாவும் இரகாசிய உடன்பாட்டை எட்டின.
- 1904 - "நோர்ஜ்" என்ற டென்மார்க் நாட்டுப் பயணிகள் கப்பல் வடக்கு அட்லாண்டிக் பெருங்கடலில் சிறி திட்டு ஒன்றுடன் மோதி மூழ்கியதில் 635 பேர் கொல்லப்பட்டனர்.
- 1914 - ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர் பிரான்ஸ் பேர்டினண்ட், மற்றும் அவனது மனைவி சோஃபி இருவரும் சேர்பியாவில் கொல்லப்பட்டனர். முதலாம் உலகப் போர் ஆரமபிப்பதற்கு இதுவே காரணியாக அமைந்தது.
- 1919 - முதலாம் உலகப் போர்: பாரிசில் போர்நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.
- 1922 - ஐரிய உள்நாட்டுப் போர் ஆரம்பமானது.
- 1940 - சோவியத் ஒன்றியம் பெசராபியாவை ருமேனியாவிடம் இருந்து கைப்பற்றியது.
- 1950 - வட கொரியா சியோலைத் கைப்பற்றியது.
- 1964 - மால்க்கம் எக்ஸ் ஆபிரிக்க அமெரிக்க ஒன்றியத்தை ஆரம்பித்தார்.
- 1967 - கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் தன்னுடன் இணைத்துக் கொண்டது.
- 1994 - ஓம் ஷின்றிக்கியோ என்ற மதவழி பாட்டுக் குழுவினர் ஜப்பானில் மட்சுமோட்டோ என்ற இடத்தில் நச்சு வாயுவைப் பரவச் செய்ததில் 7 பேர் கொல்லப்பட்டு 660 பேர் காயமடைந்தனர்.
- 1995 - மண்டைதீவுத் தாக்குதல், 1995: மண்டைதீவு இராணுவப் படைத்தளத்தை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தனர்.
- 2004 - ஈராக்கின் ஆட்சி அதிகாரத்தை ஐக்கிய அமெரிக்கா ஈராக்கியர்களிடம் ஒப்படைத்தது.

பிறப்புகள்

- 1703 - ஜோன் வெஸ்லி, மெதடிசத்தை அறிமுகப்படுத்தியவர். (இ. 1791)
- 1907 - தாவீது அடிகள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர். (இ. 1981)
- 1921 - பி. வி. நரசிம்ம ராவ், இந்தியாவின் 9வது பிரதமர். (இ. 2004)
- 1937 - எஸ். எஸ். கணேசபிள்ளை, வானொலி, மேடை நடிகர். (இ. 1995)
- 1940 - முகமது யூனுஸ், வங்காள தேசத்தைச் சேர்ந்த பொருளியலாளர், நோபல் பரிசு பெற்றவர்.
- 1940 - கர்பால் சிங், மலேசிய வழக்கறிஞர், அரசியல்வாதி. (இ. 2014)

இறப்புகள்

- 1836 - ஜேம்ஸ் மாடிசன், ஐக்கிய அமெரிக்காவின் 4வது குடியரசுத் தலைவர். (பி. 1751)
- 1914 - பிரான்ஸ் பேர்டினண்ட், ஆஸ்திரிய இளவரசர். (பி. 1863)

## எஸ்.எஸ்.கணேசப்பிள்ளை வரணியூரான்

எஸ். எஸ். கணேசபிள்ளை, வானொலி, மேடை நாடக நடிகரும், நாடகாசிரியருமாவார். யாழ்ப்பாணம் வரணியில் பிறந்தார். இதனாலேயே இவர் தனது புனைபெயரை "வரணியூரான்" என்று வைத்துக் கொண்டார். மூன்று தலைமுறை காலத்துக்கு மேலாக வானொலியில் நகைச்சுவை நாடகங்களில் நடித்தும், எழுதியும் வந்தவர். பல மேடை நாடகங்கள், மற்றும் தொலைக்காட்சி நாடகங்களையும் எழுதி; இயக்கி, நடித்துமிருக்கிறார்.

இவர் 'அபிராமி' எனும் விளம்பர நிறுவனம் ஒன்றையும் நடத்தி விளம்பர நிகழ்ச்சிகள் பலவற்றை இலங்கை வானொலியூடாக ஒலிபரப்பியிருக்கிறார். கொழும்பு இறைவரித் திணைக்களத்தில் பணியாற்றிக் கொண்டே கிடைக்கும் மிகுதி நேரத்தில் இலங்கை வானொலியிலேயே தனது நாடகப் பணியைத் தொடர்ந்தவர்.

இவர் எழுதி நடித்த புளுகர் பொன்னையா, விளம்பர நிகழ்ச்சியாக ஒருவருடம் ஒளிபரப்பான 'இரைதேடும் பறவைகள்' நாடகம் ஆகியன பலரது அபிமானத்தைப் பெற்றது. இரைதேடும் பறவைகள் நாடகம் பின்னாட்களில் புத்தக வடிவில் வெளிவந்தது. 1995 இல் நாடகக் கலைஞர்களை அழைத்துக்கொண்டு 'தாத்தாவின் ஆசை' என்ற நாடகத்தைக் கனடாவில் பல பாகங்களிலும் நடத்தினார். கணேசபிள்ளை 1995 இல் கொழும்பில் காலமானார்.

# கட்சி உருவாக்கும் முயற்சியை உடனடியாக கைவிட வேண்டும்

## மகிந்தவிற்கு மைத்திரி எச்சரிக்கை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் புதிய கட்சியொன்றை உருவாக்க தீவிர முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் அந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலிருந்து பிளவுபட்டுள்ள உறுப்பினர்களை இணைத்துக் கொண்டு கூட்டு எதிர்க்கட்சியினர் என தம்மை அடையாளப்படுத்திய குழுவினர் புதிய அரசியல் கட்சியை உருவாக்கவுள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கு அவசரப்பட வேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம். ஜனாதிபதி மைத்திரி கேட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஊடாக இந்த அறிவிப்பினை ஜனாதிபதி விடுத்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை மீண்டும் நியமிக்க கூடாதென அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து. எந்தவிதமான முன்னறிவிப்பும் விடுக்காமல் பாரிய மக்கள் கூட்டத்துடன் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கூட்டு எதிர்க்கட்சியினர் இவ் ஆர்ப்பாட்டத்தை கடந்த 24 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தனர். இதன்போது சிறு வன்முறை சம்பவங்கள் இடம் பெற்றதுடன். நாடாளுமன்ற உறுப்பினர்களும் காயங்களுக்கும் உள்ளானார்கள்.



இந்த சம்பவம் தொடர்பில் அதிருப்தி அடைந்த ஜனாதிபதி.ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்களை தனது வீட்டிற்கு அழைத்து. விசாரணை நடத்தினார்.

இதன்போது மகிந்த ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தில் புதிய கட்சி அமைப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும். கூட்டு எதிர்க்கட்சியினருக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளே இதற்கு காரணம் என ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

மகிந்தவின் செயற்பாடு கட்சிக்கு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்தி. புதிய கட்சியை அமைக்கும் மகிந்தவின் முயற்சிக்கு அனுமதியளிக்க முடியாது என ஜனாதிபதி கடும் தொனியில் எச்சரித்தார்.

புதிய கட்சியை உருவாக்க மகிந்தவை அவசரப்பட வேண்டாம் என கூறுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளார்.

இதேவேளை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தில் இடம் பெற்ற மத்திய செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்க கூடாதென தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தை முழுமையாக நீக்காமல். தேர்தல் முறையில் மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. (இ-10)

# இரத்தம் சிந்தி கட்டியெழுப்பிய சிங்கள பௌத்த நாடு இது

## பொதுபலசேனா காட்டம்

(கொழும்பு)

**எமது முன்னோர்கள் வியர்வை, இரத்தம் சிந்தி கட்டி யெழுப்பிய சிங்கள பௌத்த நாடு இது என பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

இலங்கைமுஸ்லிம்பேரவை தனக்கு எதிராக பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தை ரொபர்ட் மொஹமட் ஊடாக இறைவன் அல்லாவுக்கு அனுப்புமாறும் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எப்படியான கடிதமாக இருந்தாலும் எந்த நபருக்கு அனுப்பினாலும் நாங்கள் பயப்பட மாட்டோம். சும்மா கேட்டு வாங்கி கொள்ள வேண்டாம் என முஸ்லிம் பேரவையிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

எமது முன்னோர்கள் வியர்வை, இரத்தம் சிந்தி கட்டியெழுப்பிய சிங்கள பௌத்த நாடு இது.

இலங்கை, சவுதி அரேபியாவோ, ஐக்கிய அரபு ராஜ்ஜியமோ, பாகிஸ்தானோ, ஆப்கானிஸ்தானோ அல்ல என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுமாறு ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# வடக்கு,கிழக்கு இணையும் சந்தர்ப்பத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும்

வடக்கு,கிழக்கு மாகாணங்கள் இணையும் சந்தர்ப்பம் ஏற்படுமாயின், தமிழ்மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணமும் முஸ்லிம் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு மாகாணமும் சம அந்தஸ்துள்ளதாக அமைய வேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் என தேசிய காங்கிரஸ் கட்சியின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் அவர் விடுத்துள்ள அறிக்கையில், புதிய அரசியலமைப்பு தீர்வுத்திட்டம் தொடர்பாக பல்வேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மூன்று தசாப்தகால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு நியாயமான அதிகாரப் பகிர்வைக் கோரி நிற்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் மத்தியில் வடமாகாண சபை மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து அரசியல் தீர்வு, புதிய அரசியலமைப்பு யாப்புக்கான முன்மொழிவுகளை வட மாகாண சபையில் சமர்ப்பித்து அம் முன்மொழிவுகள் மீதான விவாதம் மாகாண சபையில் முழுமை பெற்று, தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டு வடமாகாண சபையால், மத்திய அரசாங்கத்துக்கும் சர்வதேசத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



வடமாகாண முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளில் மலையக மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் தன்னாட்சிப் பிராந்தியங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் முஸ்லிம் சமூகத்திடமோ, முஸ்லிம் அரசியல் தலைவர்களிடமோ எவ்வித ஆலோசனையும் பெறாமல், தன்னிச்சையாக முஸ்லிம் சமூகம் தொடர்பான தீர்மானத்துக்கு வந்தமை தொடர்பில் முஸ்லிம் சமூகமும் முஸ்லிம் அரசியல் கட்சிகளும் கவலையடைந்துள்ளன என்றார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினர் வடக்கு, கிழக்கு மாகாணங்கள்இணைந்திருக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் முஸ்லிம்கள் கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணத்துடன் இணையக்கூடாது என்ற நிலைப்பாட்டிலும் உள்ளனர்.

எது எப்படியிருந்தாலும் வடமாகாண சபையானது வட மாகாண மக்களின் உணர்வுகளை பிரதிபலிக்கக்கூடிய வகையில் யோசனைகளை சமர்ப்பித்துள்ளது. இதேவேளை கிழக்கு மாகாண சபையும் மக்கள் பிரதிநிதிகளும் கிழக்கு மாகாண மக்களின் உணர்வுகளை யோசனையாக தயாரிப்பதற்கு இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கிழக்கு மாகாணத்தில் மூவினமக்கள் வாழ்கின்றனர். அச்சமூகங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் கிழக்கு மாகாண சபை அதனுடைய முன்மொழிவுகளை தயாரித்து நியாயமான தீர்வுத்திட்ட முன்மொழிவுகளை கிழக்கு மாகாண சபையில் நிறைவேற்ற வேண்டும்.

இம்முன்மொழிவுகள் எமது நாட்டில் வாழ்கின்ற பல்லின மக்கள் மத்தியில் ஐக்கியம், அமைதி, பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்பக்கூடிய வகையில் அமைய வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ

# இன்று ஒரு தகவல்

## மற்றவர்களைப் பற்றித் தவறாகச் சொல்பவர்களைக் கையாள்வது எப்படி?

ஒருவர் தமக்குத் தெரிந்த ஒருவரைப் பற்றியோ , இருவருக்குமே தெரிந்த ஒருவரைப் பற்றியோ தவறாகச் சொல்கிறார் என்று வைத்துக் கொள்வோம்.

அப்படிச் சொல்கிறவர்களுக்கு ஆதரவாகப் பேச வேண்டும் என்றோ, அவர்கள் கருத்துடன் ஒத்துப் போக வேண்டும் என்றோ, அவர்களை மேலும் தூண்டும் படியாகப் பேச வேண்டும் என்றோ நமக்கு எவ்விதக் கட்டாயமும் இல்லை. ஆனால் , ஏனோ சிலர் இதைக் கட்டாயம் என்று கற்பனை செய்து கொண்டு நீட்டி முழக்கி வம்பில் சிக்கித் தவிக்கிறார்கள்.

மற்றவர்கள் புகார் புராணம் படிக்கும் போது இதுவரை கேட்டிராத அற்புதக் கதையைக் கேட்பது போல் முகத்தை மாற்றிக் கொள்ளாமல், உணர்வுகளை -உள்ளச் சலனங்களை வெளிக்காட்டிக் கொள்ளாத படி நடந்து கொள்வது மிக நல்லது. அதாவது, வேறு வகையில் சொல்ல வேண்டுமானால் உம் என்று இருக்க வேண்டுமே தவிர, ஊம் ஊம் என்று தலையாட்டுவது தேவையற்றது.

மற்றவர்களைப் பற்றி நாம் கொண்டிருக்கும் நல்லெண்ணங்களைக் கலைத்துவிடுவதை நோக்கமாகக் கொண்டவர்களுக்கு நாம் ஏன் இடந்தர வேண்டும்?

யாரைப் பற்றி என்ன சொன்னாலும் அந்தக் காதில் வாங்கி இந்தக் காதின் வழியாக வெளியிடும் பழக்கமோ, அது உண்மையோ பொய்யோ என ஆராய்ந்தறியும் குணமோ நம்மிடம் இருந்து விட்டால் பரவாயில்லை. அது தான் பெரும்பாலானவர்களிடம் இல்லையே!

இப்படி நம்மோடு பேசி , நம்மிடம் இருந்து சில வார்த்தைகளை வலுக்கட்டாயமாகப் பிடுங்கிவிடுவார்கள் இவர்கள். இத்தோடு நம்மை விட்டுவிடாமல் தாங்கள் சொன்னவற்றையெல்லாம் நாம் சொன்னதாக ஒரு காட்சியை ஜோடித்து நம்மை எக்கச்சக்கமாய் மாட்டிவிட்டு விடுவார்கள்.

இப்படி நடக்காவிட்டாலும், யாரைப் பற்றித் தவறாகப் பேசிக் கொண்டிருந்தோமோ அவரே வந்து விடுகிறார் என வைத்துக் கொள்வோம். உடனே தலை கீழாய் மாறி அவரைப் பற்றிப் பாராட்ட ஆரம்பித்து விடுவோம்.

கண்டால் வாழ்த்துவதும் காணாவிட்டால் வைவதும் பெரிய நாடகத்தனம். இது மகா கேவலம் இல்லையா?

நொடியில் நாக்கை மாற்றிக் கொள்வது ஒன்றும் போற்றக்கூடிய செயலில்லையே? எவரேனும் இனிப் புகார் புராணம் ஆரம்பித்தால் நாம் சில நியதிகளைக் கடைப்பிடித்தாக வேண்டும்.

இவர்களை ஊக்குவிக்க வேண்டாம். மாறாக, வேறு விடயத்திற்குத் தாவலாம்.

இல்லையில்லை, நீங்கள் சொல்வது சரியில்லை என்று எதிர்வாதம் புரியலாம். அல்லது ஆர்வம் இல்லாமல் கேட்டுக் கொள்ளலாம்.

உரிமையோடு பழகும் பட்சத்தில் , நீங்கள் இப்படியெல்லாம் பேசுவது தவறு; உங்கள் மீது மிகுந்த மரியாதையும் அன்பும் வைத்திருக்கும் அவர், இவற்றையெல்லாம் கேள்விப்பட்டால் அளவுக்கு மீறி வருத்தப்படுவார் என்று உறைக்கும் படி ஏதேனும் சொல்லலாம்.

இந்த ஆளிடம் இதைச் சொல்வதை விடச் சுவரில் முட்டிக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு நம்மை மாற்றி மற்றவர்கள் வரவேண்டும். இது ஒரு வகையில் அவர்களைப் பொறுத்தவரை நாம் பெறும் அவப்பெயர் என்றாலும்

சேச்சே! என்னைப் பற்றி அவர் ஒரு போதும் அப்படிப் பேச மாட்டார். அப்படிப் பேசுபவர்களையும் சும்மா விடமாட்டார். என்று நாம் பெறும் வார்த்தை மாலைகளே மேலானவை!

**லேனா தமிழ்வாணன்**

# 2015 ஆம் ஆண்டில் 1,31,614 பேர் இறப்பு

கடந்த வருடத்தில் 6 இலட்சத்து 42 ஆயிரத்து 374 (6,42, 374) பிறப்பு இறப்பு, விவாகங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன் எனவும், அவற்றுள் பிறப்புகள் 3 இலட்சத்து 34 ஆயிரத்து 821 ( 3, 34, 821) எனவும், இறப்புகள் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 614 (1, 31, 614) எனவும் விவாகங்கள் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 939 (1, 75, 939) எனவும் பதிவாளர் நாயகத் திணைக்களம் அறிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் இடம் பெற்ற பிறப்பு, இறப்புகள் பிராந்திய விவாகப் பதிவாளர்களால் பதியப்பட்ட விவாகங்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இந்தத் தகவல்கள் பெறப்பட்டிருப்பதாக பதிவாளர் நாயகம் ஈ.எம். குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் வெளிநாடுகளில் நடந்த இலங்கையர்களின் பிறப்புகள் 8, 893, இறப்புகள் 470, விவாகங்கள் 230 ஆகியவை தனது திணைக்களத்தில் பதியப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது திணைக்களத்துக்கு நாடு முழுவதிலும் 45 கிளைக் காரியாலயங்கள் இருப்பதாகவும் மொத்தமாக 1200 பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்கள் பணியாற்றி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)



## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-27.06.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 145.23 | 149.06 |
| பிரிட்டன் | பவுண்ட் | 192.75 | 200.77 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 157.7 9 | 165.44 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.95 | 154.25 |
| கனடா | டொலர் | 110.30 | 114.97 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.51 | 111.54 |
| சிங்கப்பூர் | டொலர் | 106.34 | 110.49 |
| இந்தியா | ரூபா | 2.1406 | ------- |
| சீனா | யுவான் | 21.8566 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 385.1766 |
| குவைத் | டினார் | 481.0399 |
| ஓமான் | ரியால் | 377.2678 |
| கட்டார் | ரியால் | 39.8984 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.7313 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.5459 |



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 80 | 70 | 80 | 80 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 700 | 550 | 500 | 500 | 600 | 700 |
| தக்காளி | 280 | 260 | 230 | 280 | 280 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 60 | 70 | 80 | 80 |
| கோவா | 180 | 140 | 100 | 150 | 160 | 200 |
| கரட் | 250 | 250 | 180 | 160-300 | 300 | 200 |
| பூசணி | 70 | 80 | 90 | 80 | 100 | 70 |
| புடோல் | 100 | 80 | 60 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 70 | 160 | 80 |
| சின்ன வெங்காயம் | 160 | 140 | 140 | 140 | 200 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 70 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 200 | 180 | 250 | 160 | 250 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 70 | 120 | 120 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 160 | 150 |
| பயற்றங்காய் | 150 | 120 | 100 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 150 | 120 | 110 | 150 | 160 | 170 |
| பீற்றூட் | 120 | 160 | 130 | 120 | 160. | 150 |
| கறிமிளகாய் | 350 | — | 150 | 240 | 300 | 200 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 400 | 640 | 600 | 700 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 200 | 200 | 200 |
| கத்தரித்தும்புள்ள | 60 | 80 | 50 | 60 | 80 | — |
| கீரை - 1பிடி | 30 | 30 | 10 | 30 | 20 | 15 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 250 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 25 | 50 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | — | — | — | 200 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 240 | — | 160 | 240 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | — | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 60 | 40 | 60 | 60 | 70 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## தமிழர் என்பதால் கதிர் காமர் பிரதமராகச் சிங்களவர்கள் எதிர்ப்பு 214

4 ஆண்டுகளில் நடந்த 3ஆவது பாராளுமன்ற தேர்தல் இது. இதில் மொத்தம் 225 தொகுதிகளுக்கு 6 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

முதல் முறையாக விடுதலைப்புலிகள் இயக்கமும் போட்டியிட்டது. இதுவரை விடுதலைப்புலிகள் தமிழ் தேசிய கூட்டணியை ஆதரித்து வந்தனர்.

2001ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் நடந்த வன்முறையில் 70இற்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர். ஆனால் இந்தத் தேர்தல் மிக அமைதியாக நடந்தது.

### 10 ஆயிரம் வாக்குச்சாவடிகள்

வாக்குப்பதிவு காலை 7 மணிக்குத் தொடங்கி பிற்பகல் 3.30 மணிவரை நடந்தது. இதற்காக 10,677 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. மொத்தம் 1 கோடியே 20 இலட்சத்து 89 ஆயிரம் பேர் வாக்கு போட்டனர்.

தமிழர்கள் அனைவரும் பயமின்றி வாக்குப்போட வசதியாக வவுனியா மத்திய கல்லூரியில் 63 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டன. விடுதலைப்புலிகள் வசம் உள்ள வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த 60 ஆயிரம் பேர் இங்கு வந்து வாக்களித்தனர்.

இதுபோல முகமாலை இராணுவ முகாமில் 61 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன. இங்கு கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த தமிழர்கள் ஆயிரக்கணக்கில் வந்து வாக்களித்தார்கள்.

வாக்குப்பதிவையொட்டி, இராணுத்தினரும் பொலிஸாரும் பாதுகாப்புப் பணிகளைக் கவனித்தனர்.

### ஜனாதிபதி- பிரதமர்

ஜனாதிபதி சந்திரிகா கொழும்பு நகரையொட்டி உள்ள கம்பஹா என்ற இடத்தில் அமைக்கப்பட்ட வாக்குச் சாவடியில் வாக்களித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மத்திய கொழும்பு நகரில் உள்ள வாக்குச்சாவடியில் தனது வாக்கைப் பதிவு செய்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் பேசுகையில், எங்கள் கட்சி நிச்சயம் கூடுதல் இடங்களைக் கைப்பற்றும் என்றார்.

பிற்பகல் 3.30 மணிக்கு வாக்குப்பதிவு முடிந்தது. மொத்தத்தில் 75 சதவீதம் வாக்குகள் பதிவாகி இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

### வாக்கு எண்ணிக்கை

வாக்கு எண்ணிக்கை 03-04-2004 அன்று தொடங்கியது. இந்தத் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிகாவின் ஐக்கிய மக்கள் விடுதலை கூட்டணி 105 தொகுதிகளில் வெற்றி பெற்றது. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய



முன்னணி 82 தொகுதிகளில் வென்றது.

பாராளுமன்றத்தின் மொத்த இடங்கள் 225 ஆகும். தனி மெஜாரிட்டியுடன் ஆட்சி அமைக்க 113 உறுப்பினர்கள் தேவை. ஆனால் எந்தக் கட்சிக்கும் தனி மெஜாரிட்டி கிடைக்கவில்லை.

என்றாலும் 8 உறுப்பினர்கள் குறைவாக இருந்தாலும் தனிப்பெரும் கட்சி என்ற முறையில் சந்திரிகா கட்சி ஆட்சி அமைத்தது.

### லக்ஸ்மன் கதிர்காமர்

புதிய பிரதமராக லக்ஸ்மன் கதிர்காமர் 05-04-2004 அன்று பதவி ஏற்பதாக இருந்தது. ராஜபக்ஷவின் எதிர்ப்பைத் தொடர்ந்து பதவி ஏற்புத் தள்ளி வைக்கப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் முக்கிய அரசியல் ஆலோசகர் லக்ஸ்மன் கதிர்காமர். தமிழரான இவருக்கு வயது 71. சந்திரிகாவின் அரசியல் வெளிநாட்டுதுறை அமைச்சராக பதவி வகித்தவர். உலகம் முழுவதும் விடுதலைப்புலி இயக்கத்துக்குத் தடை விதிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தவர் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

லக்ஸ்மன் கதிர்காமர் பிரதமராகி இருந்தால் நாட்டில் பிரதமர் பதவி வகித்த முதல் தமிழர் என்ற பெருமையைப் பெற்றிருப்பார்.

### போர்க்கொடி

தமிழரான கதிர்காமரை மிக முக்கியமான பிரதமர் பதவியில் அமர்த்தக்கூடாது என்னைத்தான் பிரதமர் ஆக்க வேண்டும் என்று சந்திரிகா கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான மகிந்த ராஜபக்ஷ போர்க்கொடி உயர்த்தினார்.

கதிர்காமருக்கு அரசியல் தெரியாது. அவர் 1994ஆம் ஆண்டு நியமன எம்.பியாகத்தான் பதவி ஏற்றார். தனி மெஜாரிட்டி பெற மற்ற கட்சிகளை நாடும் இந்த நேரத்தில் என்னைத்தான் பிரதமர் ஆக்கவேண்டும் என்றும் கூறி ராஜபக்ஷ தனது கட்சிக்குள் ஆதரவு திரட்டினார். அவருக்கு ஆதரவாக அவரது ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

### பிரதமர் பதவி ஏற்பு

இதைத்தொடர்ந்து புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ஷ 06-04-2004 அன்று பதவி ஏற்றார். அவருக்கு ஜனாதிபதி சந்திரிகா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

பதவி ஏற்பு நிகழ்ச்சியில் புதிய எம்.பிக்கள் மற்றும் கூட்டணி ஆதரவாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர். விழா நடைபெற்ற மண்டபம் சுற்றிலும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

### சட்டத்தரணி

புதிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வயது58. சட்டத்தரணி வேலைக்குப் படித்தவர். மனைவி பெயர் ஷிராந்தி.

1970ஆம் ஆண்டு முதல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து வந்தார். முன்பு தொழிற்துறை அமைச்சராகவும் இருந்தவர்.



(தொடரும்)

உ





அகில இலங்கைக் கம்பன் கழகம் நடாத்தும் "ஸ்ரீ ராம நாம கானாமிர்தம்"

# இசைவேள்வி 2016

காலம்: ஜூலை 5, 6, 7, 8, 9, 10 தினமும் மாலை 5.00 மணி

இடம்: நல்லூர்க் கம்பன் கோட்டம், யாழ். கைலாசபதி கலையரங்கம்

அனைவரும் வருக! பயன்மிகப் பெறுக!

(தி 5039)

கலந்து கொள்ளும் தமிழ் நாட்டுக்கலைஞர்கள்




| | | | | |
|---|---|---|---|---|
| மல்லாடி சகோதரர்கள் | அபிஷேக் ரகுராம் | ஓ.எஸ். தியாகராஜன் | ரி.என். சேஷகோபாலன் | பம்பாய் ஜெயஸ்ரீ |
| 06.07.2016 | 07.07.2016 | 08.07.2016 | 09.07.2016 | 10.07.2016 |


நல்லூர்க் கம்பன் கோட்டம்
ஜூலை 05ம் திகதி மாலை 5.30 மணிக்கு தியாகராஜசுவாமி இசை ஆராதனை (ஈழத்தின் பிரபல இசைக்கலைஞர்கள் அனைவரும் கலந்து கொள்வர்.)
ஜூலை 09 - 10 ஆம் திகதிகளில் காலை 9.00 மணிக்கு இசைக்கருத்தரங்கு ( ரி.என். சேஷகோபாலன், பம்பாய் ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்வர்.)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 763

விதுஸ்




சசிக்காந்




தர்மா




ஜெபநேசன்



அப்துல் கலாம்

ஆண்டவன் சோதிப்பது எல்லோரையும் அல்ல... உன்னைப் போல சாதிக்க துடிக்கும் புத்திசாலிகளை மட்டுமே...!-டாக்டர் அப்துல் கலாம்

அருள்ராஜ்

ஓட்டல்ல எவனெவனோ சாப்ட்ட ஸ்பூன்ல சாப்பிட்டா நாகரீகமாம், அதே நாம சொந்த கையால சாப்பிட்டா மேலயும் கீழயும் பாக்குறானுங்க இந்த நவநாகரீக கோமாளிகள்..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.



# அகதிகளை கைவிடும் ஐரோப்பா

கடல் பயணத்துக்குத் தகுதியில்லாத படகுகளில் செல்வது உயிருக்கு ஆபத்தானது என்று தெரிந்தும், ஆயிரக்கணக்கான மக்கள் பெண்கள், குழந்தைகளுடன் தங்களுடைய தாய் நாட்டை விட்டு முகம் தெரியாத மக்கள் வாழும் வேற்று நாடுகளுக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இடைத்தரகர்களை நம்பித் தங்கள் உயிரைப் பணயம் வைக்கிறார்கள்.

கடந்த ஆண்டு மட்டும் 3,700 அகதிகள் கடலில் மூழ்கி இறந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு இதுவரையில் 2,000 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். மேற்கு ஆசிய, வடக்கு ஆபிரிக்க நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் பூசலும், பக்கத்து நாட்டுடனான போரும் தான் அகதிகள் ஆயிரக்கணக்கில் வெளியேறக் காரணங்களாக இருக்கின்றன. ஐரோப்பாவை அடைய இரண்டு பாதைகளை அகதிகள் தேர்ந்தெடுத்துள்ளனர். முதலாவது, துருக்கியிலிருந்து கிரேக்கத் தீவுகளுக்குச் செல்கின்றனர். அல்லது லிபியாவிலிருந்து இத்தாலிக்குச் செல்கின்றனர்.

'ஒருவரை அனுமதித்தால் ஒருவரை வெளியேற்றுவது' என்று ஐரோப்பிய நாடுகளும் துருக்கியும் செய்து கொண்ட உடன்பாடு முக்கிய விளைவை ஏற்படுத்தியிருக்கிறது. கிரேக்கத் தீவுகளிலிருந்து துருக்கிக்கு ஒரு சிரியா அகதி திரும்பினால், இன்னொரு சிரியா அகதியை ஐரோப்பிய நாடுகள் தங்களுடைய நாட்டில் தங்க அனுமதிக்கும். இதையடுத்து, துருக்கி வழியாக அகதிகள் வருவது குறைந்துவிட்டது. ஒரு பாதை அடைபட்டுவிட்டதால், அகதிகளைக் கடத்தி வரும் இடைத்தரகர்கள், அவர்களை இப்போது லிபியாவுக்குக் கடத்திச் செல்கின்றனர். இதனால் இத்தாலியக் கடற்கரையில் அகதிகள் வருகை அதிகரித்துவிட்டது.

அகதிகள் பிரச்சினைக்கு ஒட்டுமொத்தமான ஒரு திட்டத்தை ஐரோப்பிய நாடுகள் வகுப்பது அவசியம். முதலில், அதிக எண்ணிக்கையில் அகதிகளை வரவேற்க வேண்டும். ஜேர்மனி, ஸ்வீடனைத் தவிர பிற நாடுகள், அகதிகளை வரவேற்பதில் ஆர்வமாக இல்லை. இரண்டாவதாக, அகதிகளை அடையாளம் கண்டு மீட்க போதிய நடவடிக்கைகளை ஐரோப்பிய நாடுகள் எடுக்க வேண்டும். அகதிகளை ஏற்பதற்கான செலவுகளைச் சமாளிக்கக் கடன் பத்திரத்தை வெளியிடலாம் என்று இத்தாலி கூறிய யோசனையை ஜேர்மனி கடுமையாக எதிர்த்துள்ளது. கடலில் அகதிகள் மூழ்காமலிருக்க வேண்டுமானால், மீட்புக் குழுக்களுக்குத் தேவைப்படும் உதவிகள் செய்யப்பட வேண்டும். அதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. மூன்றாவதாக, அகதிகள் ஐரோப்பாவைக் குறி வைத்து வருவதை ஆரம்ப கட்டத்திலேயே தடுத்துவிட வேண்டும் என்றே ஐரோப்பிய நாடுகள் விரும்புகின்றன. அகதிகள் வெளியேறக் காரணமாக இருக்கும் நாடுகளில் செயற்படுகிற, உலக சமூகத்துடன் ஒத்துழைக்கிற அரசுகள் இருந்தால் மட்டுமே இது சாத்தியம். இது தொடர்பாக துருக்கியுடன் ஐரோப்பிய ஒன்றியம் ஒரு உடன்பாட்டைச் செய்துகொள்ள வேண்டும்.

லிபியாவில் மம்மர் கடாஃபி தலைமையிலான அரசை ஐரோப்பிய நாடுகள் கவிழ்த்தது முதலே அந்நாடு கடும் உள்நாட்டுப் போரில் சிக்கிக்கொண்டிருக்கிறது. எனவே படைபலம், பண பலத்துடன் வளர்ந்துவிட்ட ஆள் கடத்தும் தரகுக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவது இப்போது இயலாத செயலாகிவிட்டது. அகதிகள் வெளியேறுவதைத் தடுக்க வேண்டும் என்றால், லிபியாவில் மீண்டும் அமைதி திரும்பினால்தான் உண்டு. ஐரோப்பிய நாடுகள் முற்பகல் செய்த அரசியல்வினைகளின் பயன்தான் இப்போது அகதிகள் பிரச்சினையாக அவர்கள் மீது விடிந்திருக்கிறது. இப்பிரச்சினையில் தீவிர அக்கறை செலுத்தாமல் இனியும் ஐரோப்பிய நாடுகளால் தள்ளிப் போட முடியாது!

**த ஹிந்து**

# மக்களால் வீட்டுக்கு விரட்டப்பட்டோர் அரசாங்கம் மீது சேறு பூசுகின்றனர்



நல்லாட்சி அரசு மீது தேவையில்லாத குற்றச்சாட்டை சுமத்தி, குற்றவாளியாக்குவதற்கு மகிந்த அணி முயற்சி செய்கின்றது என்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். மிகவும் ஒழுக்கமான பாதையில் பயணம் செய்யும் நல்லாட்சி அரசின் மீது போலிக்குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அபராதப் பத்திரம் வழங்க ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியெனக் கூறிக்கொள்வோர் முயற்சி செய்கின்றனர் என்றும் சஜித் பிரேமதாஸ கூறினார். வீடுகள் மற்றும் நிர்மாண அமைச்சின் கீழ் இலங்கை பூராவும் நடைமுறைப்படுத்தப்படும் 'அனைவருக்கும் நிழல்' தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புத்தள மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான ஆரம்பக் காசோலையை வழங்கி வைத்தபோது வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு கூறினார். இந்நிகழ்வு நாத்தாண்டிய பத்மத் அல்பாட் எப் நகர மண்டபத்தில் நடைபெற்றது. புத்தள மாவட்டத்தில் 405 குடும்பங்களுக்கான 64 மில்லியன் ரூபா பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. சஜித் தொடர்ந்து உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது,

மக்களால் நிராகரிக்கப்பட்ட, மக்கள் வேண்டாமெனக் கூறிய, மக்களால் வீட்டுக்கு விரட்டப்பட்ட ஒருங்கிணைந்த குழுவினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நல்லாட்சி அரசாங்கத்துக்கும் சேறு பூசும் நடவடிக்கையை நாடுபூராவும் செயற்படுத்துகின்றார்கள். முறிகளை வழங்குவது தொடர்பாக மோசடிகள் நிகழ்ந்துள்ளதாக ஒருங்கிணைந்த கோஷ்டியினர் குற்றஞ்சாட்டுகின்றார்கள். மற்றவர்கள் மீது குற்றஞ் சாட்டுவதற்கு முன்னர் தாங்கள் கண்ணாடி முன்னால் நின்று தாங்கள் தூய்மையானவர்களா? எனப் பார்க்க வேண்டும். தாங்கள் குற்றஞ் சாட்டுவது தூய்மையான மனதுடனா? என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்க மற்றும் மைத்திரிபால சிறிசேன தலைமையில் செயற்படும் நல்லாட்சி அரசாங்கம் என்னும் தோட்டத்தில் பழம் பறிக்க இவர்களால் முடியாது. களவு செய்வதற்கு, அரச உடைமைகளைக் கொள்ளையடிப்பதற்கு அரச வளங்களைச் சுரண்டுவதற்கு ஜனாதிபதியோ, பிரதமரோ இடம் வைக்கப் போவது இல்லை.

இன்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ரணில் விக்கிரமசிங்க 'மிஸ்டர் க்ளீன்' என கௌரவப்படுத்தி அழைக்கப்படுகின்றார். "மிஸ்டர்க்ளீன்" என்னும் பிரதமர் ஒரு நாளும் மிஸ்டர் அன்கிளீன் ஆகமாட்டார். அவரை அன்கிளீன் ஆக்கும் முயற்சியில் நாட்டில் பாரிய அளவில் ஒருங்கிணைந்த பாசாங்காளர்கள் முயற்சி செய்கின்றார்கள். ஏனென்றால் இரண்டு தேர்தலில் நிராகரிக்கப்பட்டு, அதனால் அநாதையாக்கப்பட்டு சுயநினைவின்றி, உயிர் விட்டுக்கொண்டிருக்கும் ஒருங்கிணைந்த பாசாங்காளர் பிரிவினருக்குள்ள ஒரே ஒரு துரும்பு சேறு பூசுவது, சூழ்ச்சி செய்வது போன்ற செயல்கள் ஆகும்.

உயர் நீதிமன்றம் முறிகள் தொடர்பான சம்பவம் அடிப்படையற்ற குற்றச்சாட்டெனத் தீர்ப்பு வழங்கியுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காமல் ஊடகப் பிரசாரத்தை நடத்துகின்றார்கள். கடந்த காலங்களில் இப்படியான குற்றச்சாட்டுகளுக்கு தீர்ப்பு நீதிமன்றத்தில் எழுதப்படவில்லை. அலரி மாளிகையில் அல்லது ஜனாதிபதி மாளிகையில் நீதிபதிகள் மாளிகைக்குக் கொண்டு வரப்பட்டு பயமுறுத்தி, கட்டாயப்படுத்தி தீர்ப்பு எழுதப்பட்டது. இன்று எமது நாட்டில் அந்த நிலைமையில்லை. நாட்டு மக்கள் இதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். நல்லாட்சி நடைபெறும் வேளையில் நீதிமன்றத்துக்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய அதிகூடிய சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் உயர் நீதிமன்றத்தை ஒருங்கிணைந்த பாசாங்குப் பிரிவினர் சவாலுக்கு உட்படுத்துகின்றார்கள். இன்று பொறுப்புள்ள குடிமக்களாக நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை நல்லாட்சி அரசாங்கம் ஜனநாயக முறையில் ஏற்றுக் கொள்கின்றது.

முறிகள் தொடர்பாக மோசடிகள் இடம்பெற்றுள்ளதென பொய்யான சேறுபூசும் பிரசாரங்கள் மூலம் அரசாங்கத்தை சங்கடத்துக்குள்ளாக்க மேற்கொள்ளும் முயற்சிகளை மக்களின் ஆதரவுடன் முறியடிப்போம்.

முன்னாள் ஜனாதிபதி உலக சுற்றுலா செல்லுமிடங்களில் எல்லாம் "புதிய அரசாங்கத்தின் மூலம் என்ன சுகத்தை அனுபவிக்கின்றீர்கள்' என்று கேட்கின்றார். நான் கேட்கின்றேன் துக்கம் யாருக்கு சுகம் யாருக்கு என்று. கோடி ரூபா பெறுமதியான போதைப் பொருள் கொள்கலனை நாம் கைப்பற்றினோம். இந்நாட்டை மதுபான பாவனையிலிருந்து முற்றாக விடுவித்து சுபிட்சமான நாடாக மாற்றுவதே எமது நோக்கமாகும். ஜனாதிபதியும் பிரதமரும் கோடிக் கணக்கான ரூபா போதைப் பொருள்களை கைப்பற்றும் போது முன்னாள் ஜனாதிபதி சுற்றுலா சென்று "நாட்டு மக்களுக்கு தற்போது சுகமாக உள்ளதா" எனக் கேள்வி எழுப்புகின்றார். போதைப் பொருளை தடுப்பதன் மூலம் இந்நாட்டின் அநேகமானோர் சந்தோஷமாக உள்ளார்கள். ஏனென்றால் எமது நாட்டின் இளைஞர் சமுதாயம் அழிவடைய போதைப் பொருள் காரணமாகிறது. போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை என்பது அவர்களின் எதிர்கால வாழ்வை சுபிட்சமாக்கும். இந்நாட்டை போதைப் பொருள் இராச்சியம் ஆக்கிய முன்னாள் தலைவர்களுக்கு இன்றைய அரசின் நடவடிக்கைகள் துக்கமாகத்தான் இருக்கும். போதைப் பொருள் வியாபாரிகளுக்கும் துக்கமாக இருக்கும். ஆனால் இந்நாட்டில் நல்லாட்சியை அங்கீகரித்த பெரும்பான்மையான மக்களுக்கு சந்தோஷமாகவே இருக்கும்.

எமது அரசாங்கத்தில் பெண்கள், சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் அரசியல், வன்முறை அரசியல், மோசடி அரசியல், கொலைகார அரசியல், வெள்ளை வான் அரசியல் எதுவுமே நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அவ்வாறான அரசியல் கடந்த அரசாங்கத்துக்கே உரியது.

புத்தள மாவட்டத்தில் உள்ள ஆனமடுவவில் எனது தந்தையார் வீடமைப்புத் துறைக்கு பெரும் பங்களிப்புச் செய்தார். எப்பொழுதுமே அவர் புத்தள மாவட்டத்தின் மிக நெருங்கிய நண்பராவார். நான் நல்லாட்சி அரசாங்கத்தில் இருப்பது புத்தள மக்களின் ஆதரவினாலேயே ஆகும். அதனாலேயே அமைச்சராகப் பதவி வகிக்கின்றேன். புத்தள மாவட்ட மக்கள் எமது அரசை அமைக்க பெரும் பங்களிப்பைத் தந்தார்கள். புத்தள மாவட்டத்தில் வீடில்லாப் பிரச்சினை மிக முக்கிய பிரச்சினையாகும். புள்ளிவிபரப்படி இருபதாயிரம், நிரந்தர வீடுகள் உள்ளன. தற்காலிக வீடுகள் பத்தாயிரம், வீடில்லாத குடும்பங்கள் ஏழாயிரத்து இருநூறாகும். சராசரியாக முப்பதாயிரத்துக்கும் நாற்பதாயிரத்துக்கும் இடைப்பட்டோருக்கு வீடில்லாப் பிரச்சினை உள்ளது. இது மிகப்பாரதூரமானது.

எமது அரசாங்கம் நாடு பூராவும் திட்டமிட்ட முறையில் வீடுகளை அமைத்து வீடில்லா பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி செய்து வருகின்றது. ஒவ்வொருவரும் சுயமரியாதையுடன் தங்கள் சொந்த வீடுகளில் வாழும் உரிமையை பெற்றுக்கொடுப்பதற்கு எமது அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

**விமலன்**

# 36 இலங்கைத் தமிழ் அகதிகள் இன்று தாயகம் திரும்புகின்றனர்

(கொழும்பு)

**அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினுடைய (UNHCR) வசதிப்படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் 36 இலங்கை தமிழ அகதிகள் தமிழ்நாடு இந்தியாவிலிருந்து இன்று 28ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.**

சென்னையிலிருநது மிஹின்லங்கா விமான சேவை (MJ 130) இதனூடாக மு.ப. 11.45 மணியளவில் வருகைதர்வுள்ளனர். சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இநதுமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதனின் முயற்சியால் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சும் மிஹின்லங்கா விமான சேவை நிறுவனமும் அவர்களது பயணப்பொதியின் அளவையும் அதிகரித்துள்ளது.

இவ் அகதிகள் 36பேரில் 20 ஆண்களும் 16 பெண்களும் உள்ளடங்குகின்றனர். இவர்கள் கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், கொழும்பு, திருகோணமலை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக வருகை தருகின்றனர் என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்குஇலங்கையை வந்தடைவதற்கு இலவசமாக விமான பயணச்சீட்டு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் வழங்கப்படும். அத்துடன் மீள் சமூக ஒருங்கிணைப்பிற்கான நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 75அமெரிக்க டொலர்களும் போக்குவரத்து நன்கொடையாக ஒவ்வொருவருக்கும் 19 அமெரிக்க டொலர்களும் உணவு அல்லாத பண நன்கொடையாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 75 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படுகின்றன.

2011ஆம் ஆண்டிலிருந்து மொத்தமாக 4ஆயிரத்து799 இலங்கை தமிழ் அகதிகள் (ஆயிரத்து 741 குடும்பங்கள்) தமிழ் நாட்டி லிருந்து இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். மேலும் இந்தியாவில் 64 ஆயிரம் பேர் இந்தியாவிலுள்ள 109 முகாம்களில் இருக்கின்றனர். மொதத மாக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான இலங்கை அகதிகள் இந்தியாவில் இருப்பதாகவும் அறியப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீளகுடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதன் மீள்குடியமர்த்தப்படும் மக்களுக்கு வாழ்வாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதி உதவிகளைவழங்குவதற்கான அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்ததன பேரில்தற்போது அமைச்சினால் ஆகக்கூடிய தொகையாக ஒரு இலட்சம் ரூபா தாயகம் திரும்பும் தமிழ் அகதிகள் தமது வாழ்வாதார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக வழங்கப்படுகின்றது.

மேலும் மீள்குடியமரும் மக்களுக்கு 6 மாதகாலத்திற்கு உலர் உணவுகளை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இவ் அமைச்சானது வீடுகள் மற்றம் தமது உறவினர்களை இழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நட்டஈடுகளை வழங்குமாறு ஆட்களையும் ஆதனங்களையும் கைத்தொழில்களையும் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபைக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளது. வீடுகளை இழந்தவர்களுக்கு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகள் வழங்கப்படுமென சிறைசசாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். அரசாங்கமானது இந்தியாவிலிருந்துகட்டம் கட்டமாக சுயவிருப்பில் இலங்கைக்கு அகதிகளை அழைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதுடன் அதிகரித்த அகதிகளின் வருகையானது நிரந்தர சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான சமிஞ்சையாக காணப்படுவதாக அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி மேலும் தெரிவித்தார். (இ-10)

## வற்வரி அதிகரிப்பினால் வாகன தரிப்பிடங்களின் கட்டணங்கள் அதிகரிப்பு

வற் வரி அதிகரிப்பினால் உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் வாகன தரிப்பிடங்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.அதிகமான இடங்களில் 30 ரூபாவாக காணப்பட்ட இந்தக் கட்டணத் தொகையானது 50 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.இதேவேளை 50 ரூபாவில் அதிகரிக்கப்பட்டுள்ள கட்டணமானது தாமதமாகும் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 30 முதல் 50 ரூபாவாக அதிகரிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-10)

## படகு மூழ்கிய விபத்தில் பெண் உட்பட 2பேர் பலி

சிறிய ரக படகொன்று நீரில் மூழ்கியதில் பெண் உட்பட இருவர் பலியாகியுள்ளனர்.குறித்த சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது.அநுராதபுரம், பண்டாரபுளங் குளத்தில் பயணித்துக்கொண்டிருந்த படகொன்று நீரில் மூழ்கியதிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் 19 மற்றும் 21 வயதான இருவரே உயிரிழந்துள்ளனர். இதேவேளை உயிரிழந்த இருவரின் சடலங்களும் அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-10)

## டெங்கு நோய் அதிகரிப்பு சூழலைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிப்பு

நாட்டில் பரவிவரும் டெங்கு நோயைத் தடுக்கும் வகையில் நேற்று திங்கட்கிழமை முதல் சூழலைச் சுத்தப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.இதில், முப்படையினரின் உதவியுடன், பொலி ஸாரும் சிவில் பாதுகாப்புப் படையினரும் கலந்து கொள்ள வுள்ள னர். குறிப்பாக, கொலன்னாவை, கடுவெல, கம்பஹா, தெஹிவளை உட்பட ஏனைய பிரதேச ங்களிலும் இந்த நடவடிக்கை செயற்படுத்தப்படவுள்ளது.இந்த வருடத்துக்குள் மாத்திரம் டெங்கு நோய் கார ணமாக 31 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் இதுவரை 2 ஆயிரத்து 731 பேருக்கு டெங்கு நோய் தொற்றியுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ-10)

## நீதிபதிகளுக்கு அவதூறு ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்குமாறு தெளிவூட்டல்

(கொழும்பு)

நீதிபதிகள் தொடர்பில் பொய்ப்பிரசாரங்களை மேற்கொள்ளும் இணையத்தளங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென சட்டத்தரணிகள் சங்கத்தைத் தெளிவுபடுத்தியுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி ஹேமந்த வர்ணகுலசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

நீதிபதிகள் தொடர்பிலும் மிகவும் தகாத முறையில் அவர்களது கௌரவத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் சில இணையத்தளங்கள் செயற்பட்டு வருகின்றன. அண்மையில் திலின கமகேவுக்கு பிணை வழங்கிய நீதிபதி தொடர்பில் தகாத முறையில் பிரசாரங்கள் முனனெடுகப்பட்டிருந்தன. அதில் அவர் மலேசியாவிற்கு சென்றிருந்ததாகவும் முறையற்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர் ஒரு முறையேனும் மலேசியாவுக்குச் சென்றிருக்கவில்லை என்பதே உண்மையாகும். நீதிபதிகளை அச்சுறுத்தி தமக்கு சாதகமாக தீர்ப்புகளைப் பெற்றுக்கொள்ள முணையும் ஒரு சாரார் செயறபடுவதால் நாம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டத்தரணிகள் சங்கத்தை தெளிவுபடுத்தினோம். இவற்றைப் பெற்றுக் கொண்டு நாம் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளோம் என்றார். (இ-10)

## மாணவியர் ஜனாதிபதியிடம் நினைவுக் குறிப்பு கையளிப்பு

தேசிய போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தோடு இணைந்ததாக சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலய மாணவியரால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நினைவுக் குறிப்பு கையளிக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இடம் பெற்றது.மதுவிலக்கு சங்கத்தின் தலைவர் டானியா காவிந்தி எனும் மாணவி ஜனாதிபதியிடம் இந்நினைவுக் குறிப்பை கையளித்தார். (இ-5)

## பட்டதாரி ஆசிரியர்களை சேவையில் இணைத்துக்கொள்ளுமாறு கோரிக்கை

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினை தீர்ப்பதற்காக ஆசிரியர் பரீட்சைகளில் சித்தியடைந்த பட்டதாரி பயிலுநர்களை பணியில் இணைத்துக் கொள்ளுமாறு இலங்கை ஆசிரியர் சேவையாளர் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன், ஆசிரியர் சேவைக்கான பரீட்சைகள் நிறைவடைந்து இரண்டு வருடங்கள்கடந்துள்ள நிலையில், இவர்களை ஆசிரியர் சேவைகளில் இணைத்துக் கொள்ள நிதி அமைச்சின் நிர்வாக திணைக்களமானது இதற்கான அனுமதியை வழங்கவில்லை என்று இந்த சங்கத்தின் பிரதான செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (இ-10)

## மத்திய வங்கி ஆளுநர்

## யாராக இருந்தாலும் ஊழல் பேர்வழியாக இருந்தால் ஜே.வி.பி.எதிர்க்கும் - ஹேரத்

மத்திய வங்கியின் ஆளுநர் யாராக இருந்தாலும் ஊழல் பேர்வழியாக இருந்தால் எதிர்ப்போம் என ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டின் நிதி நிர்வாகம் மேற்கொள்ளப்படும் மத்திய வங்கியில் தசமதான கொடுக்கல் வாங்கல்களினால் கூட நாட்டு மக்கள் கோடிக்கணக்கான் நட்டத்தை எதிர்நோக்க நேரிடலாம்.

தற்போது நாட்டில் பாரியளவில் நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதற்கு சில பிரதான காரணிகள் உள்ளன.

மகிந்த ராஜபகஷ ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற ஊழல் மோசடிகளினால் நாட்டுக்கு பாரியளவில் பணம் இழக்கப்பட்டிருந்தது.

அதே போன்று மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தின் போது நாடு பாரியளவு கடன்சுமையில் சிக்கியிருந்தது.இந்தக் காரணிகளினால் எழுந்த நிதி நெருக்கடிகள் மேலும் மேலும் நீண்டு கொண்டே சென்றுள்ளது.

தற்போதைய அரசாங்கமும் உறவினர் கொடுப்பனவுகள் மற்றும் ஊழல் மோசடிகளினால் பணத்தை விரயமாக்கி வருகின்றது.



100 நாள் ஆட்சியின் போது மத்திய வங்கியின் ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் 100 நாட்களுக்கு குடும்ப உறுப்பினர் ஒருவருக்கு சலுகை வழங்கினார்.தனது மருமகனுக்கு பிணை முறிகளை விறபனை செய்து இந்த சலுகையை வழங்கியிருந்தார்.

ஜே.வி.பி.இந்த மோசடியான கொடுக்கல் வாங்கல்கள் குறித்து நாடாளுமன்றத்தையும் மக்களையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினா சுனில் ஹந்துன்நெத்தி இது குறித்து அறிவித்திருந்தார்.

மத்திய வங்கியின் ஆளுநரை பணி நீக்குமாறு நாம் கோரியிருந்தோம்.தற்போதைய மத்திய வங்கியின் ஆளுநர் மட்டுமன்றி இதற்கு முன்னர் பதவி வகித்த அஜித் நிவாட் கப்ராலின் ஊழல் மோசடிகள் குறித்தும் நாம் அம்பலப்படுத்தியிருந்தோம் என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## சிவாஜிகணேசனின் முதல் இரட்டை வேடப்படம் உத்மபுத்திரன்

193

...இதில் சிவாஜிக்கு ஜோடி பானுமதி. மற்றும் வி.கே. ராமசாமி, கண்ணாம்பா, எம்.என்.ராஜம், எம்.என். நம்பியார், சாரங்கபாணி ஆகிய அனைவருமே பாத்திரத்தை உணர்ந்து சிறப்பாக நடித்தனர்.

சிவாஜியின் நடிப்புக்காகவே 100 நாட்களைக் கடந்து ஓடிய வெற்றிப்படம் மக்களைப் பெற்ற மகராசி.

**வணங்காமுடி**

கத்திச் சண்டைக் காட்சிகளில் சிவாஜியால் சோபிக்க முடியவில்லை என்ற குறையை வணங்காமுடி போக்கியது. இதில் சிவாஜியின் ஜோடி சாவித்திரி.


சிவாஜியும் பத்மினியும் காதல் காட்சிகளில் நெருக்கமாக நடித்த படம் புதையல்.

ஆங்கில படம் ஒன்றைத் தழுவி பானுமதி தயாரித்த மணமகன் தேவையில் மீசையில்லாமல் தோன்றிய சிவாஜி மேல் நாட்டு நடிகர்களைப் போல வெகு இயல்பாக நடித்தார்.

**வசனம் பேசாமல் நடித்த படம்**

பி.ஆர்.பந்துலு சொந்தமாக தயாரித்து டைரக்ட் செய்த படம் தங்கமலை இரகசியம். இதில் காட்டுவாசியாக நடித்த சிவாஜி படத்தின் பெரும் பகுதியில் வசனம் பேசாமல் நடித்தார்.

இந்தப்படத்தில் சிவாஜியின் ஜோடி ஜமுனா. இதில்



இடம்பெற்ற அமுதைப் பொழியும் நிலவே என்ற பாடல் காலத்தை வென்று இன்றும் வாழ்கின்றது.

**அம்பிகாபதி**

என்.கே.தியாகராஜபாகவதர் - எம்.ஆர்.சந்தனா லக்ஸ்மி நடித்து எல்லிஸ் ஆர்.டங்கன் இயக்கிய அம்பிகாபதி 1937 இல் வெளிவந்து மகத்தான வெற்றி பெற்றது.

அதற்கு 20 ஆண்டுகளுக்குப்பிறகு அதே கதையை ஏ.எல்.சீனிவாசன் படமாகத் தயாரித்தார். சிவாஜிகணேசன் அம்பிகாபதியாகவும் பானுமதி அமராவதியாகவும் நடித்தனர்.

இதில் ஒரு அதிசயம் என்னவென்றால் பாகவதாரின் அம்பிகாபதிக்கு இசையமைத்த அதே ஜி.ராமநாதன் சிவாஜியின் அம்பிகாபதிக்கும் இசையமைத்தார். பழைய அம்பிகாபதியில் நடித்த என்.எஸ்.கிருஸ்ணன் - டி.ஏ.மதுரம் ஜோடி, புதிய அம்பிகாபதியிலும் இடம்பெற்றது. பாகவதர் போலவே டி.எம். சௌந்தரராஜனும் இனிமையாக- அருமையாக பாடினார்

இவ்வளவு சிறப்புக்கள் இருந்தும் படம் பிரமாதமாக ஓடவில்லை. காரணம் தலைமுறை இடைவெளி.

இப்படம் தயாராகிக் கொண்டிருந்தபோது கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் காலமாகி விட்டார். அவருக்கு சிலை அமைப்பது போல் படத்தில் ஒரு காட்சியை அமைத்திருந்தர்கள்.

**நடனம்**

ராணி லலிதாங்கி ரசிகர்களின் பொறுமையை சோதித்த படம் என்றாலும் இறுதியில் இடம்பெற்ற சிவாஜியின் நடனம் தில்லை நடராஜர் ஆடிய தாண்டவம் இப்படித் தான் இருக்குமோ என்று நினைக்க வைத்தது

சிவாஜிகணேசனின் முதல் இரட்டை வேடபடமான உத்தம புத்திரன் அவருடைய மாறுபட்ட நடிப்பை எடுத்துக் காட்டியது.

1958 இல் சிவாஜிகணேசன் உத்தம புத்திரன், பதிபக்தி, சம்பூர்ண ராமாயணம், பொம்மைக் கல்யாணம், அன்னையின் ஆணை, சாரங்கதரா, சபாஷ் மீனா, காத்தவராயன் ஆகிய 8 படங்களில் நடித்தார்.

**உத்தம புத்திரன் தயாரிக்க போட்டா போட்டி!**

சிவாஜிக்கு மிகவும் புகழ் தேடித்தந்த படம்- உத்தம புத்திரன். இப்படம் தயாரிக்கப்பட்ட பின்னணியில் ஒரு சுவையான கதையே உண்டு.

1940 இல் பி.யு.சின்னப்பாவை இரட்டை வேடத்தில் நடிக்க வைத்து உத்தம புத்திரன் படத்தை மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர்.சுந்தரம் தயாரித்தார். அதுதான் தமிழில் முதல் இரட்டை வேடப் படம். சின்னப்பாவுக்குப் புகழ் தேடித்தந்த படம்.

(தொடரும்)

# அமரர் சுப்பிரமணியத்தின் வாழ்க்கைச் சுவடுகள்



பல சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்ட கொக்குவில் கிராமத்தின் புகழ்பூத்த குடும்பமாகிய திரு. திருமதி மாணிக்கம் பாக்கியம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக மாணிக்கம் சுப்பிரமணியம் 28.01.1940 இல் பிறந்தார்.

தனது குடும்ப நிலை காரணமாக 16ஆவது வயதில் கல்வியை நிறுத்திக்கொண்டு கொழும்பு மாநகரத்திற்கு வியாபாரம் செய்வதற்காக சென்றார். அவரது முற்பிறப்பில் செய்த பயன் காரணமாக பெரும் வர்த்தகராகக் கொழும்பு மாநகரத்தில் உயர்வு பெற்றார். செல்வத்தைத் தேடிக் கொண்டார்.

1971 ஆம் ஆண்டு கொக்குவில் கிராமத்தைச் சேர்ந்த திரு. திருமதி திருச்செல்வம் பூமணி தம்பதிகளின் மூத்த புதல்வி மாலதியைத் திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக நடத்தி மூன்று ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் பிள்ளைச் செல்வங்களாகப் பெற்று இன்பமாக கொழும்பு மாநகரத்தில் சகல சிறப்புக்களுடன் வாழ்ந்து வந்தார்.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்கள் எப்பொழுதும் கல்லூரித் தாயை மறந்தது கிடையாது. அவர்கள் எங்கெல்லாம் சென்று வாழ்ந்தாலும் அன்னையின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவராகவே உள்ளார்கள். அன்னையின் உயர்ச்சிக்கு அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். கல்லூரிக்குத் தேவையான பௌதீக வளங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இக்கல்லூரிக்குப் பௌதீக வளங்களை வாரி வளங்கும் வரிசையில் முதன்மையானவராக ஒப்பற்ற கொடை வள்ளல் அமரர் மாணிக்கம் சுப்பிர மணியம் மாநிலத்தால் போற்றப்படுகின்றார்.

கல்லூரிசிறக்கவேண்டும்என்ற ஒரே நோக்கத்துடன் மூன்று மாடிக்கட்டத்தை 2004 ஆம் ஆண்டு கல்லூரிக்கு அமைத்துக் கொடுத்தார். இவருடைய இப்பணிபோற்றுதற்தக்கது. கல்லூரியின் வரலாற்றிலே இவருக்கு ஒரு நிரந்தர இடமுண்டு. இவரின் வள்ளல்தன்மையாக விளங்கும் இந்த மூன்று மாடிக்கட்டடத்திற்கு நூற் றாண்டு மண்டபம்என்றுபெயர்சூட்டப்பட்டது.

அதோடு அடித்தளத்தில் அமைத்துக்கொடுக்கப்பட்ட சுப்பிரமணிய மண்டபம் ஒரு கலைக்கூடமாக ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது.

கொக்குவில் இந்துக்கல்லூரியில் 2011 ஆம் ஆண்டு மைதானத்தில் ஒரு பார்வையாளர் அரங்கையும் ஒரு திறந்தவெளி அரங்கையும் பல மில்லியன் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

மேலும் கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் சிறார்கள் கல்வி கற்பதற்கு சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தின் இரண்டாம் மாடியினை அமைத்துக் கொடுத்துள்ளார். கொழும்பில் பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரிக்கு மூன்று மாடிக்கட்டடம் ஒன்றையும் தமிழ்ச்சங்கத்திற்கு மூன்றாவது மாடிக்கட்டடத்தையும் விவேகானந்தா சபைக்கு பாலர் பாடசாலை கீழ் மாடிக்கட்டடத்தையும் உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்தில் விளையாட்டு மைதானத்திற்கு 6 பரப்புக் காணியைக் கொள்வனவு செய்து கொடுத்தது மட்டுமல்லாமல் திறந்தவெளி அரங்கு ஒன்றையும் கொழும்பு இராமநாதன் மகளிர் கல்லூரிக்கு இரண்டு மாடிக்கட்டடத்தையும் யா/இணுவில் இந்துக் கல்லூரிக்கு ஒரு வகுப்பறைக் கட்டடத்தையும் கீரிமலை சிவ பூமியின் யாத்திரிகர் மடத்தின் ஒரு பகுதியையும் அமைத்துக் கொடுத்துள்ளார்.

மேலும் கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வேலாயுத சுவாமி கோயில் தர்மகர்த்தா சபை தலைவராக இருந்து பல திருப்பணிகளைக் காலத்திற்கு காலம் ஆற்றிக் கொண்டு வந்தார். தமிழ்ச்சங்கத்தின் நம்பிக்கை நிதியத்தின் தலைவராகவும் அகில இலங்கை இந்துமாமன்ற உறுப்பினராகவும் கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க நம்பிக்கை நிதியத்தின் போஷகராகவும் கொக்குவில் மக்கள் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினராகவும் இருந்து வந்தார்.

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பகுதி முருகன் ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தை அலங்கரிக்கும் வகையில் ஒரு வளைவு ஒன்றை அமைத்துள்ளார். அத்தோடு ஆலயத்தில் கல்யாண மண்டபம் இல்லாத குறையை நிவர்த்தி செய்ய ஆலயத்தின் தெற்கு வீதியில் காணி ஒன்றை கொள்வனவு செய்து அதோடு பெரியதொரு சகல வசதிகளும் கொண்ட ஒரு கல்யாண மண்டபத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளார். இம் மண்டபம் மூலம் இன்று ஆலயத்திற்கு பெருமளவு வருமானம் கிடைக்கின்றது.

தான் பிறந்து உலாவிய பிரதேசமாகிய கொக்குவில் மேற்கில் சனசமூக நிலையம் முன்பள்ளி, ஆரம்ப சுகாதார நிலையம் என்பவற்றை இயக்குவதற்கு இரண்டு மாடிக்கட்டடம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளார். இக்கட்டடம் ஆனைக் கோட்டை வீதியில் கம்பீரமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. அதில் சகல செயற்பாடுகளும் சிறந்த முறையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

இவ்வாறாகப் பல பணிகளை சமூகத்திற்கு ஆற்றி வந்தார். இவரது பணி என்று நிலைத்து நீடித்து நிற்கும்...

சிவசுப்பிரமணியம் செந்தில்குமரன்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்

– திருவள்ளுவர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## துரியோதனனைக் கொல்வதற்கு 18 நாட்கள் காத்திருந்த கண்ணன்

குருஷேத்திரத்தில் மகாபாரதப்போர் 18 நாட்கள் நடந்தன. வலம்புரிச் சங்கெடுத்து நாதம் எழுப்பி போர் தொடங்குகிறது.

பாண்டவர்களும் கௌரவர்களும் போர் தொடுக்கத் தயாராகின்றனர். வீஷ்மர், துரோணர், அசுவத்தாமா உள்ளிட்டவர்கள் துரியோதனன் பக்கம் நிற்க, கண்ணை பரமாத்மா அருச்சுனனுக்கு தேர்ச் சாரதியாக போர் தொடங்குகிறது.

வில்லுக்கு விதுரன் என்பான் நடுநிலை தவறா நன்நெறி காக்க தலைப்பட்டான்.

18 நாள் போரில் இருதரப்பிலும் ஏகப்பட்ட இழப்புக்கள். முதலிலேயே துரியோதனனைக் கொன்றிருந்தால் போர் நடந்திருக்காது என்று விமர்சனம் செய்வோரும் உளர்.

அவர்களின் விமர்சனம் அவர்கள் மட்டில் நியாயமாயினும் எதற்கும் ஒரு காலமும் நேரமும் தேவைப்படுகிறது. இது தவிர்க்க முடியாத நியதி.

எனவே துரியோதனனைக் கொல்வதற்கு போர் தொடங்கி 18 நாள் தேவையாகிறது. 18ஆவது நாள் நேரம் நெருங்க துரியோதனனின் தொடையில் தாக்கு மாறு பார்த்த சாரதி சைகை செய்கிறான்.

நேரமும் காலமும் விதியும் நெருங்க நெடுந்தோள் கொண்ட வீமன் கதாயுதத்தால் துரியோதனனின் தொடையில் அறைய அவன் உயிர் பிரிகிறது.

ஆக, எதுவும் எடுத்த எடுப்பில் சரிவராமாட்டாது. எதற்கும் நேர காலம் உண்டு என்பது ஏற்புடையதே. அதனால்தான் **அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா...** என்று ஔவைப் பாட்டி பகர்ந்தார்.

இதை நாம் சொல்லும் போது ஏன் இந்தக் கதை என்று நீங்கள் கேட்கலாம். இதற்கும் ஒரு காரணம் உண்டு.

இன்றைய தமிழ் அரசியல் என்பது மிகப்பெரிய தொரு பலவீனத்தில் உள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ் மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டுக்குள் தீர்வு என்று கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அறிவித்திருந்தாலும் அதற்கான சாத்தியம் எதுவும் இல்லை என்பதற்கு புறநிலைச் சூழ்நிலை சான்றாக அமைகிறது. அப்படித்தான் 2016க்குள் தீர்வு என்றால், அது ஒற்றை ஆட்சிக்குள் என்பதாக மட்டுமே இருக்கும்.

ஆக, கூட்டமைப்பின் உத்தரவாதங்கள் அவர்களின் செயற்பாடுகளில் தமிழ் மக்கள் மிகுந்த விரக்தி அடைந்துள்ளனர்.

இதற்கு மேலாக கூட்டமைப்புக்குள் இருக்கக் கூடிய அங்கத்துவ கட்சிகளே கூட்டமைப்பை விமர்சிக்கின்ற அளவு நிலைமை உச்சமடைந்து விட்டது.

வடக்கு மாகாண சபையை திறமையாக இயங்க வைக்க முடியாமைக்கான காரணம் என்ன? என்பதை கூட்டமைப்புக்குள் இடம்பெறும் கட்சி ஒன்றின் தலைவர், இரா.சம்பந்தரிடம் தெட்டத்தெளிவாக–பகிரங்கமாக கூறியுள்ளார்.

அதேநேரம் எதற்கும் நாங்கள் யோசித்து முடிவு எடுப்போம்; அது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம்; பொறுத்திருந்து பார்ப்போம் என்ற இரா.சம்பந்தரின் பதில்கள் தொடர்ந்து செல்லுபடியாகும் என்று நினைப்பது மடமைத்தனம்.

ஆகவே இப்போது இருக்கின்ற சூழ்நிலை என்பது வீமன், துரியோதனனின் தொடையில் அடித்த நேரமாக உள்ளது.

இந் நேரத்தில் கூட்டமைப்பை புனரமைப்புச் செய்தல் அல்லது மாற்று அரசியல் தலைமையை உருவாக்குதல் என்ற வேலைத் திட்டத்தை தமிழ் மக்கள்மீது பற்றுக் கொண்ட தமிழ் அரசியல் நேர்மையாளர்களும் புத்திஜீவிகளும் செய்தாக வேண்டும்.

இந்நேரத்தில் இதைச்செய்தால் துரோகிகள்; அரசாங்கத்தின் தரப்புக்கள் பணம் வாங்கிக் கொண்டு செய்கின்றனர் என்ற வழமையான கோஷங்கள் சக்தி இழந்து போய்விடும்.

ஆகையால்காலம்சரியாகஅமைந்துள்ளது. எனவே தமிழ் மக்களின் உரிமைக்காக– தமிழ் மக்களின் ஏழ்மையைப் போக்குவதற்காக– போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் அவலங்களை நீக்குவதற்காக– விதவைகளாக நின்று குடும்பச் சுமையைத்தாங்கும் எங்கள் உறவுகளுக்கு உதவுவதற்காக புதியதொரு அரசியல் கட்டமைப்புத் தேவை.

இதைச் செய்யத்தவறினால்அல்லது உரியவர்களை திருத்தத் தவறினால் எங்கள் நிலைமை மிகப்பெரும் கவலைக்கிடமாகி விடும்.

## மின் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5.30 மணி வரை மன்னார் பிரதேசத்தில் சவேரியார் குளம் பிரதேசத்தில் மின்சாரம் தடைப்படும். (இ-9)

## விழுமியங்கள் பற்றிய விவாத போட்டிக்கான கருத்துகள்-10
## நேர்மையின் வெற்றி

உலகே மாறினாலும் எதனாலும் என்றும் மாறாதது அன்பு. நம்மால் நேசிக்கப்படுகின்றவர்களுக்குப் புரிகிறதோ இல்லையோ, நாம் நேசித்துக்கொண்டே இருப்பது என்பது சாத்தியம் தானா? நாம் அனைவரும் அறிந்த, புரிந்தும் புரியாத புதிராகிய ஒருவரால் அது முடியும்.

இறைவன் - அவர் ஒருவரிடமிருந்தே கால வரையறையற்ற காத்திருத்தலை எதிர்பார்க்க முடியும். பரம்பொருளின் அன்பு சாதாரண மனிதர்களால் புரிந்து கொள்ள முடியாத கள்ளம் கபடமில்லாத தாயன்பு. பன்றிக் குட்டிகளைப் போலச் சீரழிந்து போய் விடுகின்ற ஆத்மாக்களின் துன்பகரமான அழுகுரலைக் கேட்டதும் அவர்களுக்கு ஞானப்பால் ஊட்டி, அறியாமை இருளை அகற்றுவதற்காக பன்றியின் அசுத்தத்திற்கு ஒப்பிடத்தக்க. தூய்மையற்ற மனித சரீர உருவெடுத்து, தானே இப்புவியில் அவதரிக்கும் தாயன்பு அன்பே சிவமாகிய சிவபெருமானுடைய அன்பு.

இறைவனைப் பற்றி உலகெங்கும் பற்பல அபிப்பிராயங்கள். பற்பல நம்பிக்கைகள். அவர் எப்படிப்பட்டவரோ அப்படி அவரை நாம் புரிந்து கொள்ளா விட்டாலும் அதனைக் கண்டு கொள்ளாது, தொடர்ந்தும் நம்மை நேசிக்கக் கூடியவர் அவர். முழுமையாக நமக்கே நமக்காக நம்மை நேசிக்கக் கூடியவர் கடவுள். அவரது அன்பின் நிமித்தம் எவரும் வேதனைப்படுவதில்லை. மாறாத அன்பு என்ற சுபாவம் உடையவர்கள் இலகுவில் புறக்காரணிகளின் தாக்கத்திற்கு உள்ளாகுவதில்லை. இவர்கள், பிறருடைய ஆதிக்கங்களுக்கு உட்பட்டு அல்லது அன்புக்குரியவர்களின் எதிர்பாராத பிரதிபலிப்புகளின் வசப்பட்டு,.... தாம் நேசிப்பவர்கள் மீதான அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். தமது முடிவிலே தெளிவாக இருப்பதோடு இலேசில் எவரிடமும் ஏமாந்து போகவும் மாட்டார்கள்.

"நீ யாராக இருந்தாலென்ன, எப்படிப்பட்டவனாக இருந்தாலென்ன, எத்தகைய பின்னணி உடையவனாக இருந்தாலென்ன இப்போதும் எப்போதும் நீ என்னுடையவன்" என்று நல்ல, நல்லதற்ற அனைத்து இயல்புகளுடனும் எத்தகையதொரு சந்தர்ப்ப சூழ்நிலையிலும் ஒருவரை மனமார ஏற்றுக் கொள்வது தூய அன்பு. 'எங்கிருந்தாலும் எப்போதும் வாழ்க!' என்று மனம், நிறைவடைந்து வாழ்த்தும்.

**சுகதாமம் (கலட்டிச் சந்திக்கு அருகே பிறவுண வீதியில்) மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டிக்கு மாணவர்கள் தம்மைத் தயார் செய்யும் பொருட்டு இக்கருத்துகள் பிரசுரிக்கப்படுகின்றன. மேலதிக விபரங்களுக்கு 077-261 2088, 077-221 5102 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்ளவும்.**

யாழ்ப்பாணம் கலட்டிச் சந்திக்கு அருகே உள்ள சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு இடம் பெறும் விழுமியங்கள் பற்றிய விவாதப்போட்டியில் நேற்று 27.06.2016 ஆரம்பமாகிய விழுமியங்கள் பற்றிய விவாதப் போட்டி விபரங்கள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த போட்டி முடிவுகள் (27-06-2016)

முதலாம் சுற்று :

போட்டி 1

1)மு/வித்தியானந்தா கல்லூரி

2)யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

போட்டி 2

1)யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

**இரண்டாம் சுற்று**

**தலைப்பு: இழக்கக் கூடாதது எது? மரியாதையா? அன்பா?**

1)மு/வித்தியானந்தா கல்லூரி

2)யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

**மூன்றாம் சுற்றுக்குத் தெரிவாகிய அணி**

மு/வித்தியானந்தா கல்லூரி

**இன்றைய போட்டி விபரங்கள் (28-06-2016)**

காலை 9.00- 1.00

போட்டி 1 வெற்றியின் வெளிப்பாடு எளிமையா? பணிவா?

போட்டி 2 வாழ்க்கைத் தரத்தின் இரகசியம் பொறுப்புணர்ச்சியா? சுதந்திரமா?

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 077 261 2088, 077 221 5102 என்ற தொலைபேசி இலக்கங்களுடன தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பொதுமன்னிப்புக் காலம் 12-ம் திகதியுடன் நிறைவு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சினால அறிவிக்கப்பட்டுள்ள பொது மன்னிப்புக் காலத்தில் 8 ஆயிரத்து 145 பேரை சட்ட ரீதியாக சேவையில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத்ஜெயவீர தெரிவித்துள்ளார்.

இதன்படி, இராணுவத்தில் இருந்து 7 ஆயிரத்து 415 பேர், கடற்படையில் இருந்து 417 பேர் மற்றும் விமானப்படையில் இருந்து 313. பேர் இவ்வாறு சட்ட ரீதியாக விலக்க நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, எதிர்வரும் யூலை12ம் திகதியுடன் குறித்த பொது மன்னிப்புக் காலம் நிறைவடையவுள்ளது.

அந்தக் காலப் பகுதிக்குள் சேவையில் இருந்து தப்பிச் சென்றவர்கள் சட்ட ரீதியாக விலக நடவடிக்கை எடுக்குமாறும் ஜெயநாத் ஜெயவீர கோரியுள்ளார். (செ-12)

## தனியார் பேருந்துகள் சேவை புறக்கணிப்பு
## கிராமமக்கள் நேற்று பெரும் அவதி

வடக்கு மாகாண தனியார் பேருந்துகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையால் வவுனியா மாவட்ட கிராம மக்கள் மற்றும் மாணவர்கள் நேற்று கடும் அவதிக்குள்ளாகினர்.

இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்துகளுக்கிடையில் இணைந்த நேர அட்டவணையை அமுல்படுத்தக் கோரியும், இரு பேருந்துகளையும் ஒரே இடத்தில் இருந்து சேவை ஆரம்பிக்க கோரியும் வடமாகாண தனியார் பேருந்துகள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன.

இதன்காரணமாக இ.போ. சபை பேருந்துகளில் சனநெரிசல் ஏற்பட்டுள்ளதுடன், கிராமங்களுக்கு செல்லும் பலரும் போக்குவரத்து வசதி இன்றி அவலப்படும் நிலை காணப்பட்டது. மாணவர்கள், நோயாளிகள், தொழிலாளர்கள் எனப் பலரும் போக்குவரத்து வசதி இன்றி அவதிப்பட்டனர்.

இதேவேளை, வவுனியா தனியார் பேருந்து உரிமையாளர்கள் தமது பிரச்சினைகளை வலியுறுத்தி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றினை கையளித்திருந்தனர்.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட பேருந்து உரிமையாளர்களை சந்தித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே.கே. மஸ்தான், வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா ஆகியோர் உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தனர். (2-250)

## வீதி விபத்துக்களைத் தடுக்க கருத்தரங்கும் செயலமர்வும்

ஆட்டோ உரிமையாளர்கள், சாரதிகளுக்கான போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் வீதி விபத்துக்களை தடுப்பது தொடர்பான கருத்தரங்கும் செயலமர்வும் இன்று செவ்வாய்க்கிழமை வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பொது நூலக மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெறும்.

வட மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை நகர சபையினரால் நடத்தப்படும் மேற்படி செயலமர்வில் அனைத்து ஆட்டோ உரிமையாளர்களும் சாரதிகளும் பங்கு பற்றி பயன்பெறமுடியும்.

அதேவேளை பயிற்சியின் நிறைவில் பங்குபற்றிய அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

எதிர்காலத்தில் ஆட்டோக்கள் சேவையில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கும் நடைமுறையின்போது இச்சான்றிதழ் அவசியமான தொன்றாகும் என வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற செயலாளர் அறிவித்துள்ளார். (இ

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



ஒருவேளை புகை குடிப்பதற்கு வேண்டிய புகையிலையைத் தயாரித்துக் கொடுத்தாவது ஒரு மனிதனுக்குப் பணிசெய்தல் இலட்சக் கணக்கான தியானங்களைவிட மிக மிக மேலானது என்பதை அறியும் காலமும் ஒருவருக்கு வரும்.

என்னைத் தொடாதே என்பது உனது கொள்கையாகவும் பொங்கல் பானை உனது தெய்வமாகவும் இருக்கும்வரை ஆன்மீக முன்னேற்றம் உனக்குக் கைகூடாது.

எந்தச் செயலின் பயனும் நன்மை, தீமைகளின் கலப்பாகும். தீமை கலவாத நற்செயல் எதுவும் இல்லை. தீயைச் சூழும் புகைபோல் சிறிதாவது தீமை எப்போதும் செயலை ஒட்டியிருக்கின்றது. மிகப் பெரு நன்மையையும் மிகக் குறைவான தீமையையும் தரும் செயல்களையே நாம் செய்யவேண்டும்.

திலீபன் சிறப்பாட்டம்

# ஹென்றீசியன் சவால் கிண்ணம் முல்லை.சென்யூட் வெற்றி





இளவாலை யங்ஹென்றீசியன் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் அழைக்கப்பட்ட முன்னணிக் கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் "ஹென்றீசியன் சவால் கிண்ணம் 2016" உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

அண்மையில் நடைபெற்ற முதலாவது காலிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து முல்லைத்தீவு சென்யூட் அணி மோதியது.

90 நிமிடங்களைக் கொண்ட இப்போட்டியில் இரு அணிகளும் ஆரம்பம் முதல் வேகமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதுடன் எதிரணி இலகுவில் கோல் வாய்ப்புக்களை ஏற்படுத்தாவண்ணம் நன்கு திட்டமிட்ட முறையில் ஆட்டத்தையும் வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் முதல் பாதியாட்டத்தின் 23 வது நிமிடத்தில் சென்யூட் அணியின் நட்சத்திர வீரர் பியூஸ்லஸ் அடித்த சிறப்பான மூலை உதையினை பின்கள வீரர் திலீபன் வேகமாக தலையால் முட்டிக் கோலடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

எனினும் அடுத்த நிமிடமே கிடைத்த மிக இலகுவான வாய்ப்பினை சென்நீக்கிலஸ் அணியின் நட்சத்திர வீரர் அமிலன் தவறவிட்டு அதிர்ச்சியளித்தார்.

ஆட்டத்தின் இரண்டாவது பாதி முழுவதும் சென் நீக்கிலஸ் அணி ஆட்டத்தை சமன் செய்யப் போராடியது. எனினும் அவர்களின் நடுக்கள வீரர்களால் பலதடவை தூரமாக அடிக்கப்பட்ட (Long pass) பந்துப் பரிமாற்றங்களை பின்கள வீரர் (centre defender) திலீபன் தலையால் முட்டி தடுத்திருந்தார்.

இறுதிப் பகுதியில் கிடைத்த சில வாய்ப்புக்களை இரு அணிகளும் வீணடிக்க 1:0 எனும் அடிப்படையில் வெற்றிபெற்று முதல் அணியாக அரையிறுதிக்கு முன்னேறியது முல்லை சென்யூட் அணி.

வெற்றிக் கோலடித்ததுடன் சென் நீக்கிலஸ் அணியின் பல கோல் வாய்ப்புக்களைத் (goal move) தடுத்த சென்யூட் அணியின் பின் கள வீரர் திலீபன் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டதுடன் அவருக்கான கேடயத்தினை வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் யுவராஜ் வழங்கி வைத்தார். (கு)

# ஆசிய பல்கலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கு

## யாழ். வீரர்கள் மூவர் தெரிவு



சீனாவில் நடைபெறவுள்ள 2 ஆவது ஆசிய பல்கலைக்கழகங்களுக்கிடையேயான 3×3 கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிக்கான இலங்கைப் பல்கலைக்கழக தேசிய ஆண்கள்,பெண்கள்அணித் தெரிவானது கடந்த 17.06.2016 அன்று பேராதனைப்பல்கலைக்கழகத்தில் இலங்கைப்பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்டது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட வீரர்கள் பு. அபிகரன் (மருத்துவபீட மாணவன்), கு.துஸ்யந்தி (கலைப் பீட மாணவி) மற்றும் அ.விதுரா (கலைப்பீட மாணவி) ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இப்போட்டியில் முதன் முறையாக இலங்கைப் பல்கலைக்கழக அணி பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி சுற்றுப்போட்டியானது எதிர்வரும் ஜுலை மாதம் 19, 24 ஆம் திகதி வரை சீனாவிலுள்ள மக்கோவில் நடைபெறவுள்ளது. (கு)

# யாழின் கில்லாடி யார்? இளவாலை சென்.லூட்ஸ் வெற்றி



அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் 97 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு நடத்தப்படுகின்ற அணிக்கு 11பேர் கொண்ட சரஸ்வதியின் யாழின் கில்லாடி யார்? உதைபந்தாட்ட தொடரில் அண்மையில் நடைபெற்ற போட்டியில் மணற் காடு சென்.அன்ரனீஸ் வி.கழகத்தை 0:2 என்ற கணக்கில் வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது இளவாலை சென்லூட்ஸ் வி.கழகம். (கு)

# கிளிநொச்சி சென்.மேரிஸை வீழ்த்தியது பாசையூர் சென்.அன்ரனிஸ் வி.கழகம்







பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் 21.06.2016 அன்று பலம்வாய்ந்த அணிகள் மோதிய போட்டியாக இடம்பெற்ற போட்டியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் வி.க எதிர்த்து கிளிநொச்சி சென்.மேரிஸ் வி.க மோதியது. ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனிஸ் முதலாவது கோலினை பதிய பதிலுக்கு 19 ஆவது நிமிடத்தில் சென்.மேரிஸ் கனிஸ்கராஜா கோலினை போட்டு சமப்படுத்தினார்.

முதற்பாதி ஆட்டம் 1:1 என சமநிலையில் முடிவடைய இரண்டாம் பாதி ஆட்டத்தின் 54 ஆவது நிமிடத்தில் டேமியன் கோல் காப்பாளருக்கு மேலால் தூக்கிப்போட்டு கோலினை அடிக்க 2:1 என சென்.மேரிஸ் முன்னிலை பெற்றது. மிகுதி நேர ஆட்டத்தில் கோலினை அடிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்ட சென்.அன்ரனிஸ். கலிஸ்ரரின் மூலமாக 75 ஆவது நிமிடத்தில் இரண்டாவது கோலினை பதிவு செய்ததன் மூலம் சமன் செய்தது.

தொடர்ந்தும் 77 ஆவது நிமிடத்தில் பேற்று பிரதேசத்திற்கு சற்று வெளியே கிடைக்கப்பெற்ற சுயாதீன உதையினை சென்.அன்ரனிஸ் கலிஸ்ரர் கோல் கம்ப மூலைக்கு உதைந்து அட்டகாசமான கோலாக மாற்றி ரசிகர்களை ஆரவாரப்படுத்தி 3:2 என முன்னிலை பெற்றது.

தொடர்ந்த நிமிடங்களில் கோலினை பெற சென்.மேரிஸ் கடுமையாக முயற்சித்த போது பேற்று பிரதேசத்திற்கு சற்று வெளியே கிடைத்த சுயாதீன உதையினை கோல் கம்பத்திற்கு மேலால் அடித்து தவறவிட்டனர்.

ஆட்ட நேரத்திற்கு இரண்டு நிமிடங்கள் எஞ்சியிருக்கையில் சென்.அன்ரனிஸ் அஜித்குமார் மேலும் ஒரு கோலினை அடிக்க ஆட்ட நேர முடிவில் 4:2 என பாசையூர் சென்.அன்ரனிஸ் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.அன்ரனிஸ் வீரர் கலிஸ்ரர் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்திலனை ஹரச் பிராந்திய முகாமையாளர் வி.கவிர்செல்வன் வழங்கி கௌரவித்தார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய போட்டி

அமரர்களான கந்தசாமி, குகதாஸ், ஜெயலட்சுமி, பார்த்தீபன் ஞாபகார்த்தமாக சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளங்கதிர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தீருவில் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)









யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான தடகள இறுதிப்போட்டிகள் அண்மையில் நெடுந்தீவில் நடைபெற்றது. அதன் சில பதிவுகள்

## 100 கிலோ கேர...

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாகக் கடத்தி வரப்பட்டு விநியோகிக்கப்பட்ட 100 கிலோ கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் இருவர் கைது செயப்பட்டுள்ளதாக காங்கேசன்துறை பிராந்தியத்துக்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம். ஜஃபர் தெரிவித்தார்.

கஞ்சா கடத்தப்படுவதாக யாழ்ப்பாணத்தில் உள்ள விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

கடல் மார்க்கமாக கஞ்சா கடத்தி வரப்பட்டு வளலாய் கடற்கரைப் பகுதியில் கைமாறிய நிலையில் அக்கஞ்சாவினை கைப்பற்றிய விசேட அதிரடிப்படையினர் கஞ்சாவை கைமாற்றிப் பெற்றுக்கொண்ட வளலாய் தெற்கைச் சேர்ந்த 34 வயதுடைய இளைஞர் மற்றும் சேந்தான்குளம் கீரிமலையைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என இருவரை கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவினையும் கைது செய்யப்பட்ட இருவரையும் விசேட அதிரடிப்படையினர் அச்சுவேலிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா ஒரு கிலோ 5 இலட்சம் ரூபாய் வீதம் சுமார் 5 கோடி ரூபாய் மதிக்கத்தக்கது என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கைது செய்யப்பட்ட இருவரிடமும் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-4-60)

## கிணற்றினுள் வீழ்...

மாணவியே நீரில் மூழ்கி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். கிணற்றினுள் வீழ்ந்த வாளியினை பிரஸ்தாப மாணவி எடுக்க முற்பட்டபோதே இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

மேற்படி சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதை அடுத்து உயிரிழந்தவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை தீவகத்துக்கு பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி எஸ்.தியாகராஜா மேற்கொண்டார். பிரேத பரிசோதனையின் பின்னர் மாணவியின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-30)

# அரியநேத்திரனிடம் நேற்று சி.ஐ.டியினர் விசாரணை

(கொழும்பு)

தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் நேற்று குற்றப்புலனாய்வு துறையினரால் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றப்புலனாய்வுத் தலைமையகத்தில் நடைபெற்ற இந்த விசாரணையில், 10 வருடங்களுக்கு முன்பு மட்டக்களப்பு புறநகர் பகுதியில் இடம் பெற்ற அரசியல் படுகொலை சம்பவமொன்று தொடர்பாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது.

2004-ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் தேர்வாகியிருந்த கிங்ஸிலி இராசநாயகம் படுகொலை தொடர்பான விசாரணைக்காகவே தான் அழைக்கப்பட்டிருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அக்காலப் பகுதியில் விடுதலைப்புலிகளின் பிராந்திய அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த கௌசல்யனின் உறவு முறை பற்றி கேட்டதாகவும் அவர் கூறினார்.

2004-ஆம் ஆண்டு தொடக்கம் முதல் 2015-ஆம் ஆண்டு வரை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த பா.அரியநேத்திரன், 2004-ஆம் ஆண்டு தேர்தலில் விருப்பு வாக்குகள் அடிப்படையில் தேர்வாகவில்லை.

விருப்பு வாக்கு அடிப்படையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவராக கிங்ஸிலி இராசநாயகம் தேர்வான போதிலும், அவர் பதவிப் பிரமாணம் செய்யாமலே ஒரு சில நாட்களில் பதவியை ராஜினாமா செய்தார்.

விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாகவே இவர் ராஜினாமா செய்து கொண்டதாக அவ்வேளையில் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டது.

அந்த வெற்றிடத்திற்கு விருப்பு வாக்குகள் அடிப்படையில் அடுத்த இடத்திலிருந்த பா. அரியநேத்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

கிங்ஸ்லி இராசநாயகம் பதவியை இராஜினாமா செய்த ஆறு மாதங்களுக்கு பிறகு, அக்டோபர் 19-ஆம் திகதியன்று மட்டக்களப்பு புறநகர் பகுதியிலுள்ள அவரது காணியை பார்வையிட சென்றிருந்த போது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த கொலைக்கு விடுதலைப்புலிகள் தான் பொறுப்பு என ஏற்கெனவே அவரது குடும்பத்தினரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2004-க்கு முற்பட்ட காலத்தில் விடுதலைப் புலிகள் அமைப்புடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்ததாக கூறப்படும் கிங்சிலி இராசநாயகம், தமிழர் புனர்வாழ்வு கழகத்திலும் பொறுப்பான பதவிகளை வகித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் 2004-ஆம் ஆண்டில் விடுதலைப்புலிகள் அமைப்பில் ஏற்பட்ட பிளவின் பின்னர், இவர் கொண்டிருந்த நிலைப்பாடு காரணமாக அந்த அமைப்பினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (செ-12)

## புதிய கண்டுபிடிப்பு கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் பனங்காட்டில் புத்தி கூர்மை எனும் தொனிப்பொருளில் "புதிய கண்டுபிடிப்பு கண்காட்சி" நாளை 29 ஆம் திகதியும் நாளை மறுதினம் 30 ஆம் திகதியும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இக் கண்காட்சியில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

## விடுதலையாகும் போ...

காணாமற்போனவர்களை வெளிப்படுத்தக்கோரியும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் நேற்றையதினம் நல்லூர் ஆலய முன்றலில் காணாமற்போனவர்களின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர். அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற காலப் பகுதியில் நாம் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்த போது "ஒருநாள் போராளிகளாக இருந்தாலும் தம்மிடம் வந்து சரணடையுமாறு இலங்கை இராணுவம் அறிவித்திருந்தது.

அதற்கமைய 2 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட போராளிகளை வட்டுவாகலில் வைத்து நேரடியாக இராணுவத்திடம் ஒப்படைத்திருந்தோம்.

ஆனால் இதுவரை உயிரோடு ஒப்டைத்தவர்களின் மூடிவும் வரவில்லை. காணாமல் போனவர்களின் முடிவும் எமக்கு கிடைக்கவில்லை. அனைவரையும் நம்பி ஏமாந்து விட்டோம். எனவே இதற்கு சர்வதேச விசாரணை ஒன்றே சரியான தீர்வு ஆகும். அதிலும் பாதிக்கப்பட்ட இடத்தில் தான் விசாரணைக்குழு அமைக்க வேண்டும்.

மேலும் விடுதலைப் புலிகளின் தளபதிகள் மற்றும் உறுப்பினர்களை புனர்வாழ்வுக்கு பின் விடுதலை செய்வதற்கு முதல் நாட்களில் சர்வதேச மருத்துவர்களால் அவர்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட வேண்டும். அவர்களுக்கு எந்த விதமான நோய்களும் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

ஏனெனில் விடுதலையாகிய முன்னாள் போராளிகள் 103 பேர் சந்தேகத்துக்கிடமான நோயினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர். அரசாங்கம் அதை மூடி மறைக்கிறது. எனவே இலங்கை மருத்துவர்கள் முன்னாள் போராளிகளை பரிசோதிப்பதை விடுத்து சர்வதேச மருத்துவர்கள் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும்.

எமது உறவுகளுக்கும் இவ்வாறான நிலை ஏற்பட்டு விடுமோ என்ற பயத்தில் எமது வாழ்நாளை கழிக்கிறோம். எமது கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து நீதியான செயற்பாட்டை மேற்கொள்ள சர்வதேசம் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## மருத்துவர்களின் பணி...

இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடாந்தும் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ். சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தின் அடிப்படையில் தாதியர்கள் மற்றும் மருத்துவர்கள் பணிப்பகிஷ்கரிப்பனை மேற்கொண்டிருந்தனர். குறிப்பாக நேற்றையதினம் மருத்துவர்கள் மேற்கொண்ட புறக்கணிப்பினால் நோயாளர்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியிருந்தனர்.

இது தொடர்பாக பணிப்பாளரிடம் ஊடகங்கள் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில தினங்களாக வைத்தியசாலையில் நடைபெற்ற அசம்பாவித சூழ்நிலை இன்றுடன் (நேற்று) முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி இன்றையதினம் (நேற்று) வைத்தியர்கள் சங்கம் மாலை 4 மணியுடன தமது தொழிற்சங்க நடவடிக்கையினை கைவிடுவதாக எனக்கு அறியத்தந்துள்ளார்கள்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வைத்தியசாலையில் ஒருபிரிவில் நடைபெற்ற சம்பவத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட தாதிய உத்தியோகத்தர் மற்றும் வைத்தியர்களுக்கு இடையே நடைபெற்ற சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொண்டிருந்தோம். அந்த விசாரணையின் அடிப்படையில சில தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

ஆனால் சில தினங்களுக்கு முன்னர் தாதியர்கள் பகிஷ்கரிப்பினை மேற்கொண்டிருந்தனர் பின்னர் மருத்துவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தனர்.

தற்போது எமது நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறு முடிவுகளை எடுத்ததன் காரணமாக அவர்களின் போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இருப்பினும் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைக்காக சுகாதார அமைச்சுக்கு அறிவித்துள்ளோம். எமது விசாரணைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு போதியளவு திருப்தி இல்லாமல் இருக்கலாம் எனவே மேலதிக விசாரணை தேவைப்படும் இடத்து பூரணமாக விசாரணை செய்ய சுகாதார அமைச்சுக்கு தெரிவித்துள்ளோம்.

இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் என்ற ரீதியில் நான் கூறுவது எதிர்காலத்தில் இவ்வாறான எந்தவிதமான தொழிற்சங்க நடவடிக்கைகளும் ஏற்படாத வகையில் பல நடவ்டிக்கைகளை எடுக்கவிருக்கிறோம்.

குறிப்பாக இது ஒரு போதனா வைத்தியசாலை ஏனைய வைத்தியசாலைகளில் இருந்தும் பல பகுதிகளிலும் இருந்தும் இங்கு பொது மக்கள் பலர் மருத்துவ சிகிச்சைக்காக நம்பிவருகின்றனர்.

இங்கு அசாதாரண சூழ்நிலை உருவாகினால் பொதுமக்கள் மத்தியில் பதட்டமான சூழ்நிலை ஏற்படுவதை நாம் உணருகிறோம். எனவே எதிர்காலத்தில் இவ்வாறு ஏற்படாமல் சகல விதமான நிர்வாக நடவடிக்கைகளும் உடனுக்குடன் சீர் செய்யப்படும்.

பொதுமக்களுக்கு இக்காலப் பகுதியில் அசௌகரியம் ஏற்பட்டிருக்கும் இதற்கு பணிப்பாளர் என்ற ரீதியில் எனது மன வருத்தத்தை தெரிவிக்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# வடக்கில் இணைந்த நேர அட்டவணை இரண்டு வாரங்களில் அமுலாகும்

## போக்குவரத்து அமைச்சர் டெனீஸ்வரன் உறுதியளிப்பு

வட மாகாணத்தில் இணைந்த நேர அட்டவணை இரண்டு வாரங்களில் அமுல்படுத்தப்படும் என வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் உறுதியளித்துள்ளார்.

தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றியத்திற்கும், இலங்கை போக்குவரத்து சபைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட 60:40 எனும் நேர அட்டவணை உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் பொதுவான பஸ் நிலைய தரிப்பிடத்தில் இருந்து சேவையை வழங்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன் வைத்து வட மாகாண தனியார் பஸ் உரிமையாளர்களினால் நேற்றைய தினம் மாகாணம் தழுவிய பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில் வட மாகாண போக்குவரத்து அமைச்சருக்கும் வட மாகாண ஆளுநருக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே போக்குவரத்து அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தனியார் பேருந்து உரிமையாளர்களின் கோரிக்கை நியாயமானது. நியதிச் சட்டத்தினை ஆளுநர் இரண்டு வாரத்திற்குள் அனுமதித்து தருவதாக கூறியுள்ளார். அவ்வாறு அனுமதித்து தரும் பட்சத்தில் தங்களது இணைந்த நேர அட்டவணை அமுலாக்க கோரிக்கையானது மிக விரைவாக அமுல்படுத்தப்படும்

அத்துடன் ஆளுநர் குறித்த நியதிச் சட்டத்தை இரண்டு வாரத்தினுள் அனுமதித்து தருவதாகவும் தம்மாலான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்குவதாக கூறியதோடு தனியார் பேருந்து உரிமையாளர்கள் பயணிகளுக்கு பற்றுசீட்டு வழங்குதல், சாரதி மற்றும் நடத்துனருக்கான சீருடை மற்றும் வீதி ஒழுங்குகளை கடைபிடித்தல் போன்ற விடயங்களில் அதிகூடிய அக்கறை செலுத்துமாறும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் இப்பிரச்சினையானது வடமாகாணத்தில் மட்டுமல்ல, இலங்கையின் எல்லா பாகங்களிலும் காணப்படுவதாகவும் இதனை சீர்செய்வது பலத்த சவாலுக்கு உட்பட்டதெனவும் தெரிவித்திருந்தார்.

ஆகவே ஒழுங்கு விதிகளை மீறுபவர்கள் எவராயினும் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதுடன் அதற்கான நேரம தற்பொழுது கை கூடியுள்ளது என மேலும் தெரிவித்தார். (செ-7-9)

# 'தமிழ் கைதி...

தற்கொலை குண்டுத் தாக்குதலை நடத்த உதவியதாக நான்கு தமிழ் கைதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள வழக்குக்கு நேற்று அழைக்கப்பட்ட போது, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ சாட்சியமளித்தார்.

அதன் பின்னர் ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில்ளித்த கோத்தபாய ராஜபக்ஷ, தன் மீது குண்டு தாக்குதலை மேற்கொள்ள உதவியதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள தமிழ் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கும் நோக்கம் தனக்கு இல்லை என்று தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் விசாரணையொன்று நடத்தப்பட்டு வருவதாக கூறிய அவர், பொது மன்னிப்பு வழங்குவது குறித்து அர்சாங்கமே தீர்மானம் எடுக்க வேண்டுமென்று அறிவித்தார்.

மேலும், கருத்துக்களை தெரிவித்த கோத்தபாய ராஜபக்ஷ தனக்கு வழங்கப்பட்டுள்ள ராணுவ பாதுகாப்பை நீக்குவதற்கு அர்சாங்கம் தயாராகி வருவதாக குற்றம் சாட்டினார்.

இதனால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக தெரிவித்த அவர், எனவே இந்த தீர்மானத்தை மீண்டும் பரிசீலனை செய்யுமாறு தற்போதைய பாதுகாப்பு செய்லாளரிடம் வேண்டுகோள் விடுத்தார். (செ-11)

# 7 இலட்சம்...

திருமணம் இடம்பெற்றுள்ளது. இந்த நிலையில் அன்று இரவு வீட்டில் இருந்தவர்கள் சம்பிரதாயங்களின்படி மணமகன் வீட்டிற்கு சென்றுள்ளனர். இந்த நிலையில் வீட்டில் ஒரு சிலரே தங்கியிருந்தனர்.

இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திய கொள்ளையர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த வீட்டினுள் நுழைந்து கொள்ளையிட்டுள்ளனர்.

இதன்போது வீட்டில் இருந்த 35 பவுண் நகை, 7லட்சம் ரூபாய் பணம் மற்றும் திருமண வீட்டிற்கு வந்தவர்கள் மணமக்களுக்கு வழங்கிய அன்பளிப்பு பணம் என்பவற்றை கொள்ளையர்கள் கொள்ளையிட்டு சென்றுள்ளனர்.

இதன் பின்னரே வீட்டில் இருந்தவர்கள் கொள்ளையர்கள் உள்நுழைந்துள்ளனர் என கண்டறிந்து பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)


நீங்கள் தொழில் தேடுபவரா?
5 நட்சத்திர ஹொட்டேல்களில்
கவர்ச்சிகரமான சம்பளத்துடனான
வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன் கூடிய

O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE - DIPLOMA - DEGREE
Up to 30% Discount
With FREE English Course

3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.

புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
077 3616 798
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)


# நிதி மோசடிக்...

நிதி மோசடிக்கு குற்றச்சாட்டில் நேற்றையதினம் கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் டி வாஸ் குணவர்தன எதிர்வரும் ஜுலை மாதம் 05 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்று பகல் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கொழும்பு நீதவான் கிஹான் பிலபிட்டிய முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்தே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நிதித்துய்தாக்கல் சட்டத்தின் பிரகாரம் தவறிழைத்துள்ளார் என்பதே சஜின் டி வாஸ் குணவர்தனவுக்கு எதிரான குற்றச்சாட்டாகும்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது அவர் அளித்த சாட்சியங்களிலும், அவரது வங்கிக் கணக்குகளைப் பரிசோதித்த போது கிடைத்த தரவுகளிலும் முரண்பாடுகள் காணப்பட்டதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதவானிடம் தெரிவித்திருந்தனர்.

சஜின் டி வாஸ் குணவர்தனவின் வங்கிக் கணக்குகளில் 61 கோடி ரூபாய் பணம் வைப்பிலுள்ளதாகவும் அவை எவ்வாறு அவருக்கு கிடைத்தது என்பது தொடர்பில் முறையான விளக்கமளிப்பதற்கு அவர் தவறியதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதவானிடம் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளுக்கு அவர் ஒத்துழைப்பு வழங்குவதில்லை எனவும் நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இதேவேளை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரிடம் பல தடவைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலங்களைப் பதிவு செய்ததாகவும் அதன்போது தேவைப்படும் ஆவணங்கள் முறையாக சமர்ப்பிக்கப்பட்டதாகவும் பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தெரிவித்திருந்தனர் .

அதனடிப்படையில் அவர் தொடர்பில் போலியான தகவல்களை பெற்றுக் கொள்ளும் வரை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரை சிறை பிடிப்பதே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரின் நோக்கமென இதன் போது அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கூறியுள்ளனர். (செ-11)

# தனியார் பஸ்...

வட மாகாண தனியார் பஸ் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட மாகாணம் தழுவிய பணிப்பகிஷ்கரிப்பு வட மாகாண போக்குவரத்து அமைச்சரின் உறுதிமொழியை அடுத்து நேற்றையதினம் மாலை கைவிடப்பட்டுள்ளது. எனவே இன்றையதினம் வழமை போல் பேருந்து சேவைகள் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாண தனியார் பஸ் உரிமையாளர்களினால் தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றியத்திற்கும், இலங்கை போக்குவரத்து சபைக்கும் இடையில் கையெழுத்திடப்பட்ட 60:40 எனும் நேரஅட்டவணை உடனடியாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் பொது வான பஸ் நிலைய தரிப்பிடத்தில் இருந்து சேவையை வழங்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து நேற்றைய தினம் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருந்தனர்.

இவர்கள் நேற்றையதினம் பிற்பகல் ஒரு மணியளவில் ஊர்வலமாக சென்று வட மாகாண ஆளுநர் மற்றும் யாழ் அரச அதிபரிடம் மகஜரும் கையளித்தனர்.

இதனால் காலை தொடக்கம் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர். குறிப்பாக அலுவலகங்களில் பணிபுரிவோர், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், நோயாளர்கள் உட்படபலர் வீதிகளில் நீண்ட நேரமாக காத்துக் கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

இந்தநிலையில் வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கும் ஆளுநருக்கும் இடையே நடைபெற்ற விசேடகலந்துரையாடலில சுமுகமான முடிவு எடுக்கப்பட்டு பின்னர் அமைச்சர் ஆர்ப்பாட்டக்காரரை சந்தித்தார்.

இதன் போது போராட்டத்தை கைவிடுமாறு கோரியதுடன் நியதிச் சட்டத்தினை ஆளுநர் அவர்கள் இரண்டு வாரத்திற்குள் அனுமதித்து தருவதாகவும்.அவ்வாறு அனுமதித்து தரும் பட்சத்தில் தங்களது இணைந்த நேர அட்டவணை அமுலாக்க கோரிக்கையானது மிக விரைவாக அமுல்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்ததை அடுத்து போராட்டத்தை கைவிட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். (செ-7-9)


FALC FRENCH LANGUAGE CENTRE
"FOR THE BEST FRENCH FOREVER"
FRENCH CLASSES
பிரான்ஸ், கனடா, சுவிஸ், பெல்ஜியம் செல்வோர்க்கான
Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007)
(C-5020)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1110 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
No. 40, பலாலி வீதி, இலுப்பையடி.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 02.07.16 சனி 10 am.
பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 04.07.16 Mon@ 4 pm.
ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → அப்பலோ Hospital → FLC


# யாழில் நேற்று...

மல் ஆக்கப்பட்டவர்களுக்கு உரிய பொறுப்புக்கூறலை வழங்கக்கோரியும், இராணுவம் வசமுள்ள தமிழ் மக்களுடைய காணிகளை விடுவிக்ககோரியும் நேற்றையதினம் யாழில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜெனிவா மனிதவுரிமை கூட்டத் தொடரில இலங்கை தொடர்பான வாய்மொழி மூல அறிக்கை நாளை புதன்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமை ஆணையாளர் சமர்ப்பிக்கவுள்ள நிலையிலேயே ,இரு வெவ்வேறு பிரிவினரால் மேற்படி போராட்டம் நடைபெற்றுள்ளது.

நேற்றையதினம் காலை 9 மணியளவில நல்லூர் கந்தசுவாமி ஆலயமுன்றலில் ஆரம்பமாகிய இப்போராட்டம் யாழ் கோவில் வீதியில் அமைந்துள்ள யூ.என்.எச்.சி.ஆர் அலுவலகம் வரை ஊர்வலமாக சென்று மகஜரும் கையளித்திருந்தனர்.

இப்போராட்டத்தின் போது கூடியிருந்த பொதுமக்கள் அனைவரும் இலங்கை மீது சர்வதேச விசாரணையே வேண்டும். நல்லாட்சி என்பது பொய் வேடம், சர்வதேசமே இலங்கை அரசை நம்பவேண்டாம், இலங்கை அரசு ஏமாற்று அரசு,சர்வதேச நாடகத்திற்கே சிறிய காணிகள் விடுவிக்கப்படுகின்றன, இராணுவம் வெளியேற வேண்டும், எங்கள் காணிகளில் இராணுவம் இருக்க நாங்கள் வீதிகளில் இருக்கின்றோம், எங்கள் பிள்ளைகள் எங்கே? கடத்தப்பட்டவர்களுக்கு பதில் கூறு.

இனியும் நாம் பொறுமை காக்கமாட்டோம், நீகுடியேற்றா விட்டால் நாங்களாக குடியேறுவோம், எங்கள் கடல் எங்கள் வளத்தை இராணுவம் அனுபவிப்பதா? தமிழர்கள் அடிமைகளா? அரசே பதில்கூறு, மயிலிட்டி எமக்கு வேண்டும், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களே அரசிற்கு எச்சரியுங்கள். பதவியை வீசிஎறிவோம், எங்கள் மூன்றாம் தலைமுறையும் முகாமில் தான் வாழவேண்டுமா? என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தபோராட்டத்தில் ஆயிரக்கணக்கான மகள் கலந்துகொண்டிருந்ததோடு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு,ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, உட்பட பல கட்சிகளும், பொது அமைப்புக்களும் கலந்து கொண்டிருந்தன.

காணிவிடுவிப்பு தொடர்பான போராட்டத்தில் சிறுமாற்றம் செய்யப்பட்டு ஊர்வல மாக சென்ற மக்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் மகஜர் கையளித்திருந்தனர். ஊர்வலமாக மக்கள் வீதிகளில் சென்ற காரணத்தால் கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததோடு இதனால் பெரும் பதற்றமும் ஏற்பட்டிருந்தது.

மேலும் ஏமாற்று அரசினையும் அரசியலவாதிகளது வாக்குறுதிகளையும் இனிநம்ப போவதில்லை என தெரிவித்துள்ள் ஆர்ப்பாட்டக்காரர்கள் எம்முடைய போராட்டத்தின் மூலம் எமதுகாணிகளில் நாம் குடியேறுவோம் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாக தெரிவித்துள்ளதுடன் அதுவரை தொடர்ந்து போராடுவோம் என உறுதியுடன் தெரிவித்து அங்கிருந்து கலைந்து சென்றனர். (செ-4,9)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



2016 ம் ஆண்டிற்கான விண்ணப்பம் கோரல்

ACCA (Association of Chartered Certified Accountants)
(சான்றிதழ் அளிக்கப்பட்ட பட்டயக் கணக்காளர் சம்மேளனத்தின் பரீட்சை)
இக் கற்கை நெறி மூன்று நிலைகளை கொண்டது

A/L பூர்த்தி செய்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் இக்கற்கை நெறியினை தொடர முடியும்

A C C A
DEGREE
DIPLOMA

ACCA - 03 கட்டாய பாடங்களையும் 02 தெரிவுப் பாடங்களையும் கொண்டது (12 மாத காலம்)
Degree Level – 06 பாடங்களை கொண்டது (12 மாத காலம்)
Diploma Level – 03 பாடங்களை கொண்டது (06 மாத காலம்)

விண்ணப்ப முடிவுத்திகதி - 2nd July 2016
மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பவர்களுக்கு ரூ 40,000
(Registration & Subscription Fee)
வரையிலான கட்டண சலுகை வழங்கப்படும்.

AAT, மாணவர்களுக்கு பாட விலக்களிப்பு மற்றும் அதற்குரிய கட்டணச் சலுகையும் வழங்கப்படும்.

149 2/1 K.K.S Road,
Jaffna.
077372 2104

K-AIMS BUSINESS SCHOOL
(சி-5035)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.